# மனக் கோயில்



பாலகுமாரன்

# மனக்கோயில்

## 1

கதிரவனின் முதல் ஒளிக்கற்றை கிழக்கு வானத்தைத் தொட்டபோது, சேர தேசத்திலிருந்து வரும் மேற்கத்திக் காற்று, காஞ்சி மாநகருக்குள் வேகமாய் புகுந்தது. உயர்ந்த மரங்கள் பெரிதாய் ஆடின. அயர்ந்து படுத்திருந்த கறவைகள் எழுந்து நின்றன. அசையாது நின்ற குதிரைகள் கால் மாற்றித் தவித்தன.

பறவைகள் பெரும் சப்தத்தோடு மரம் விட்டுக்கிளம்பி, 'யாரது, எங்கே, என்னவாயிற்று, நிறுத்து நிறுத்து' என்பது போன்ற ஒலிகளை எழுப்பி, அது காற்று என்று தெரிந்து மறுபடியும் மரக்கிளையில் அமர்ந்தன.

குயில் ஒன்று அலகு நுனியில் குளுமையை உணர்ந்து, மரத்தின் உச்சாணிக் கிளைக்குப் போய், மெல்ல கூவத் தொடங்கியது.

தூங்குகின்ற சிறு பையனை, தாயார் இதமாக எழுப்புவது போல, தன் கூவுதலால் பிரியத்துடன் எழுப்பிக் கொண்டிருந்தது.

நேற்று மாலையே பார்த்து வைத்திருந்த பசும்புற்களை ஆநிரைகள் முகர்ந்து பார்த்து, பசியோடு உண்ணத் துவங்கின.

கறவைகள் பசி தாங்காதவை. ஆர்வம் மிக்க மாணவன் வேதம் கேட்பது போல, அவைகளின் உணவு உண்ணுதல் இருந்தது.

குயில்கள் எழுப்பியதால், மைனாக்களும், பச்சைக் கிளிகளும் விழிக்கத் துவங்கின.

வெளிச்சம் சற்று அதிகமாயிற்று. இலைகளின் முன்புறத்திற்கும், பின்புறத்திற்கும் வித்தியாசம் தெரிந்தது. ஒரு பன்னீர் மரம் நிறைய, சிட்டுக்குருவிகள் இடம் மாறி அமர்ந்து பேசத் துவங்கின.

ஒரு கடிகையிலுள்ள மாணவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து, கடவுள் உண்டா, இல்லையா என்று ஒரே முற்றத்தில் வாதம் செய்வது போல, அந்த குருவிகள் சப்தம் செய்தன.

ஆனால், கிளிகள் வேறு விதம்.

'அடேய், விடிந்து விட்டதா பார்.'

நீயும்தான் பார்க்கிறாயே இன்னும் விடியவில்லை.

விடிந்துவிடும், அப்பா பேசாதீர்கள்.

விடியாமல் போனால்தான் என்ன? விடிவதும் விடியாததும் நம் கையிலா இருக்கிறது.

பேசாதே விடியும் வரை காத்திரு.

பேசாதே பேசாதே என்றே பேசிக்கொண்டிருங்கள்.

மாற்றி மாற்றி கிளிகள் ஒன்றையொன்று அதட்டிக் கொண்டிருந்தன.

கொக்கு இனத்தைச் சேர்ந்த நொள்ளை மடையான்கள் கழுத்தை நீட்டிப் பார்த்துவிட்டு குலுக்கிக் கொண்டன.



'சூரிய தேவன் வருகிறார் பராக்' என்பதுபோல் ஒற்றை சப்தம் எழுப்பின. உடம்பிலூறும் பூச்சிகளை விரட்ட, 'படபடவென்று' சிறகுகளை அடித்துக் கொண்டன.

அது கோவிலில் சிறு முரசு கொட்டுவது போல ஒலித்தது.

ஆந்தைகள் அந்த இருட்டில் ஒருமுறை பறந்துவிட்டு, தன் பொந்துகளில் போய் உட்கார்ந்து கொண்டன. இமைக்காத விழிகளுடன் திராவிட தேசத்து அந்தணர் போல பழுப்பு நிறத்துடன், 'ஸோஹம்' என்று கத்தின. அது மிகப்பெரிய அத்வைத வார்த்தை. 'நானே அது என்கிற அர்த்தம் கொடுக்கும் வார்த்தை. நானே அது, அதுவே நான். நானே அது, அதுவே நான். நானே அது, அதுவே நான்' என்று வெவ்வேறு திக்கிலிருந்து ஆந்தைகள் மாறி மாறிக் கூவின.

வடக்கே வெகு தொலைவிலிருந்து வரும் ஒரு வாளை மீனை முழுதாய் விழுங்கும் வாய் அகன்ற பறவை, துணிந்து பிரமாண்டமாய் எழுந்து வானத்தில் வட்டமடித்துவிட்டு, புல் மலிந்த சேற்றில் இறங்கியது. அலகால் உழுது, இரை தேடியது.

அந்த நீர்ப்பறவையைத் தொடர்ந்து, வலியன்கள் பறக்க ஆரம்பித்தன. தரையில் மோதுவது போல் இறங்கி, சட்டென்று எழும்பி சாகசங்கள் செய்தன.

இன்னும் வெளிச்சம் அதிகமாயிற்று. காற்று இன்னும் வேகமாயிற்று. தொலைவே பெய்யும் மழையால் காற்றில் இன்னும் குளுமை ஏறியிருந்தது.

அந்தக் குளுமை ஒரு குடிசையின் வாசலில் படுத்திருந்த மூன்று இளைஞர்களையும் உலுக்கி எழுப்பியது. அந்தக் குளிருக்கு அவர்கள் மேலாடை போதவில்லை. எனவே, அவர்கள் உதறி எழுந்திருக்க வேண்டியதாயிற்று.

வெப்பம் அதிகமிருந்தாலும் தூங்க முடியாது. குளிர் அதிகமிருந்தாலும் உறங்க முடியாது. இன்னும் ஒரு நாழிகை தூங்க வேண்டிய அலுப்பு உடம்பில் இருந்தாலும், அந்த இளைஞர்கள் எழுந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

சதாசிவநம்பி என்கிற அந்தண இளைஞன் தன் கைகளை பரபரவென்று தேய்த்து, ரேகைகளை உற்றுப் பார்த்து, ஓம் என்று குரல் கொடுத்து, அந்த ஒலியை உள்ளங்கையில் வாங்கி, உள்ளங்கையில் முகத்தைத் துடைத்துக் கொண்டான். வானம் பார்த்து, தலைக்குமேல் கைகூப்பி, ஆழ்ந்த நிலத்தை வணங்கினான்.

எதிர்பக்க திண்ணையில் படுத்திருந்த குணசேகரன் கண் மூடி நகர்ந்து திண்ணையை விட்டு இறங்கி நின்றான். அவன் வணிக குலத்தவன். குனிந்து பூமியைத் தொட்டு மண் எடுத்து நெற்றியில் இட்டுக்கொண்டான். ''நமசிவாயம்' நமசிவாயம்' என்று உரத்து கூவினான். குதிரையின் முகத்தில் விழித்தான்.

இந்த சப்தம் கேட்டு, கந்தசேனன் மனம் விழித்துக் கொண்டது. மனம் விழித்தாலும் அவன் கண்களைத் திறக்கவில்லை. அவனுக்கு மட்டும் கட்டில் தரப்பட்டிருந்தது. அந்தக்கட்டிலில் அவனுக்கு அருகே நீண்ட உடைவாள் இருந்தது. உடைவாளை பற்றி, எழுந்து உட்கார்ந்தான். அவன் அரச குலத்தினன். உடைவாளை கண்களில் ஒற்றிக் கொண்டான்.

'மகா காளி, துர்கா தேவி, நமோ நமஹ' என்று சப்தமிட்டான்.

வெளிச்சம் இன்னும் அதிகமாயிற்று. அந்த இளைஞர்கள் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள். தனித்தனியே பிரிந்து போனார்கள். புதர்கள் மறைவில் குத்திட்டு அமர்ந்தார்கள்.



வீட்டைச்சுற்றி கொல்லைப்புறம் போனார்கள். அங்கு கிணற்றுக்குப் பக்கத்திலிருந்த நீர் தொட்டியிலிருந்து நீரெடுத்து கால் கழுவினார்கள். ஒடித்து வைக்கப்பட்டிருந்த வேப்பங்குச்சிகளால் பல் துலக்கினார்கள்.

வீட்டின் பின் கதவு திறந்தது. கட்டுமஸ்தாய் ஒரு யாதவ இளைஞன் வெளியே வந்தான். அருகே போய் அரசகுலத்து இளைஞனின் காலைத் தொட முயன்றான்.

கந்தசேனன் சட்டென்று முன்னேறி, அவனை அவ்விதம் செய்வதிலிருந்து தடுத்து நிறுத்தினான்.

''இரவு நன்கு தூங்கினீர்களா இளவரசே.''

''அற்புதமாகத் தூங்கினேன்.''

''ஏன் சீக்கிரம் எழுந்துவிட்டீர்கள்?''

''குளிர்காற்று எழுப்பிவிட்டது.''

''அதனால்தான் நேற்றிரவே நான் உங்களுக்கு போர்வை கொடுத்தேன். நீங்கள் வேண்டாமென்று மறுத்துவிட்டீர்கள்.''

''மறுத்தது நல்லதாய் போயிற்று. இல்லையெனில் விடிந்து பல நாழிகை போர்வைக்குள் சுருண்டு தூங்கி இருப்பேன். இப்போது பார், பல் தேய்த்துக் கொப்பளித்தவுடன் பயணப்பட்டு விடலாம்.''

''பயணப்படுவதா. உங்களுக்காக சோறு கொதித்துக் கொண்டிருக்கிறது. உங்களுக்காக என் மனைவி இரவெல்லாம் தூங்காமல் காய்கறிகள் திருத்தி, பருப்புகள் சுத்தம் செய்து, பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்கிறாள். நீங்கள் சட்டென்று விடை பெற்றால், நாங்களெல்லாம் வருத்தப்படுவோம்.''

''இது என்ன முட்டாள்தனம் கேசவா? படுத்து உறங்க திண்ணையில் இடம் கேட்டால், இப்படி விருந்து

செய்து வழி மறிக்கிறாய். இன்று இரவுக்குள் நாங்கள் காஞ்சிக்கு போகவேண்டும்.''

''இன்னும் ஒரு நாழிகையில் உணவு தயாராகி விடும். உண்டுவிட்டுப் போகலாம். ஐயனுக்குத்தான் என்ன தருவது என்று தெரியவில்லை. அரிசியும், பருப்பும், திருத்திய காய்கறிகளும், புதுப்பானையும், வலதுபக்க இடைகழியில் தயாராக இருக்கின்றன. நீர் நிரப்பிய தாமிர பாத்திரம் வைத்திருக்கிறேன். ஐயன் சதாசிவ நம்பி சுயம்பாகம் செய்து கொள்ளலாம்.''

''காராம் பசு தவிக்க ஆரம்பித்துவிட்டது. பால் கறந்து, காய்ச்சி, பனங்கற்கண்டு போட்டுக்கொண்டு வருகிறேன். ஆளுக்கொரு சொம்பு குடித்துவிட்டு, ஏரிக்கரை வரை போய் வாருங்கள், கோயில் குளத்தில் நீராடி வாருங்கள். உணவு தயாராக இருக்கும்.

சதாசிவ ஐயருக்கு சுயம்பாகம் முக்கியமில்லை என்றால், கோயில் குருக்கள் வீட்டில் பாகம் செய்து கொடுத்து விடுவார்கள்.''

''சதாசிவம் அப்படியொன்றும் ஆச்சாரம் பார்க்கிறவனல்ல. மச்ச, மாமிசம் இல்லாத உணவு எவர் போட்டாலும் சாப்பிடுகிறான். எனவே, உன் வீட்டுப் பக்குவத்தை, அவன் மறுக்கப் போவதில்லை. என்ன சதாசிவா?''

''கேசவனைப் பார்த்தால் கோகுலத்தில் வாழ்ந்த பலராமனைப்போல் இருக்கிறான். பலராமர் உணவை நான் எப்படி மறக்க முடியும்? இவர்களுக்குப் போடும் உணவையே எனக்குப் போடு. ஒரு வேளை இவர்கள் மாமிசம் வேண்டுமென்றால்...''

''வேண்டாம். எங்களுக்கு மாமிசம் வேண்டாம்.'' அவர்கள் சதாசிவ ஐயனுக்காய் மறுக்க.



''அப்படியானால் ஒரு நாழிகையில் உணவு தயாராகிவிடும், தயவு செய்து பசும்பால் குடித்துவிட்டு ஏரிகரைக்குப் போகலாம்.''

பெரிய தவலை நிறைய பால் கறந்து கொண்டு கேசவன் வீட்டிற்குள் ஓடினான்.

அழுத்தி, அழுத்தி, விரல் நீள வேப்பங்குச்சியை கடித்துக் கடித்து, சாறு விழுங்கி, ஈறு முழுவதும் தேய்த்த பிறகு, பசும்பால் மணம் கும்மென்று எழுந்தது.

கொல்லைப்புறத்து கிணற்று மேடையில் உட்கார்ந்தபடி பனங்கற்கண்டு போட்ட பசும்பால் குடித்தார்கள். குடியிருப்புகளைத் தாண்டி, கோவில் தாண்டி வயல் வெளிகள் தாண்டி ஏரிக்கரைக்குப் போனார்கள்.

கந்தசேனன் சட்டென்று நின்றான்.

''அட. ஏன் காலையில் இப்படி குளிர்காற்று அடித்தது என்று இப்பொதுதான் தெரிந்தது. தென்மேற்கிலிருந்து வரும் காற்று இந்த இடத்தில் திசை மாறுவதைப் பாருங்கள். வடக்கு நோக்கி நகர வேண்டிய காற்று இந்த இரண்டு மலைகளுக்கு நடுவே வந்து, இந்த சிறிய குன்றால் தடுக்கப்பட்டு முழு வேகத்தில் ஊர் நோக்கித் திரும்பி விடப்படுகிறது.

காற்று திசைமாற்றி திரும்பிவிடப்பட்ட போது, அதன் வேகம் அதிகமாகின்றது. அதனால்தான் பல்லவபுரம் பிற்பகல் வரை குளுமையாக இருக்கிறது.''

''ஆமாம் கந்தசேனா.'' சதாசிவ நம்பியும் சுற்றிப் பார்த்தான்.

''அரணாக மூன்று மலைகள் சுற்றிலும் நீர் நிலைகள். நன்செயும், புன்செயும் கலந்த இடம் ஊர் மேடாக இருந்தாலும், நிலம் வளமாக இருக்கிறது. பல்லவபுரம் ஒரு அற்புதமான ஊர். இது பல்லவர்கள் கட்டிய ஊரா என்று

தெரியவில்லை. ஆனால் சிம்ம விஷ்ணு காலத்திலேயே ஏற்பட்ட ஊர் என்று சொல்கிறார்கள்.''

''இந்த ஊர் பலமாகிவிட்டது பெரிய படையெடுப்புகள் இல்லை. கொள்ளை நோய்கள் ஏதுமில்லை. சிம்ம விஷ்ணு பல்லவரால் ஏற்பட்ட ஊர்தான். அதனால் தான் பல்லவபுரம் என்று பெயர் வந்திருக்கிறது. இந்த இடத்தில் ஊர் ஏற்படுத்தலாம் என்று சொன்னவன் அதிபுத்திசாலி. காற்று மலையில் மோதி, ஏரியைத்தாண்டி, ஊருக்குள் வருகிறது. அதனால்தான் பிற்பகல் வரை ஊர் 'குளுகுளு' என்றிருக்கிறது. கொத்துக்கொத்தாய் செண்பகம் பூக்கிறது கொடி சம்பங்கி வளர்கிறது. குளுமை இல்லாவிட்டால், இந்தப் பூக்கள் வளராது.''

''இத்தனை வளமிருந்தும் காஞ்சீபுரம் போல் கூட்டம் இல்லையே ஏன்?''

''கடவுளே, எதற்கு இந்த ஊரில் கூட்டம் வேண்டும். கந்தசேனா இது இப்படியே இருந்துவிட்டு போகட்டும்.''

''இல்லை. அருகே மயிலையும், திருவல்லிக்கேணியும் இருப்பதால், இங்கெல்லாம், கூட்டம் வராது. மயிலை வணிகர் வசிக்கும் பகுதி. திருவல்லிக்கேணி அந்தணர் கோட்டை. இது வேளாளர்கள் இடம்.''

விடியல் நேரம் செண்பகப் பூக்கள் பறித்து, மல்லிகைகளைக் குடலைகளில் ஏந்தி, கீரையும், முருங்கையையும் பறித்து கட்டாகக்கட்டி, மேலும் சில காய்கறிகளோடு வில்வண்டி எடுத்தால், உச்சி வேளைக்கு மயிலை போய் சேர்ந்துவிடலாம்.

மயிலாபுரி தாசிகள் நிறைந்த இடம். வாசனைப் பூக்கள் நல்ல விலைக்குப் போய்விடும். கீரையும், முருங்கையும் வணிகர்கள் விரும்பி வாங்குவார்கள்.



மயிலையிலிருந்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் விதவிதமாய் புடவைகள் வாங்கலாம். சமையல் பாத்திரங்கள் வாங்கலாம். கடற்கரைப் பட்டினம் என்பதால் நல்ல ஜாதி யவன குதிரைகள் வாங்கலாம். கீழைச் சாளுக்கிய தேசத்திலிருந்து ஓட்டிவரப்பட்ட எருதுகள் எருமைகள் வாங்கலாம்.

கேசவன் வீட்டுக் கொட்டிலில் பலதும் சாளுக்கிய பசுக்கள்தான். கவனித்தாயா?''

இளைஞர்கள் சளைக்காது பேசியபடி ஏரிக்கரை நோக்கிப் போனார்கள். சுற்றி எல்லா விஷயங்களையும் கூர்மையாக கவனித்தார்கள்.

மறுபடியும் புதர் மறைவில் அமர்ந்து வயிற்றை லேசாக்கிக் கொண்டார்கள். சூடான பசும்பாலும், பனங்கற்கண்டும் அதற்கு உதவி செய்தன. கை, கால்கழுவி குளம் நோக்கி ஓடினார்கள். தொபீர் என்று விழுந்தார்கள். சுற்றி சுற்றி நீந்தினார்கள். முக்குளித்து அடியிலிருந்து களிமண் எடுத்து வந்து முகத்துக்குப் பூசிக் கொண்டார்கள். களிமண் உலரும் வரை துணி துவைத்தார்கள். பிறகு மறுபடியும் குளித்தார்கள்.

கரையேறிய பின்னர் அருகிலிருக்கிற சிறு குன்றில் ஏறி அந்த குன்றிலிருக்கிற கோயில் லிங்கத்தைவழிபட்டார்கள். திருநீறு எடுத்துக் கொண்டார்கள்.

''கந்தசேனா. இந்த இடத்தில் நிற்கும் போது உனக்கெதாவது தோன்றுகிறதா?'' சதாசிவ நம்பி கேட்டான்.

''நல்ல காற்று நல்ல சூழல் தெளிந்த நீர். இந்த குன்றின் மீது ஒரு நல்ல மாளிகை கட்டி இந்த பல்லவபுரத்தையே என் தலை நகரமாகச் செய்ய வேண்டுமென்று ஆசையிருக்கிறது.

வடக்கே திருவொற்றியூர் வரை, தெற்கே வல்லம் வரை கிழக்கே கடற்கரை வரை மேற்கே திருநின்றவூர் வரை ஒரு எல்லை வகுத்துக் கொள்ள வேண்டுமென்று ஆசையிருக்கிறது. என்ன எல்லை வகுத்துக் கொண்டாலும் பல்லவருக்கு நான் கப்பம் செலுத்தித்தான் ஆக வேண்டும். வெறும் சிற்றரசனாகத்தான் இருக்கவேண்டும்.'

''அதைவிடு குணசேகரா. உனக்கு என்ன தோன்றுகிறது?''

''இந்த மலை விலையாகும்.''

''என்ன?''

''இந்த மலை சிலையாகும்.''

''புரியவில்லை.''

''இந்த மலையின் மேற்பகுதி சரளைக்கல் ஒரு விரட்கடை நோண்டினால், நல்ல கருநீலக்கல் இருக்கிறது. ஒரு நூறு கல் தச்சர்கள் வைத்து, சிறு சிறு சதுரங்களாக இந்த மலையை வெட்டி, உறுதியான பார வண்டிகளில் ஏற்றி, நீ சொன்ன அதே எல்லையில் விற்றுக் காசாக்கி விடுவேன். இந்தக் கற்கள் வீட்டு அஸ்திவாரத்திற்கு, கோவில் தூண்களுக்கும், கிணற்றுப் படிகளுக்கும் ஆற்றங்கரையில் பாவுவதற்கும் நிச்சயம் உபயோகமாகும்.

யாரேனும் சிற்றரசர் கோட்டை கட்ட ஆரம்பித்தால், இந்தக் குன்றை மூன்று மடங்கு விலைக்கு விற்றுவிடுவேன். ஐந்து வருடத்தில் பெரும் பணக்காரனாகி விடுவேன்.''

''பிறகு செத்துதானே போவாய்?''

''ஆமாம். எல்லோரும் செத்துதான் போகப் போகிறார்கள். அதுதானே உலகத்தின் சிறப்பு.''

''இல்லை மனிதர்கள் சாகாதிருக்க வழி இருக்கிறது.'' சதாசிவ நம்பி கண்சிமிட்டியபடி கூறினான்.



''வேண்டாம் எதாவது பிராணயாமம், மந்திர ஜபம் என்று பொய் சொல்லாதே'' குணசேகரன் லேசாகச் சீறினான்.

''அவை பொய்களல்ல வணிகனே. அவைகளாலும் மரணத்தைத் தடுத்த நிறுத்த முடியாது. ஆனால் தள்ளிப் போட முடியும்.''

''பிறகு என்னதான் சொல்கிறாய் நீ?''

''இந்த இடத்தில் ஒரு கோவில் எழுப்பினால் என்ன? கந்தசேனா, இளவரசனாகிய நீ இப்போதே திட்டமிட்டால் என்ன. இந்தக் குன்றைக் குடைந்து சிவனுக்கும் விஷ்ணுவுக்கும், ஜேஷ்டா தேவிக்கும் அற்புதமான கோயில் கட்டலாமே. ஜேஷ்டா தேவி உன் குலதெய்வம் அல்லவா? சிவனும், விஷ்ணுவும் முழுமுதற் கடவுள்கள் அல்லவா? அப்படியொரு குகைக் கோயில் எழுப்பினால், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் உன் பெயர் சொல்லப்படுமே. உனக்கு மரணமே இருக்காதே.

''மயேந்திரபுரி அரசன் மகன் கந்தசேனன் செய்வித்த கோயில் என்று காலாகாலத்திற்கும் பேசப்படும் நாடு விரிவுபடுத்தி என்ன காணப்போகிறாய்? பல்லவர் ஆட்சியில் உள்ள ஒரு தமிழ் மன்னன் கோயில் கட்டினான் என்று பேசப்படுவாயே.''

''நன்றி நம்பி. நன்றி. இதற்காகத்தான் நான் உன்னோடு சிநேகமானேன், நீ யோசிக்கிற விதமே புதிதாக இருக்கிறது என்பதால்தான். உன்னை என்னோடு இழுத்துக் கொண்டு சுற்றுகிறேன். கோயில் கட்ட வேண்டும் நம்பி. பல்லவர்களைத் தாண்டி நாடு விஸ்தரிக்கவே முடியாது அவர்களிடம் இந்த எல்லைகளை யாசித்துதான் பெற முடியும். அப்படி பிச்சையெடுப்பதற்கு மௌனமாக இருக்கலாம்.''

''ஏன் பிச்சையெடுக்க வேண்டுமென்று சொல்கிறாய் கந்தசேனா? கீழைச் சாளுக்கியரோடு ராஜ சிம்மன் ஒரு போர் துவங்கி, அந்தப் போரில் வெற்றி பெற நீ முழுவதும் உதவி செய்தாயென்றால், நீ கேட்ட நிலத்தை பல்லவமன்னர் உனக்கு தானம் தர மாட்டாரா? நீ கேட்ட வல்லத்தை உனக்கு எழுதி வைக்க மாட்டாரா?

வடக்கே மயிலை திருவல்லிக்கேணி உட்பட்ட எல்லைகளை உனக்கு சாசனம் செய்ய மாட்டாரா? மறுபடி சொல்கிறேன். நீ அரசாளுவாய். கோயில் கட்டுவாய். உன் ஜாதகத்தில் அது இருக்கிறது.'' சதாசிவ நம்பி உரத்த குரலில் பேசினான்.

''நான் ஆயிரக்கணக்கான வருஷங்கள் பேசப்படுவேனா நம்பி?''

''நிச்சயம் பேசப்படுவாய். அதுவும் உன் ஜாதகத்தில் இருக்கிறது.''

''சரி, ஏன் போர் பற்றியே யோசிக்கிறீர்கள்?'' குணசேகரன் உள்ளே புகுந்தான்.

''பல்லவபுரத்திற்குப் போய் இந்த மலையை ஊர் சபையிடம் விலை பேசலாம். இதை உடைத்து, எடுத்துப் போக ஓலை எழுதிக் கொடுங்கள் என்று கேட்கலாம்.''

''விற்க மாட்டார்கள்.''

''ஏன்?''

''இது பல்லவ அரசருடையது. அவருக்குத்தான் விற்கும் உரிமை என்று சொல்லி விடுவார்கள்.''

''உண்மை, அதற்கும் வாய்ப்பிருக்கிறது'' சதாசிவ நம்பி யோசித்தான்.

''இந்த ஊர் சபை அப்படி சொன்னால், இந்த ஊர் சபையிடம் எங்களுக்கு இந்த நிலத்தை சாசனம் செய்து



தருவதில் எந்தவித ஆட்சேபனையுமில்லை என்று எழுதி வாங்கிக் கொள்வோம்.''

''பல்லவ அரசன் ராஜசிம்மன் எதற்கு என்று கேட்டால்?''

''கோயில் கட்ட என்று சொல்வோம்.''

''பல்லவ அரசன் ராஜ சிம்மனைப் பார்க்கவே முடியாது. ஏக கெடுபிடி.''

''அரசனை அரச சபையில் பார்ப்பது முதியோர்களுக்கு சாத்தியம் நாம் அரசனை களத்தில் சந்திக்க வேண்டும், போர் பயிற்சிக் களத்தில் அல்லது நெற்களத்தில் சந்திக்க வேண்டும்.''

''அங்கும் அந்தண அமைச்சர்கள் சூழத்தானே இருக்கிறார்.''

''ராஜ சிம்மன் பல்லக்கில் போவதில்லை. அந்தண அமைச்சர்கள் பல்லக்கில் போகிறார்கள். அரசர் குதிரையில் போகும் போது அருகே நமது குதிரையை செலுத்தி ஓட்டிக்கொள்ள வேண்டியதுதான்.''

''முடியுமா?''

''முயன்றால் முடியும்.''

''நம்மை அரசர் மதிப்பாரா நம்பி?''

''இளைஞர்களை எல்லா அரசர்களும் மதிப்பார்கள். கிழட்டு அமைச்சர்கள்தான் சீறுவார்கள். நாம் எந்த சந்தேகமும் கொள்ளாமல் பல்லவ அரசர் ராஜ சிம்மனை அணுகித்தான் ஆக வேண்டும்.''

''பல்லவ அரசர் ராஜசிம்மன் அனுமதி கொடுத்து விட்டால் என்ன செய்வதாக உத்தேசம் நம்பி?''

''அதை குணசேகரன் தான் சொல்ல வேண்டும்.'' நம்பி கைகாட்டினான்.

நான் சொல்கிறேன் கந்தசேனா. இது சிறிய குன்று இதை கோயில் கட்ட பயன்படுத்த வேண்டாம்.''

''என்ன கதையையே மாற்றுகிறாய்?''

''ஆமாம். இந்த குன்றில் இளவரசர் கந்தசேனன் கோயில் கட்டப் போவதில்லை. மாறாக நான் சொன்ன படி நூறு கல்தச்சர்கள் வைத்து கற்பலகைகளாகவும், படிகளாகவும் செதுக்கி, சிலைகளுக்கான தூண் செவ்வகங்களும் புரட்டி எவ்லா திசைகளுக்கும் அனுப்புவோம் குறிப்பாய் காஞ்சிக்கு அனுப்புவோம்.

காஞ்சியில் கோயில்கள் பல இருந்தாலும் பணம் படைத்த பலர் தொடர்ந்து மண்டபங்களும், கோயில்களும் கட்டிக்கொண்டு தான் இருக்கிறார்கள். நூறு கல்தச்சர்கள் முப்பது பார வண்டி நாம் இங்கே வீடு கட்டி அமர்ந்து ஒரு வருடத்தில் மலையைக் கரைத்துவிடலாம்.

அந்தப் பொற்காசுகளை எடுத்து இன்னும் உயரமான இடத்தில் குகைகோயில் கட்டலாம். இந்தக் குன்றை கோயில் கட்ட தேர்ந்தெடுப்பது கூடாது. இன்றில்லை எனினும் என்றேனும் ஒரு நாள் இந்தக் குன்று தகர்க்கப் படும். இதைவிட உயரமான மலைதான் கோயிலுக்கு நல்லது.

அதுமட்டுமல்ல இங்கு ஏற்கனவே பல்லவபுரம் இருக்கிறது. ஊர் இருக்கும் இடத்தில் கோயில் எதற்கு கட்டுவது?''

''இது என்ன கேள்வி குணசேகரா? ஊர் இல்லாத இடத்திலா கோயில் உண்டாக்குவார்கள்.''

''முதலில் கோயில் கட்டுங்கள். பிறகு அதனைச் சுற்றி ஊர் உண்டாக்குங்கள். அந்த ஊருக்கு கந்தபுரம் என்று பெயரிடுங்கள். கோயில் மட்டுமல்ல. ஊரும் ஆயிரக்



கணக்கான வருஷங்களாய் உன் பெயர் சொல்லிக் கொண்டே இருக்கும்.''

''கடவுளே, எவ்வளவு அருமையான நண்பர்கள் நீங்கள். என்னை உருவாக்க எத்தனை பாடுபடுகிறீர்கள். உன் யோசனைக்கு மிக்க நன்றி குணசேகரா.''

''இளவரசே, குணசேகரன் எங்கேயோ போய்விட்டான். அவன் வணிக மூளை எல்லையற்றது.'' நம்பி பாராட்டிப் பேசினான்.

''எல்லாம் நம்பியின் ஆசீர்வாதம். அவன் சொல்லிக் கொடுத்த நமசிவாய ஜபம். அதனால்தான் என் புத்தி விருத்தியாயிற்று.''

''சரி, மறுபடியும் சரியாகத் திட்டமிடுங்கள். இப்போது என்ன செய்யப் போகிறோம். இந்தக் குன்றை விலைக்கு கேட்கப் போகிறோம். தருகிறேன் என்று சொன்னால், வல்லத்திற்குப் போய் என் தகப்பனாரிடம் இருந்து பொன் வாங்கி கல் தச்சர்களை அழைத்து வந்து, உடைக்கத் துவங்க வேண்டும்.''

''நூறு கல்தச்சர்கள் கிடைப்பார்களா?''

''கிடைப்பார்கள். முப்பது பார வண்டிகள் கிடைப்பதுதான் சிரமம். சில பார வண்டிகளை நாமே உருவாக்க வேண்டும். நல்ல காளைகளும், பலமான ஆட்களும் தேவைப்படும்.''

''என் தந்தை ஆயிரம் பொன் தருவார்.'' இளவரசன் சொன்னான்.

''இது மேலே இருக்கிற மண் வாரக்கூட போதாது. உடனடியாக லட்சம் பொன் தேவை. நான் ஐம்பதாயிரம் பொன் எடுத்து வருகிறேன்.''

''எனக்கு அவ்வளவு வசதி இல்லை; ஆனால் நிர்வாகம் மொத்தமும் நான் பார்த்துக் கொள்கிறேன். நல்ல கணக்கர்களைக் கொண்டு வருகிறேன்.''

''நம்பி, அதோ பார் யாரோ வருகிறார்கள்.'' பேசிக் கொண்டிருந்த நம்பியை இளவரசன் இடை மறித்தான்.

குன்றை நோக்கி வரும் ஒற்றையடிப் பாதையில் உறுதியான தடி ஊன்றி, சாய வேட்டி கட்டி, இடுப்பில் துண்டு கட்டி, தலைப்பாகை அணிந்து, வலக்கையில் ஒற்றைக் கங்கணமும், காதுகளில் வளையமுமாய் செருப்பில்லாத கால்களோடு, உறுதியான உடற்கட்டோடு ஒரு நடுத்தர வயது ஆள் நடந்து வந்து கொண்டிருந்தார்.

''நம்பி, பல்லவபுரத்து ஊர் சபைத் தலைவராக இருக்குமோ?''

''இருக்கும்.''

''எதற்கு நம்மை நோக்கி வருகிறார்?''

''நாம் இருப்பது தெரிந்து வருவதாகத் தெரியவில்லை.''

''பிறகு?''

''ஏதோ மேற்பார்வை இட வருகிறார்'' என்று நினைக்கிறேன்.''

''ஒதுங்க வருகிறாரோ?''

''இங்கு நீர்நிலை இல்லையே'' நம்பி யோசித்தான்.

''வெறுமே காலையில் உலா வருதல் போலிருக்கிறது. அவர் நடை, கந்தசேனா, சட்டென்று பாறையில் அமர்ந்து கொள்'' நம்பி அவசரப் படுத்தினான்.

''எதற்கு?''

''நீ ஒரு இளவரசன். கம்பீரமாக அமர்ந்து கொள்.''



''எதற்கு என்று சொல் நம்பி?''

''அந்த ஊர் தலைவரிடம் இவர் இளவரசர் கந்தசேனன். மாமன்னர் ராஜ சிம்மனின் குதிரைப்படை சேனாதிபதி. இந்தக் குன்றை விலைக்கு வாங்க வந்திருக்கிறார். இந்தக் குன்று என்ன விலை? நான் சதாசிவ நம்பி. மாமன்னரின் ஒற்றர் படையின் முக்கிய தலைவர். அவர் குணசேகரன் பல்லவ மன்னர் ராஜசிம்மனின் அவைக்கள வணிகர் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளலாம்.''

''அடேய் நம்பி. நாம் இளைஞர்கள். அந்த ஊர் சபைத்தலைவர் நம்புவாரா?''

''நம்ப வைப்போம். கீழேச் சாளுக்கிய படையெடுப்புக்குப் பிறகு மன்னர் இளைஞர்களைத்தான் அருகே வைத்துக் கொள்கிறார். உன்னைப் போன்ற முதியவர்களைக் கண்டால் அவருக்குப் பிடிப்பதே இல்லை என்று சொல்வோம்.''

அவர்கள் வாய்விட்டு சிரித்துக் கொண்டார்கள்.

''நாம் இருவரும் பணிவாகப் பேசுவோம். அந்த ஊர் சபைத்தலைவரை இளவரசரை வணங்கு என்று கட்டளையிடுவோம்.''

''வணங்க மறுத்தால்?'' குணசேகரன் கேட்டான்.

''சற்று வன்முறை காட்டுவோம்'' நம்பி உறுதியாகச் சொன்னான்.

இளவரசன் கந்தசேனன் கம்பீரமாக அமர்ந்தான்.

''போதாது இன்னும் கம்பீரமாக இரு.''

கந்தசேனன் முயற்சித்தான்.

''முகத்தை அலட்சியமாக வைத்திரு.''

இளவரசன் முகத்தை கோணலாக்கினான்.

''வேண்டாம். இப்போது நீ குட்டி ஈன்ற குரங்கு போல இருக்கிறாய். சாதாரணமாகவே இரு.''

நம்பி கூற, கந்தசேனன் அவனை முறைத்துவிட்டு சாதாரணமாக இருந்தான்.

குன்றிலேறி பாறையைக் கடந்து, அந்த நடுத்தரவயது ஆள் அவர்கள் முன்னே தோன்ற.

''யாரங்கே அங்கேயே நில்.'' நம்பி அதட்டினான்.

அந்த ஆள் நின்றார். ஆச்சரியமாகப் பார்த்தார்.

''நீர் யார்?''

அந்த மனிதன் பதில் சொல்லவில்லை.

''நீங்கள் யார்?'' நிதானமாகக் கேட்டார்.

''இவர் வல்லத்து இளவரசர் கந்தசேனன். மாமன்னர் ராஜசிம்மனின் குதிரைப்படையின் முதல் சேனாதிபதி. நான் மாமன்னர் ராஜசிம்மனின் ஒற்றர் படையின் முக்கிய தலைவர். அவர் அவைக்கள வணிகர் மிகப்பெரிய செல்வந்தர். ராஜசிம்மனின் பண்டாரமே இவர் கையில் தான் இருக்கிறது.''

''அப்படியா எல்லோருக்கும் வணக்கம்,'' வந்தவர் கை கூப்பினார்.

''என்ன வெறும் வணக்கம் சொல்கிறீர்கள். ஒரு இளவரசரை ஊர் சபைத் தலைவர் வணங்கும் முறையா இது?'' கால் தொட்டு வணங்குவதுதானே முறை.''

''உண்மை தான்.'' வந்தவர் பணிவாகப் பேசினார்.

''நான் சிவ தீட்க்ஷையில் இருக்கிறேன்.'' அடர்ந்து வளர்ந்த தாடியைத் தடவியபடி சொன்னார்.



''சிவனுக்காக நேர்ந்திருக்கிறேன். புலால் உண்ணாமையும், புணராமையும், கடுஞ்சொல் இல்லாமையும் கொண்டு விரதம் பூண்டு, கங்கணம் கட்டியிருக்கிறேன், கங்கணதாரிகள் கடவுளன்றி வேறு எவரையும் வணங்கக் கூடாது என்பது மரபு. மீறி வணங்கினால், வணங்கப்படு பவருக்கு ஆகாது என்பது ஒரு வழிமுறை. ஆயினுமென்ன, அவர் இளவரசர் குதிரைப்படை சேனாதிபதி. நீங்கள் கட்டளை இடுகிறீர்கள். வணங்குகிறேன்.''

''வேண்டாம், வேண்டாம்'' இளவரசன் ஓடிவந்து அவரைத் தடுத்தான். மாறாய் அவர் கால்களைத் தொட்டு வணங்கினான்.

''இளவரசே, ஏன் என்னை வணங்குகிறீர்கள்?'' அவர் சாந்தமுடன் வினவினார்.

''கங்கணதாரியே, இறைவனுக்காக விரதம் இருப்பவர்களை அரசர்கள்கூட எழுந்து நின்று வணங்க வேண்டுமென்பது மரபு. நான் இளவரசன், உங்கள் கால் தொட்டு வணங்குதல் நல்லது. என்னை ஆசீர்வதிக்க வேண்டும்.''

''உன் நல்ல மனோரதங்கள் ஈடேறட்டும்.'' அந்த கங்கணதாரி ஆசீர்வதித்தார்.

''அடேயப்பா எவ்வளவு அற்புதமான வார்த்தைகள் சொல்கிறீர்கள். அது நல்ல மனோரதம்தான். ஈடேறுமா என்பதுதான் தெரியவில்லை.''

''நல்ல நினைப்பு நிகழாமல் போனதாய் சரித்திரமே இல்லை. இது நிச்சயம். உங்கள் மனோரதம் என்ன இளவரசே?''

''கோயில் கட்டவேண்டும் சபைத்தலைவரே. அதற்கு இந்த குன்றை பல்லவபுரத்து மக்களிடம் இருந்து வாங்க வேண்டும்.''

''வாங்கி...?''

''உடைக்க வேண்டும். பலகைகளாக தூண்களாக செதுக்க வேண்டும். மயிலை, திருவல்லிக்கேணி, வல்லம், திருவிடந்தை, மாமல்லம் போன்ற இடங்களில் விற்க வேண்டும். விற்று அந்தப் பணத்திலே கோயில் கட்ட வேண்டும். பல்லவ மன்னர் பல இடங்களில் கட்டுகிறா ராமே. அதே போன்று குகைக்கோயில் அமைக்க வேண்டும்.''

''எதற்கு?''

''இது என்ன கேள்வி. கோயில் கட்டினால் தானே ஒருவன் வரலாற்றில் இடம் பிடிக்க முடியும். கோயில் கட்டினால்தானே பெரிய ஊர் அமைக்க முடியும். நாம் அமைத்த ஊர்தானே நம் பெயரை காலாகாலத் திற்கும் சொல்லும்.''

''அடேயப்பா எவ்வளவு பெரிய மனோரதம்.''

''எங்களுக்கே மலைப்பாகத்தான் இருக்கிறது.''

''ஏன் மலைப்பு?''

''நாடு இருக்கிற நிலையில் இதெல்லாம் சாத்தியமா என்று தான் தெரியவில்லை.''

''பல்லவ நாட்டிற்கு என்ன கேடு?''

''அடிக்கடி நடக்கும் போர்தான் கேடு. கீழைச் சாளுக்கிய படையெடுப்பை அடக்குவதே நமக்கு மிகப் பெரிய தொந்தரவாகப் போய் விட்டது அந்த படை யெடுப்பால் தான் நமது தேசத்தின் அமைதி குலைகிறது. பொருளா தாரப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. இங்கே பாருங்கள் இந்த பல்லவபுரம் எவ்வளவு அமைதியாக தோன்றுகிறது''

''உண்மை ஆனால் அமைதிக்காகத்தான் படை யெடுப்பு கீழைச் சாளுக்கியர் குமரிமுனை வரை வந்து விடக் கூடாது என்பதால்தான் அடிக்கடி யுத்தம்.''



''சரி அது கிடக்கட்டும் இந்தக் குன்று என்ன விலை?''

''இந்தக் குன்றை விற்பதாக இல்லை.'' சொல்லி விட்டு அந்த ஆள் பெரிதாக புன்னகை செய்தார். அந்த புன்னகையில் லேசான கேலி இருந்தது கொஞ்சம் திமிர் இருந்தது.

''ஏன் இந்தக் குன்றை விற்கக் கூடாது. உங்களுக்கு இதனால் என்ன உபயோகம்?''

''இது ஊர் எல்லைக்கு அப்பால் இருக்கிறது. பல்லவ புரத்திற்கும் இந்தக் குன்றிற்கும் சம்பந்தமில்லை. எனவே இது பல்லவ அரசருக்கு சொந்தம். இதை விற்பதோ, மறுப்பதோ அவருடைய இஷ்டம்.''

''நான் நினைத்தேன். இதற்காக பல்லவ மன்னரிடம் போய் கேட்க வேண்டுமா? மன்னரிடம் சொல்லாமல் நாங்கள் எடுத்துக் கொள்ளக் கூடாதா?''

''மன்னரை ஏமாற்றவா சொல்கிறீர்கள்?''

''இல்லை அப்படி சொல்லவில்லை. இந்தச் சிறிய விஷயத்திற்கொல்லாம் மன்னரைத் தொந்தரவு செய்ய வேண்டுமா?''

''அவசியமில்லை தான்.'' குணசேகரன் வேகமாக மறுத்தான். அரசரிடம் ஒப்புதல் பெறாவிட்டலும் அரசிடம் ஒப்புதல் பெற வேண்டும் அரசு என்பது அமைச் சர்களும் அவர்களுக்குப் பின்னாலுள்ள அதிகாரிகளும் அவர்களிடம் எழுத்து மூலமாக இதைத் தெரிவித்து நிச்சயம் அனுமதி பெற்றே ஆக வேண்டும்.''

''நல்ல காரியத்திற்கு எவ்வளவு இடைஞ்சல்கள்.'' சதாசிவ நம்பி அலுத்துக் கொண்டான்.

அந்த ஊர்சபைத் தலைவர் மறுபடியும் புன்னகை செய்தார்.

தொலைவில் மனிதர்களின் குரல்கள் கேட்டன. ஏரிக்கரைக்கு அப்பால் தூசுப்படலம் தெரிந்தது. இன்னும் சற்று உயரே ஏறிப் பார்க்க பல்லவ புரத்திற்குள் கனமான மாட்டுவண்டிகள் நுழைந்தன. ஒரே ஒரு குதிரை வீரன் முன்னால் வந்துகொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து வில்வண்டி வந்து கொண்டிருந்தது. வில்வண்டியில் ஆட்கள் இருப்பது தெரிந்தது. பார வண்டிகளுக்கு இடதும். வலதுமாய் பல மனிதர்கள் ஆண்களும். பெண்களுமாய் நடந்து வந்தார்கள். ஏதோ குடி பெயர்ந்து வந்தது போல அவர்களைப் பார்க்கும்போது மனதிற்குத் தோன்றியது

''என்ன திடீரென்று இத்தனை ஜனங்கள்?'' கந்தசேனன் உடைவாள் மீது கைவைத்தான்,

''ஏதேனும் படையெடுப்பாக இருக்குமோ?'' அந்த ஊர்சபைத் தலைவர் உரக்கக் கேட்டார். ஓரக்கண்களால் அந்த இளைஞர்களைப் பார்த்தார்.

''அவர்களிடம் கைத்தடிகளைத் தவிர வேறு எந்த ஆயுதமும் இல்லை.'' குணசேகரன் உற்றுப் பார்த்து சொன்னான்.''

''அது மட்டுமல்ல அவர்கள் பேசி சிரித்து ஆட்டம் பாட்டத்தோடு வருகிறார்கள். போருக்கு வருவதாகவே தெரியவில்லை.'' சதாசிவ நம்பி உற்றுப் பார்த்து கூறினான்.

''நம்பி. அவர்கள் தொழிலாளர்கள் அப்பா. மறவர்களே இல்லை.'' குணசேகரன் புருவத்திற்கு மேல் கை வைத்து உற்றுப் பார்த்தான்.

''நான் சொல்கிறேன் அவர்கள் கல்தச்சர்கள்'' சதாசிவ நம்பி உரத்து தொடை தட்டி கூறினான். ஊர் தலைவர் அட என்று அதிசயித்தார்.

''எப்படி சொல்கிறாய் தம்பி?''



''அனேகமாய் எல்லோருக்கும் கூன் முதுகு இடது பக்கம் கடைசியாக வருபவன் தோளில் பெரும் சுத்தியல் இருக்கிறது. அதோ, முன்னால் வரும் சிறுவன் இரும்பு உளிகளை ஒரு கட்டாகத் தலையில் வைத்திருக்கிறான். அந்தப் பெண்களைப் பாருங்கள். பாரம் சுமந்து அகன்ற நடை. வெறுமனே வரும் போதும் தலையில் சும்மாடு. கல்தச்சர் பெண்களுக்கு சும்மாடு இல்லாமல் நடக்க முடியாது. அதில் மூன்று பெண்கள் முதுகில் குழந்தையைக் கட்டியிருக்கிறார்கள். வேறு யாரும் குழந்தையை இப்படி முதுகில் கட்டவே மாட்டார்கள். அது கல்தச்சர் வழக்கம்.''

''கல்தச்சர்கள் இங்கே வரக் காரணம் என்ன? இது மயிலைக்குப் போகும் வழி இல்லையே.''

''ஒருவேளை, இது திரு எவ்வளூர் (திருவள்ளூர்) போகும் வழியா?''

''இல்லை. அவர்கள் இந்தக் குன்றை நோக்கித்தான் வருகிறார்கள்.'' ஊர் தலைவர் சொன்னார்.

''அதெப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்? இந்தக் குன்று தாண்டி வெகு தூரம் வயல் வெளிதான். கல்தச்சர்களுக்கு வயல்வெளியில் என்ன வேலை? இந்தப் பக்கம் திசை திரும்பக் காரணம் என்ன? மலரை நோக்கி வண்டு வருவது போல மலையை நோக்கி கல்தச்சர்கள் வருகிறார்கள்.

கருப்புத் தலைப்பாகையுடன் கூடிய பல்லவரின் கொடி தாங்கிய பதினைந்து குதிரை வீரர்கள் வருவதும் தெரிந்தது. வண்டிகளைத் தாண்டிக் கொண்டு அவர்கள் குன்று நோக்கி விரைந்து வந்தார்கள்.''

''ஊர் தலைவரே, உங்களைத் தேடிக்கொண்டுதான் அரசு வீரர்கள் வருகிறார்கள்.''

''ஆமாம். என்னைத் தேடித்தான் வருகிறார்கள்.''

''நிலவரியெல்லாம் ஒழுங்காக செலுத்தியாகி விட்ட தல்லவா?'' இளவரசன் சந்தேகத்தோடு கேட்டான்.

''செலுத்தி விட்டோம்.'' ஊர் தலைவர் பதில் சொன் னார்.

''பிறகு ஏன் வருகிறார்கள்.''

''அருகே வந்தால் தெரிந்து போகிறது.''

சதாசிவ நம்பி குன்றின் நுனிக்கு போய் உற்றுப் பார்த்தான்.

''கந்தசேனா இவர்கள் அரசரின் மெய் காவலர்கள். இங்கு ஏதோ தவறு நடந்திருக்கிறது,

''என்ன தவறு நம்பி?''

''இந்த ஊர் தலைவர் தவறு.''

''என்ன குற்றம் செய்திருக்கிறார்.''

''குற்றம் நாம் செய்திருக்கிறோம்.''

''புரியவில்லையே நம்பி.''

''இவர் அரசர், பேரரசர். பல்லவ குலத்தோன்றல், மாமன்னர் ராஜசிம்மன். இவர் யார் என்று தெரியாமல் அதிகம் உளறி விட்டோம்.''

''மன்னரே, எங்களை மன்னிக்க வேண்டும்.''

''ஆஹா, சதாசிவநம்பி, நீ மகாகெட்டிக்காரன்'' அந்த ஊர் தலைவர் கைதட்டினார். மூன்று இளைஞர் களும் அவர் பாதம் பணிந்தார்கள்.

''அடடே எழுந்திருங்கள். இந்தக் குன்றைப் பார்த்த தும் கோயில் கட்ட வேண்டும் என்று உங்களுக்கு எப்படி தோன்றியது.''



''கோயில் கட்ட வேண்டுமென்பது கந்தசேனன் ஆசை. கற்கள் பற்றி குணசேகரனுக்கு நன்கு தெரியும். நான் அருகே இருந்து இவர்களுக்கு உதவி செய்வேன்.'' சதாசிவநம்பி அடக்கத்துடன் கூறினான்.

''அட, அழகாய் கூட்டு சேர்ந்திருக்கிறீர்கள்.''

''சதாசிவநம்பி நிர்வாகத்தில் கெட்டிக்காரன் மன்னா. அதையும் தவிர, கோயில் கட்டுமான சாஸ்திரத்தை இதற்காகவே பலமுறை படித்திருக்கிறான். வாஸ்து புருஷனைப்பற்றி விவரிக்கும் பூமி சாஸ்திரமும் அவனுக்கு நன்கு தெரியும்.''

''பல்லவ குலத்து இளைஞர்கள் ஒளிவீசும் அறிவுச் சுடரோடு இருப்பது கண்டு எனக்கு மட்டில்லாத மகிழ்ச்சி. உங்கள் மூவருக்கும் என் மனப்பூர்வமான ஆசீர்வாதம்.''

அந்நியர் மூன்று பேர் அரசருக்கருகே இருப்பதைப் பார்த்ததும் குதிரைப்படை மிக விரைவாகக் குன்றேறி வந்தது.

தாவித் தரை இறங்கியதும் வீரர்கள், வேல்கம்பை குறுக்கே பிடித்து அவர்களைப் பின்னுக்குத் தள்ளினார் கள்.

''யார் நீங்கள். என்ன வேண்டும். ஏன் இங்கு நிற் கிறீர்கள்?'' உரத்த குரலில் மிரட்டினார்கள்.

''மன்னா'' சதாசிவநம்பி திண்டாடினான்.

''என்னிடம் பேசு. மன்னரே உன்னை அருகே வரும்படி ஆணையிட்டாலும், எனக்கு சம்மதமில்லையெனில் ஒரு அடிகூட நகரவிட மாட்டேன். யாரங்கே, இந்தப் பார்ப்பனனை தனியே கொண்டுபோய் உக்காரவையுங்கள். உன்னை எங்கேயோ பார்த்திருக்கிறேனே.'' கந்தசேனனை நோக்கி அந்த குதிரை வீரன் சுட்டிக் காட்டினான்.

''நீ வல்லத்து இளவரசனல்லவா? நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?''

கந்தசேனன் பதில் சொல்லவில்லை.

''நீ யார் சொல்?'' அவன் இப்போது குணசேகரனை அதட்டினான்.

சதாசிவநம்பியின் கைப்பிரம்பு பிடுங்கப்பட்டு அவனை தரையில் குத்திட்டு உட்கார வைத்தார்கள். மன்னர் எல்லாவற்றையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந் தார். மிகுதியான படைவீரர்கள் குன்றை சுற்றிப் பார்த்து விட்டு வந்தார்கள்.

கீழே அடிவாரத்தில் வில்வண்டியிலிருந்து இறங்கிய ஆட்களை கைதட்டி அழைத்தார்கள்.

''நான் மயிலை வணிகன். என் பெயர் குணசேகரன். என் தந்தை பெயர் ஞானதீபன். மயிலை வணிகர் சங்கத் தலைவர்.''

மயிலையார். நீங்கள் ஏன் இங்கு இருக்கிறீர்கள்?''

''நாங்கள் காஞ்சிக்குப் போகிறோம்.''

''மயிலைக்கு கந்தசேனன் எதற்கு வந்தான்.''

''கபாலீஸ்வரரை தரிசிக்க வந்தார். கடல் நீராட வந்தார். எங்களோடு பத்து நாட்கள் தங்கினார்.''

''சரி இந்த அந்தணன் எதற்கு?''

''ஏன் அந்தணன் மயிலைக்கு வரக் கூடாதா?'' சதாசிவ நம்பி எழுந்து நின்று கேட்டான்.

குதிரை சவுக்கு பளீரென்று அவன் பாதம் அருகே சொடுக்கப்பட்டது.



''கேட்ட கேள்விக்கு கேட்கப்பட்டவர் பதில் சொல்ல வேண்டும். இதுவே முதலும், கடைசியுமான எச்சரிக்கை. நீ குதிரை ஓட்டக் கற்றுக் கொண்டு விட்டால் பெரிய கொம்பனா. குதிரை சவுக்கால் அடி வாங்கியிருக்கிறாயா? அந்தணன் என்பதால் விடுகிறேன். உட்கார்.''

''இதென்ன கொடுங்கோல் ஆட்சியாக இருக்கிறதே.''

குணசேகரன் கன்னத்தில் பளீரென்று அறை விழுந்தது. குணசேகரன் தரையில் விழுந்தான். கந்தசேனன் கலவரத்துடன் மன்னரைப் பார்த்தான். மன்னர் அசையாமல் கவனித்துக் கொண்டிருந்தார். அந்த மெய்க்காவல் வீரர்கள் மன்னரை லட்சியம் செய்யவே இல்லை.

''மயிலையில் வேறென்ன வேலை? பதில் சொல்?''

''சதிர் கச்சேரிகளுக்குப் போனோம்.''

''பிறகு?''

''ராமாயண நாடகம் பார்த்தோம்.''

''பிறகு?''

''களரி பழகினோம்.''

''பிறகு?''

''சதாசிவ நம்பிக்கு அல்லிக்கேணி கடல் மணலில் குதிரையேற்றம் சொல்லிக் கொடுத்தோம். திருவொற்றியூர் துறைமுகத்தில் தான் ஒரு அரபிக் குதிரை வாங்கிக்கொண்டு தன் குதிரையை சதாசிவநம்பிக்கு இளவரசர் கொடுத்து விட்டார்.''

''இந்தக் குன்றில் நிற்க காரணம்?''

''பாறைக் கற்கள் தேர்ந்தெடுக்க வந்தோம்.''

அடிவாங்கிய குணசேகரன் தொடர்ந்து பதில்சொல்லிக் கொண்டே வந்தான்.

''எதற்கு பாறைக்கற்கள் தேர்வு?''

''வல்லத்தில் கோயில் கட்ட உத்தேசம்.''

''யார் வல்லத்தில் கோயில் கட்டப் போகிறார்கள்.''

''இளவரசர் கந்தசேனன்.''

''வல்லத்தில் ஒரு கோவில் கட்டுமளவுக்கு இளவரசரிடம் செல்வம் உண்டா?''

''இந்தக் குன்றை நாலா திக்கிலும் உடைத்து விற்று விற்ற பணத்தில் கோயில் கட்ட உத்தேசம்.''

''இந்தக் குன்றை என்ன விலைக்கு வாங்குவீர்கள்?''

''அரசரிடம் மானியமாகப் பெறுவோம்.'' இளவரசன் கந்தசேனன் இடைமறித்து சொன்னான்.

அரசர் வாய்விட்டு சிரித்தார்.

''காரி. போதும் விடு'' அரசர் கையசைத்தார். வீரர்கள் சட்டென்று விலகிக் கொண்டார்கள். சதாசிவ நம்பி எழுந்திருக்கக் கூட ஒரு வீரன் உதவி செய்தான்.

''கந்தசேனா நான் உங்களை மூன்று மனிதர் களாகவே நினைக்கவில்லை சிவன். விஷ்ணு. பிரம்மா என்று மூன்று அம்சங்களாகவே நினைக்கிறேன். என்னு டைய செயலுக்கு இறைவன் அளித்த ஆசீர்வாதமாகவே உங்கள் இருப்பை உணர்கிறேன். பல்லவபுரத்திற்கருகே ஒரு குன்று. உறுதியான பாறைகளுடன் இருக்கிறது என்று கேள்விப்பட்டு இங்கு வந்தேன். அந்தக் குன்று இது தான் என்று இறைவனே சொல்வது போல நீங்கள் நின்று கொண்டிருந்தீர்கள். கோயில் பற்றி பேசினீர்கள். என் மனம் நிறைந்தது.

சதாசிவநம்பி குணசேகரா. மெய்க்காவலர்கள் விசா ரணை என்பதை கடுமையாகத்தான் செய்வார்கள். இதை



மனதில் கொள்ள வேண்டாம் எனக்காக உயிரையும் தத்தம் செய்வேன் என்று சத்தியம் செய்திருக்கும் வீரர்கள் இவர்கள் எனவே, சிலசமயம் நானும் இவர்கள் சொற்படி தான் நடக்க வேண்டி இருக்கும்.

கந்தசேனா உன் வையிந்திரிய குலம் மிகப்பெரிய குலம். எங்களுக்கு முன் இந்த மண்ணை ஆண்ட சோழ மன்னர்களின் ஒரு பிரிவு. நீங்கள் தான் தொண்டை நாட்டின் காவற்கதவு. உன் தந்தையை நான் நன்கறிவேன். உன் பாட்டனையும் நான் பார்த்துப் பேசியிருக்கிறேன்.

வல்லத்து இளவரசனே, இந்த இளம் வயதில் கோயில் கட்ட வேண்டுமென்ற ஆசை உனக்கு வந்தது மிக நல்ல விஷயம். உங்கள் கூட்டும் வியப்பாக இருக்கிறது. இது மிக அபூர்வம்.

ஆனால் கந்தசேனா, காஞ்சியின் மேற்குபுரத்தில் ஒரு கோயில் கட்ட முடிவு செய்து ஆறு மாதங்கள் முன்பு விரதம் பூண்டு கொண்டேன். பாறைகளுக்கு கல்தச்சர்கள். இந்த இடத்தை சொன்னார்கள். எனவே நேரே பார்வை யிட வந்தேன். இந்தக் குன்றை உனக்குத் தர இயலாது. இந்தக் குன்று கைலாச நாதருக்கு. அவர் கோயில் உருவா வதற்கு.''

''மாமன்னர் ராஜசிம்மன்''

''வாழ்க வாழ்க''

''மாதொருபாகர் கைலாச நாதர் கோயில்''

''வளர்க வளர்க'' மெய்க்காவலர்கள் குரலெடுத்துக் கூவினார்கள்.

தங்கச்சங்கிலி அணிந்த ஸ்தபதிகளைத் தாண்டி, கல் தச்சர்கள் அரசரிடம் வந்தார்கள்.

''இந்த இடம் தான். இந்தக் குன்றுதான். நீங்கள் இன்றே இப்போதே வேலை துவங்கலாம். பூஜையை ஆரம்பிக்கலாம்.''

''மன்னா, பூஜைக்கு வேண்டிய சாமான்கள் கூடையிலிருக்கின்றன. ஆனால் வேளை சரியா என்று தெரியவில்லை.''

''இன்று நாள் வளர்பிறை பஞ்சமி. யோகங்கள் திருத்தமாக இருக்கின்றன. வானம் மூடியிருக்கிறது. நல்ல நேரம் என்பதை எப்படி கண்டுபிடிப்பது?''

''கருடன் தோன்றினால் நல்ல சகுனம்'' சதாசிவ நம்பி இடையில் புகுந்து பேசினான்.

''என்ன?''

''பூஜைக்குண்டான சாமக்கிரியைகள் அடுக்கி வைத்துவிட்டு, வானம் பாருங்கள். ஒரு சொம்பு நீர் குடிப்பதற்குள் கருடன் தோன்றினால், இது ஆசீர்வதிக்கப்பட்ட விஷயம். உடனே நீங்கள் வேலை துவங்கலாம்.'' சதாசிவநம்பி அழுத்தந்திருத்தமாகப் பேசினான்.

''நல்லது. நானும் அவ்விதம் கேள்விப்பட்டிருக்கிறேன். உடல் பருத்த ஒரு ஸ்தபதி சதாசிவ நம்பியை ஆதரித்துப் பேசினார்.

''ஹோரை பார்த்து ஆரம்பித்தாலும், கருடன் தோன்றிவிட்டால், அது தெய்வத்தால் அனுக்கிரஹிக்கப்பட்ட காரியம் என்றாகிவிடுகிறது. ஆனால், கருடன் தோன்றவில்லை என்றால் என்ன செய்வது?''

''காத்திருக்க வேண்டும்.'' மன்னர் பதில் சொன்னார்.

சூலம் எழுதப்பட்ட எல்லைக் கல்லும், விளக்கும் எண்ணெயும், மணியும், வாசனைத் தூபமும், எக்காள



மும், பூமாலையும், உதிரிப் பூக்களும், மஞ்சளும், குங்குமமும், திருநீறும், பசும் வறட்டியும், அக்னி கட்டைகளும் பரப்பி வைக்கப்பட்டன.

ஒரு கல்தச்சர் இளைஞன் ஏரியிலிருந்து ஒரு குடம் நிறைய நீர் கொண்டு வந்தான். கல்தச்சர்கள் அந்த இடத்தை மடமடவென்று சுத்தம் செய்தார்கள். கையால் மண் பறித்து சூலக்கல் நட்டார்கள். கொம்பு வளைந்த ஆட்டுக் கிடாவை கொண்டு வந்து நிறுத்தினார்கள். சற்று நேரம் காத்திருந்தார்கள்.

மன்னர் மேலே போர்த்தியிருந்த சால்வையை எடுத்து இடுப்பில் இறுக்கிக் கொண்டார். அவர் மார்பில் பல வெட்டுத் தழும்புகள் தென்பட்டன. பல யுத்தங்களைச் சந்தித்த மனிதர் என்று பார்த்த உடனேயே தெரிந்தது. மன்னர் கைகூப்பினார். கண் மூடினார்

மன்னரைத்தவிர எல்லோரும் வானம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேற்கே இரண்டு புள்ளிகள் தெரிந்தன. நீல வானத்தில் அந்த புள்ளிகள் பறவைகள் என்பது புரிந்தது. கார்கால மேகம் போல் அந்த பறவைகள் விரைவாக குன்றை நோக்கி வந்தன.

''அது என்ன. அது என்ன?'' அத்தனை பேரும் முணுமுணுத்தார்கள்.

மன்னர் அசையாது நின்றிருந்தார். சதாசிவநம்பி அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''கருடன், கருடன்'' உரத்த குரலில் குணசேகரன் கூவினான். அவனைத் தொடர்ந்து ஸ்தபதிகளும் கூவினார்கள்.

மன்னர் அசையவே இல்லை. தெள்ளத் தெளிவாய் அது கருடன் எனத் தெரிந்தது. பறவைகள் குன்றின் மீது வட்டமிட்டன. மன்னர் அப்போதும் அசையவில்லை.

இரண்டு பறவைகளும் சரேலென்று குன்று நோக்கி இறங்கி, படபடவென்று சிறகை குன்றின் மீது அடித்து விட்டு நகர்ந்தன. ஒரு பறவையின் ஒரு சிறகு காற்றி லாடி படையல் மீது விழுந்தது. எல்லோரும் ஆஹாரம் செய்தார்கள். வானத்தை நோக்கி கை கூப்பினார்கள்.

மன்னர் கண் திறந்தார். பறவைகளை வணங்கினார். தீப, தூபம் காட்டப்பட்டது.

மன்னர் மண் கொத்தும் கருவியை பல தச்சர்களுக்கும் எடுத்துக் கொடுக்க, அவர்கள் வரிசையாக நின்றார்கள். ஸ்தபதிக்கு மாலை அணிவித்து, சால்வை போர்த்தி, வீரர்களிடம் இருந்த பெரிய பொற்காசு மூட்டையை வாங்கி ஸ்தபதியிடம் தர, ஸ்தபதி நடுகல்லையும், மன்ன ரையும் விழுங்கி வணங்கினார். குன்றின் உச்சிக்கு போனார். கை கூப்பி நாலா திக்கும் பார்த்தார்.

''இந்த குன்றிலிருக்கும் அய்யா மார்களே, அம்மா மார்களே, ரிஷிகளே, முனிவர்களே, கந்தர்வர்களே, தேவதைகளே, பூதப்பிசாசுங்களே கோயில் கட்ட இந்த இடத்தை கெல்லப் போகிறோம். உடைத்துச் சீராக்கி, எங்கள் ஊருக்கு எடுத்துப் போகிறோம். இங்கே யாரும் வசிப்பதாக இருந்தால், தயவுசெய்து உங்கள் இடத்தை எங்களுக்கு விட்டுக் கொடுங்கள்.

உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். எங் களுக்கு எந்த பாதகமும் பண்ணாமல் வேறு இடம் நகர்ந்து விடுங்கள்.'' நாலு பக்கமும் பார்த்துவிட்டு ஆட்டுக்கிடாய் வைத்திருந்தவனிடம் கை காட்டினார்

'சரக்'கென்று கிடாய் ஒரே வீச்சில் வெட்டப்பட்டது. ஒருவன் ஆட்டுத் தலையை எடுத்து வானத்தில் உயர வீசி னான். இன்னொருவன் உடம்பை எடுத்து நாலாப் பக்கமும் ரத்தம் தெளித்தான். தலையும் உடம்பும்



குன்றின் மறுபக்கம் போய் விழ, பெண்கள் குலவை கொட்டினார்கள்.

மன்னர் கையசைக்க, ஸ்தபதி ஓங்கி மண் கொத்த, எல்லோரும் 'பொத் பொத்'தென்று மண்ணில் கருவியை இறக்கினார்கள். செம்மண் கரளையைக் கொத்தி விலக்கி னார்கள்.

நாலு கொத்து முடிந்து, ஐந்தாவது கொத்தில் டங் கென்று கருவி, கல்லில் மோதியது. கால் நாழிகையில் ஒரு பெரிய கருங்கல்லை. மண் நீக்கி வைத்தார்கள். ஸ்தபதி அளவு குறித்து மாவால் கோடுகள் வரைந்தார்.

கல் தச்சர்கள் வரிசையாய் விரல் ஆழம் துளையிட் டார்கள். நடுவே ஒரு பெரிய இரும்பு ஆணியை இன்னும் சற்று ஆழமாய் பதித்தார்கள்.

''சர்வேஸ்வரா. லோக மாதா,'' ஸ்தபதி மறுபடி வான் நோக்கி கை கூப்பினார்.

''இப்போது நடுவிலுள்ள அந்த இரும்பு ஆணி ஓங்கி அடிக்கப்படும். அப்படி அடித்தால் துளை போட்ட இடத்தில் நேர் கோடாய் கல் விரியும். இந்த முதல் கல் அப்படி நேராக விரிவது நல்லது. கோணலாக விரிந்தால் இந்தக்கல் எதற்கும் ஆகாது.

சரியாக விரிந்தால் இதழ்களோடு கூடிய தாமரைப் பூவை செதுக்கி, இதையே முதல் கல்லாகச் செய்து விட லாம். அதை கோயில் வாசல் படியில் அழகாக பொருத்த லாம்.

தேவதைகளுக்கும், பூத பிசாசுங்களுக்கும் எந்த ஆட்சேபனையுமில்லை என்றால் இந்தக் கல் சரியாக விரியும்.''

மறுபடியும் எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். மீண்டும் தூப, தீபம் காட்டப்பட்டது இந்த முறை ஒரு கோழியின் தலை திருகப்பட்டு வடக்கும், தெற்கும் வீசப் பட்டது.

மன்னர் கனத்த மௌனத்தோடு அதை பார்த்திருந் தார். ஸ்தபதி அவரை நோக்கி ஆரம்பிக்கட்டுமா எனக் கேட்டார்

மன்னர் துளையிட்ட பாறைக்கு அருகே வந்து அதன் மீது தலையை வைத்துக் கொண்டார்.

''கைலாச நாதா, கைலாச நாதா, கைலாச நாதா'' என்று கூவினார்.

''இங்கு எதுவும் என் செயலல்ல, நின் செயல், நின் கருணை. என் செயல் என்று ஏதுமில்லை. நான் அரசனல்ல. உன் அடிமை. நீ சொன்னதை செய்வதே என் வேலை. கைலாச நாதா என்னை வழி நடத்து.''

அந்த செம்மண் நிலத்தில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். கண் மூடிக் கிடந்தார்.

கந்தசேனன் மன்னரை கலவரத்தோடு பார்த்தான். குணசேகரன் பயந்து போய் கைகூப்பினான்.

''ஆக மன்னராக இருந்தாலும் கோயில் கட்டுகிற போது மண்ணில் புரண்டுதான் ஆக வேண்டும்'' சதாசிவ நம்பி அசையாது நின்று மன்னரையே பார்த்துக்கொண் டிருந்தான்.

'நாம் நினைத்தது போல கோயில் கட்டுவது ஒன்றும் எளிதல்ல. மன்னரே இத்தனை நடுக்கமுறுகிறாரெனில் கோயில் கட்டுவது மிகப்பெரிய விஷயமாக இருக்க வேண்டும். சேர, சோழ, பாண்டியர்களை அடக்கியும், சாளுக்கியர்களை கலவரப்படுத்தியும், வடபுலம் வரை,



தன் வீரத்தை நிரூபித்தும் வந்த ஒரு மன்னன் இப்படி ஒரு கல் எதிரே அடிபணிந்து வீழ்கிறான் என்றால், செம்மண் நிறைந்த குன்றில் வீழ்ந்து கிடக்கிறான் என்றால், நிச்சயம் கோயில் கட்டுவது ஒரு பெரிய விஷயம்தான்.

இன்னும் ஒரு கல் கூட வெட்டப்படவில்லை. ஆனால் மன்னர் ஆறு மாதமாக தீக்ஷை வளர்த்து கையில் கங்கணம் கட்டி, ஒரு பொழுது உபவாசம் இருந்து வாழ்க்கை நடத்தி வருகிறார். ஆனால், நானும் கந்தசேனனும், குண சேகரனும் தாசி வீட்டு சதிர்கச்சேரி பார்த்துவிட்டு அவர் களுக்கெதிரே கோயில் கட்டுவதைப்பற்றி அலட்டலாய் பேசிக் கொண்டிருக்கிறோம்.

இந்த கல் சீராய் உடைபடுமா? ஒரே அடியில் பளிச் சென்று நேர் கோடாய் விரியுமா? சர்வேஸ்வரா, விரிய வேண்டும்.'' என்று அவனும் கை கூப்பினான்.

கந்தசேனன் மனம் நடுங்கியது.

''சிவனே. என் குலதெய்வமான தில்லை நடராஜ பெருமானே, இந்த கந்தசேனன் செய்த அபச்சாரத்தைப் பொறுத்துக்கொள். மயிலையில் மது குடித்துவிட்டு அல்லவா கோயில் கட்டுவதைப் பற்றி பேசினேன்.

வேட்டி தரையில் புரள, தோள் துண்டுமீது எச்சில் தெறிக்க, இந்த இளவரசன் கந்தசேனன் சிவன் கோயில் கட்டுவேன் என்று சூளுரைத்தேனே. என்ன அபத்தம். எவ்வளவு திமிர்.

தென்திசை முழுவதும் நாடாளும் இந்த மாமன்னர் கைலாசநாதா. கைலாசநாதா என்று உருகுகிறார், ஒரு கட்டைபோல் குப்புறக் கிடக்கிறார். இப்படி கேட்க வேண்டிய விஷயமா இது. இந்தப் பணிவு ஏன் எனக்கு சொல்லித்தரப்படவில்லை.

சே, என்னை நினைத்தால் எனக்கே அவமானமாக இருக்கிறது. என் சிவனே, இந்தக் கல் நன்கு பிரிய வேண்டும்.''

குணசேகரனுக்கும், திகைத்துத் தொண்டை அடைத் திருந்தது. குணசேகரனின் அப்பா மயிலையில் மிகப் பெரிய வணிகர். வெறும் வணிகராய் மட்டுமில்லாது மயிலை. திருவல்லிக்கேணி சிற்றூருக்கு அதிகாரணத்தா ராகப் பொறுப்பேற்று ஊராட்சி செய்து வந்தார். குறிப் பாய், வரி வசூல் செய்து காஞ்சிபுரத்திலுள்ள பல்லவ மன்னர்களுக்கு அனுப்பி வந்தார்.

அப்பாவுக்கு தற்சமயம் எண்பது வயது. அவருடைய அறுபது வயதிலே குணசேகரன் மகனாகப் பிறந்தான்.

காஞ்சீபுரம் போக வேண்டுமென்ற எண்ணத்தைச் சொன்னதும், எதற்கு என்று கேட்டார். மன்னரை பார்ப்பதற்கு'' என்று குணசேகரன் பதில் சொன்னான்.

''மன்னரைப் பார்க்கும் முன்பு, இப்போது நடக்கின்ற ஆட்சியைப் பற்றி தெரிந்து கொள். உனக்கு ஏதாவது இப்போது நடக்கின்ற ஆட்சி பற்றி தெரியுமா?'' என்றும் கேட்டார். தெரியாது என்று சொன்னதும் அலட்சிய மாகச் சிரித்தார்.

''உனக்கு வயது இருபது. திருமணமாகி, ஒரு பெண் குழந்தையும் பிறந்து விட்டது. இன்னும் கடற்கரை மணலில் குதிரை ஓட்டிக்கொண்டும், மீன் பிடிக்கும் பெண் களை வேடிக்கை பார்த்துக் கொண்டும், மாட வீதியி லுள்ள தாசிகளோடு சிரித்துப் பேசிக் கொண்டும் இருக் கிறாய்.

ஒரு வணிகனான நீ திருவொற்றியூர் தவிர, இதுவரை வேறு எந்த ஊருக்கும் போனதில்லை. தெற்கே திருவான் மியூர், கடற்மல்லை தவிர வேறு ஊர் பார்த்ததில்லை திருவிடந்தையில் கூட தூங்கியபடியே இருந்தாய்.



உலகம் மிகப் பெரியது குணசேகரா. மயிலையிலிருந்து காஞ்சீ போவதற்குள் எத்தனை ஊர்கள் பார்க்கலாம்.

வெளிச்சேரி (வேளச்சேரி) பல்லவபுரம், திருக்கழுக் குன்றம், திருவலிதாயம் (பாடி) திரு எவ்வளூர், திருநின்ற ஊர், திருமுல்லை வாயில், திருப்பெரும்பூதூர் என்று பல க்ஷேத்திரங்களைப் பார்க்கலாம்.

யாரோடு போகிறாய்? வல்லத்து இளவரசரோடா? வேறு யார் வருகிறார்கள். அந்த அந்தணச் சிறுவனா?

நல்லது. புறப்படு, இந்த தொண்டை நாட்டை பல மன்னர்கள் ஆண்டிருக்கிறார்கள். ஆனால் பல்லவர்கள் ஆட்சி காலத்தில் தான் நமது வாழ்க்கை செழிப்பானது.

மன்னர் மகேந்திரவர்மரை கேள்விப்பட்டிருக்கிறாயா? என் தந்தை அவரை தெய்வமெனப் புகழ்வார்.

சமண மதத்திலிருந்த மகேந்திரவர்மர் சைவராக மாறிய பிறகு தொண்டை நாட்டு வாழ்க்கை முறையே வேறு விதமாக மாறிவிட்டது.

கடல் மல்லையில் அவர் எழுப்பிய குடவரைக் கோயில் கள் அற்புதம். வணிகருக்குப் பொற்காலம் அவர் ஆட்சி யில்தான் ஆரம்பித்தது. அவருடைய மகனான நரசிம்ம வர்மன் காலத்தில் இன்னும் அதிகமாக கோயில்கள் கட்டப்பட்டன.

நரசிம்மனுக்குப் பிறகு பரமேஸ்வரவர்மன். அவரு டைய காலமும் பொற்காலம். முதன் முதலாய் கல் மீது கல் அடுக்கி சிவனுக்கு அற்புதமான கோயில் ஒன்றை எழுப் பினார்.

இந்த சாளுக்கிய அரசன், படுபாவி புலிகேசியால் தான், தொண்டை நாட்டிற்கு மிகப்பெரிய சோதனை. சேர, சோழ, பாண்டியர்களைவிட, புலிகேசி பல்லவர்களை

தான் மிகவும் வெறுத்தான். வடமேற்கே உள்ள வாதாபியிலிருந்து, திரும்பத் திரும்ப காஞ்சீபுரத்தின் மீது படையெடுத்து வந்தான். எத்தனை அழிவு. எவ்வளவு வேதனை.

சாளுக்கியர்களின் படையெடுப்பு இல்லையென்றால், பல்லவ மன்னர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சிவன் கற்றளி எழுப்பியிருப்பார்கள்.

இது அரச சண்டையே அல்ல. மதச் சண்டை. சைவர்களை வெறுக்கின்ற சமணர்களால் நடத்தப்படும் சண்டை. எத்தனை முறை கடுமையாக சாளுக்கியரை தண்டித்த பிறகும், வாதாபியைத் தாக்கி எரியூட்டிய பிறகும் அவர்களுக்கு அறிவில்லை.

கோழைத்தனமும், வஞ்சனையும் மிகுந்த சோழர்கள் பல்லவர்களை நிலைகுலைய வைக்க, தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வறுமை மிக்க பாண்டியர்கள், இலங்கை மன்னனிடம் படைகேட்டு கெஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். சேரர்களுடைய நாகரிகமே இன்னும் முழுமை பெறவில்லை. ஆனால் அவர்களும் பாண்டியர்களோடு பல்லவர்களுக்கு எதிராக கைகோர்த்துக் கொள்வார்கள்.

பல்லவர்களுக்கு நல்ல நண்பர்கள் இல்லை. ஏனென்றால் அவர்களின் வளர்ச்சியை யாராலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

பல்லவமன்னர்கள் எதிர்காலம் பற்றி தெளிவாக சிந்திக்கிறார்கள். புதிது புதிதாய் என்ன செய்யலாமென்று யோசனை செய்கிறார்கள்.

இயற்கையின் படைப்பான பெண்ணை சமணமும், பௌத்தமும் மறுதலிக்கிறது. கடவுளை அடைய பெண்ணை மறுக்கவேண்டிய அவசியமே இல்லை. அப்படி மறுத்தல் பாவம். அது நோய். பெண்ணோடு வாழ்ந்து,



குடும்பம் நடத்தி, இறைவனை தேடுதலே சரியான வழியென்று சைவம் சொல்கிறது.

கட்டுப்பாடில்லாத காபாலிகம், காளாமுகம் போன்றவையும் பல்லவமன்னர்களால் தண்டிக்கப்பட்டன.

ஒரு தேசத்தின் மதம் கருணையோடும், தெளிவோடும் இருக்க வேண்டும். மதகுருமார்களின் ஆட்சி செய்யாவிட்டால். எப்பேர்ப்பட்ட ஆட்சியையும் இரண்டு வருடத்தில் நாசமாக்கிவிடுவார்கள். சுயநலம் மிக்கவர்களே மதகுருமார்களாக இருக்கிறார்கள்.

ஒரு தேசத்தை வணிகனின் துணையோடு ராணுவம் தான் ஆட்சி செய்ய வேண்டும். சாளுக்கியர்களை, சாளுக்கிய தேசத்தை, சமண குருமார்கள் ஆட்சி செய்கிறார்கள். அருவருப்பான காபாலிகர்கள், பல்லவமன்னர்களுக்கு அருகே ஆலோசனை சொல்ல வந்தபோது, அவர்களை மன்னரும் ஏற்கவில்லை. மக்களும் ஏற்கவில்லை.

பரமேஸ்வர்மருக்கு பிறகு மூன்று மாதங்கள் முன்பு தான் ராஜசிம்மன் பதவியேற்று இருக்கிறார்.

ஒரு வணிகன் அரசியல் மாற்றங்களை உற்று கவனித்துக் கொள்ளவேண்டும். இல்லையெனில் வாணிபம் செய்ய இயலாது. மன்னர்களுக்கு உதவிசெய்து உற்சாகப்படுத்த வேண்டும். இல்லையெனில் வாழ்க்கை நடத்தமுடியாது.

ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கு ராணுவமும், வாணிபமும் தான் முக்கிய காரணமாக இருக்க வேண்டும். இவைகள் சரியாக இருந்தால்தான் மதமும், கடவுள் வழிபாடும் மலர்ச்சியாக இருக்கும்.

மதம் சரியாக இருந்தால்தான். எல்லா கலைகளுக்கும் மரியாதை கிடைக்கும். ஆடல், பாடல், ஓவியம், சிற்பம் கவிதைகள் என்று கலைகள் நன்கு இருந்தால்தான், மக்கள் சுமுகமாக இருப்பார்கள். மக்கள் சுமுகமாகவும், சந்தோஷ

மாகவும் இருப்பதுதான் அரசனுக்கு பலம். வணிகனுக்குக் கொண்டாட்டம்.

குணசேகரா, நாம் பல்லவர்களல்ல. தமிழர்கள். தொண்டை நாட்டு தமிழர்கள். முன்பு போலில்லாமல் வட மொழியை ஆட்சி மொழியாக வைத்திருந்தாலும் பல்லவ மன்னர்கள் தமிழை நன்கு பேசுகிறார்கள். சைவத்தை வளர்க்கும் தமிழ் பாட்டுக்களை பிரதி எடுக்க மானியம் கொடுத்திருக்கிறார்கள்.

குணசேகரா, இருபது வயதில் உனக்கு அரசரைப் பார்க்க வேண்டுமென்று ஆசை வந்தது பற்றி எனக்கு சந்தோஷம். மன்னர் ராஜசிம்மன் உன்னைவிட பதினைந்து வயது பெரியவர். அவரைச் சந்திக்க நேர்ந்தால் பணிவோடு நடந்து கொள்.

வணிகர், மது அருந்துவது தவறல்ல. ஆனால் பொது இடங்களில் அருந்தாதே. தேவரடியார்களோடு பேசுவது தவறல்ல. ஆனால் பட்டப்பகலில் பலர் பார்க்க திரியாதே. வாழ்க்கை உல்லாசம்தான். ஆனால் உழைப்பவர்தான் உல்லாசமாக இருக்க வேண்டும். இடைவிடாது உல்லாசியாக இருப்பவன் உழைக்க லாயக்கற்றுப் போவான். உழைக்க லாயக்கற்றவனை உலகம் உதாசீனப்படுத்தும். உலகத்தால் உதாசீனப்படுத்தப்பட்டவன், வாழும்போதே இறந்தவனுக்கு ஒப்பாவான்.

குணசேகரா, உன் இளம்வயதில் அரசரோடு நட்பு வைத்துக் கொண்டால், மத்திமவயதில் உன் வியாபாரத்திற்கு அது மிகவும் உதவும். இப்போது உடனடியாக அரசிடமிருந்து எந்த உதவியையும் எதிர்பார்க்காதே. மாறாய், அரசருக்கு உதவி செய். அவருக்கு என்ன செய்தால் உதவியாகும் என்று யோசித்து செய்.



குணசேகரா, மன்னரின் பண்டகசாலை துடைத்து வைக்கப்பட்டிருக்கிறது. மன்னர், சிற்றரசர்களிடமிருந்து பெரிய உதவிகளை எதிர்பார்க்கிறார்,

மயிலை, திருவல்லிக்கேணியில் தெரியவில்லை. ஆனால் காஞ்சியில், காஞ்சிக்கு தெற்கே, மெல்ல பஞ்சம் பரவி வருவதாக அறிகிறேன். இதையும் கவனத்தில் வைத்துக் கொண்டு மன்னரிடம் பேசு.''

அவர் பேசியதை குணசேகரன் நண்பர்களிடம்சொல்ல, அவர்களும் கவனமாக கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால், ராஜசிம்மன் என்கிற பல்லவ அரசரை, தகப்பனாரைவிட, பாட்டனாரைவிட பல மடங்கு கெட்டிக்காரரான அந்த மன்னரை இவ்வளவு விரைவில் இவ்வளவு அருகில் பார்ப்போம் என்று அந்த மூவருமே நினைக்கவில்லை.

மன்னர் எளிமையானவர் என்று மற்ற வணிகர்கள் சொன்னார்கள். ஆனால், இப்படி சிற்பிகளோடும் கல் தச்சர்களோடும் ஒரு குடை, கொடி கூட இல்லாமல் கலந்து நிற்பாரென்று நினைக்கவே இல்லை.

மன்னரின் பணிவு குணசேகரனின் நெஞ்சைத் தொட்டது. ஒரு மன்னவரே இவ்வளவு பணிவோடுஇருக்க வேண்டுமென்றால், நான் எவ்வளவு பணிவோடு இருக்க வேண்டும்.

குணசேகரன் தளர்ந்து உட்கார்ந்தான். யாரோ அவனை முதுகில் தட்டி எழுப்பினார்கள்.

மன்னர் எழுந்து நின்றார். மறுபடி கைகூப்பினார். அவர் கண்களிலிருந்து நீர் ஆறாக பெருகி வழிந்தது.

பல்லவபுரத்திலிருந்து ஒரு மாட்டு மந்தை குன்றை நோக்கி வந்து கொண்டிருந்தது. அதிலிருந்து ஒரு பசுவும் கன்றும் பிரிந்து மலை நோக்கி ஓடி வந்தன. மக்கள்

நின்றிருந்த இடத்திற்கு அருகே வந்து நின்றன. சொல்லி வைத்தாற்போல் இரண்டும் மூத்திரம் பெய்தன.

''நல்ல சகுனம், நல்ல சகுனம்'' பலபேர் உரக்க கத்தினார்கள்.

''மூத்திரம் நிற்பதற்குள் கல்லை பிளந்து விடுங்கள்'' ஒரு முதியவர் குரல் கொடுத்தார்.

ஸ்தபதி நீண்ட இரும்பு சுத்தியலை எடுத்துக்கொண்டார். மன்னரைப் பார்த்து அனுமதி கேட்டார். சர்வேஸ்வரா என்று சுத்தியலை ஓங்கி தூக்கினார். பெண்கள் குலவையிட்டனர். எக்காளம் ஒலித்தது. மணி ஒலிக்கப்பட்டது. சிறுபறை முழங்கப்பட்டது. முழு பலத்தோடு ஸ்தபதி நீண்ட தடிமனான அந்த இரும்பு ஆணி மீது ஓங்கி அடித்தார். பாறைக்கல் பளீரென்று பிரிந்தது. துளையிட்ட, இடங்களில் நேர் கோடாய் பிளந்தது.

இன்னொரு ஆணியில் இரண்டாம் முறை அடிக்க அங்கேயும் துளைகள் வழியே பாறை பிரிந்தது. ஒரு தூண் உயரத்திற்கு செவ்வகக் கல்லாய் பாறை புரண்டு மண்ணில் விழுந்தது.

புரண்டு விழுந்த பாறைக்கு அடியே சட்டென்று கட்டைகள் கொடுத்தார்கள். எல்லோரும் அந்த பாறையை தொட்டு கும்பிட்டார்கள்.

பாறை முழுவதும் பெண்கள் மஞ்சள் பூசினார்கள். ஆண்கள் திருநீறு வருடினார்கள். குங்குமம் அப்பினார்கள். அடியே கயிறு கொடுத்து, குறுக்கே கம்பு கொடுத்து, முப்பது நாப்பது பேர் சேர்ந்து தோள் கொடுத்து குன்றிற்கு கீழே இறக்கிப் போனார்கள். நெல் அறுத்த வயல்வெளியில் படுக்கப் போட்டார்கள்.

அதற்கருகே சவுக்கு கம்புகளை நட்டு, மூங்கிலைபரப்பி மடமடவென்று கூரை போட்டார்கள். தென்னை ஓலையை



முதலில் போட்டு, அதற்கு மேல் காய்ந்த புல்லை பரப்பினார்கள்.

சிற்பிகள் அரசரிடம் உளியையும், சுத்தியலையும் கொடுத்து, வாங்கிக் கொண்டார்கள். அவரவர்களுக்கு பொற்பை தரப்பட்டது.

கீழே, சிற்பிகள் இறங்கிப் போன சிறிது நேரத்தில், நமசிவாய சப்தம் கேட்டது. சிற்றுளியால் செதுக்கும் ஓசை உடனே கேட்டது.

மேலே, மண்வாரி சிலர் பாறை தேட, தேடிய பாறையை கல்தச்சர்கள் துளையிட, ஸ்தபதி ஒரே அடியில் அதை இரண்டாய் பிளக்க, கூலி ஆட்கள் அதை கீழே கொண்டு போக, சிற்பிகள் அதை தூணாகவும் படியாகவும் உருவாக்க, பெண்களில் சிலர் சமையல் செய்ய, வேறு சில பெண்கள் ஆண்களுக்கும் உதவி செய்ய, பல்லவபுரத்து மக்கள் கூடி நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

பெரிய பெரிய துணிக்குடைகளையும், தாழங்குடைகளையும் கல்தச்சர்கள் வேலை செய்யும் இடத்தில் நட்டு வைத்தார்கள். ஏரித் தண்ணீரை முகர்ந்து வந்து வடிகட்டி, நன்கு காய்ச்சிய பிறகு ஆற வைத்து, சுக்கும், துளசியும் போட்டு குடிக்க கொடுத்தார்கள். கரும்பு பிழிந்து. இஞ்சி சேர்த்து பருக கொடுத்தார்கள்.

குன்றுக்கு கீழே, கூரைக்கு அடியில் உணவு பரிமாறப்பட்டது.

மன்னர் எதிரே கல்தச்சர்களை வைத்துக் கொண்டார். ஸ்தபதிகளுக்கும். சிற்பிகளுக்கும் நடுவே அமர்ந்து கொண்டார். அவர் பார்த்த பல கோயில்களை பற்றி அவர்களிடம் வியந்து சொன்னார்.

''நான் சிறிது சிரம பரிகாரம் செய்து கொண்டு. இருட்டும் முன்பு காஞ்சிக்கு புறப்பட்டு விடுவேன். நள்ளிர வுக்கு முன்பு அங்கு போய் சேர்ந்து விடுவேன்.

இங்கு என்னென்ன தேவை என்று எனக்குப்புரிகிறது. எனினும், உங்கள் தேவைகளை ஓலை நறுக்கில் எழுதி, ஒரு பையிலிட்டு என்னிடம் கொடுங்கள். அது உங்களை அடைய வேண்டிய ஏற்பாட்டை உடனே செய்கிறேன். பல்லவபுரத்து மக்கள் உங்களை கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொள்வார்கள். பிரச்சினை எதுவானாலும் ஊர் தலைவரை அணுகுங்கள்.''

அரசர் உணவு முடித்து, கை கழுவி, வாய் கொப் பளித்து. ஒரு வேப்ப மரத்துக்கு கீழே போடப்பட்ட கட்டிலில் படுத்துக் கொண்டார் சட்டென்று எழுந்து ''அந்த மூவரும் சாப்பிட்டாயிற்றா?'' என்று வினவினார்.

''கந்தசேனன், குணசேகரன், சதாசிவ நம்பி இந்த மூவரும் உணவு எடுத்துக் கொண்டார்களா?''

''உங்கள் பந்தியிலேயே உட்கார்ந்து முடித்து விட் டார்கள்'' பதில் வந்தது.

''நல்லது என்னோடு காஞ்சி நகரம் கிளம்ப அவர் களும் தயாராக இருக்கட்டும்.''

ஒன்றே கால் நாழிகை அரசர் அயர்ந்து தூங்கினார். கல்தச்சர் கூட்டமும் சுருண்டு படுத்துக் கிடந்தது.

மன்னர் 'பளிச்' சென்று எழுந்தார். முகம் கழுவிக் கொண்டார் திருநீறு பூசினார். காய்ச்சிய பாலும் அப்பமும் உண்டார். குன்றை நோக்கி கையெடுத்துக் கும்பிட்டார். ஸ்தபதியை தனியே அழைத்துப்போய் பேசினார். தழுவிக் கொண்டு விடை பெற்றார்.



கருப்பு தலைப்பாகை அணிந்த போர் வீரர்கள் சூழ, பல்லவபுரம் விட்டு கிளம்பினார் 'பின் தொடர்ந்து வருக' என்று மூவரையும் பார்த்து கைகாட்டினார்.

அவர் குதிரையைத் தொடர்ந்து படைவீரர்கள் போக படையைத் தொடர்ந்து மூன்று நண்பர்களும் போனார் கள். காஞ்சிபுரத்து எல்லையை அடையும் வரை ஒரு குதிரையும், ஒரு கணமும் நிற்கவில்லை.

# 2

ஆச்சரியப்படும் விதத்தில் அந்த அந்தணர் நல்ல நிறமாக இருந்தார். திராவிட தேசத்தில், அதுவும் இந்த தொண்டை நாட்டில் இந்த நிறத்தில் மனிதர்கள் அபூர்வம். வடதேசத்து வடமர்கள் என்கிற ஆரியர்களிடம் தான் இந்த நிறம் உண்டு.

அவர் நிறம் மட்டுமில்லை. தோலும் வழவழப்பாக இருந்தது. சந்தனக்கட்டி போன்ற அந்த நிறத்தில் சிறிய காயம் ஏற்பட்டாலும் சிவந்து தெரிந்தது. உடம்பு மெலிந்திருந்தது. விரல்கள் நீண்டு இருந்தன. அவரிடம் ஒரு சின்ன பரபரப்பு எப்போதும் இருந்தது.

''டேய்,'' என்று யாராவது யாரையாவது அதட்டி னால் இவர் அதிகம் மிரண்டார். என்ன சப்தம் என்று திடுக்கிட்டு திரும்பினார். அரண்மனை வாசலிலுள்ள எல்லா காவலர்களையும் மிரட்சியாக கவனித்தார். அடிக்கடி வணங்கினார்.

அந்தணர்கள் பயந்தவர்கள்தான். இவருக்கு பயம் அதிகம் இருந்தது.

இவர் பயத்தை புரிந்து கொண்ட காவலர்கள், இவரை அதிகம் பயமுறுத்தினார்கள். இடது கையிலுள்ள ஈட்டியை வலது கைக்கு மாற்றினார்கள். அவர் பயந்தார். கத்தியை உறையிலிருந்து எடுத்து அதன் பளபளப்பைக் காட்டினார்கள். அவர் நடுங்கினார்.

காலையில் குடித்த மதுவின் வாசனையை அவர் மீது ஊதினார்கள் அவர் மூச்சுத்திணறி முகம் பொத்திக் கொண்டார். அவர்கள் வாய்விட்டு சிரித்தார்கள். அவர் முகம் வெளிறினார்.

அவர் குடுமியும், தாடியும்தான் அவரை ஆண்மகன் என்று காட்டியதே தவிர, மற்ற அசைவுகளெல்லாம் பெண்ணின் சாயலைத்தான் ஒத்திருந்தன.

''என்ன வேண்டும்?'' வாயில் காவலன் அதட்டினான்.

''மன்னரைப் பார்க்க வேண்டும்'' அவர் மெல்லிய குரலில் பதில் சொன்னார்.

நண்பர்கள் மூவரும் காஞ்சி மாநகர் கோட்டை வாசலில் கதவு தாண்டி இருக்கின்ற காற்றோட்டமான அறையில் உட்கார்ந்தபடி, அவரை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''எதற்காக மன்னரைப் பார்க்க வேண்டும்?''

''ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்.''

''என்ன முக்கியமான விஷயம்?''

''அதை மன்னரிடம்தான் சொல்ல வேண்டும்.''

''உங்கள் பெயரென்ன?''

''பூசலார்.''

''பூசலாரா? என்ன அர்த்தம் இதற்கு?''



''பூசலே இல்லாதவர். எவரோடும் சண்டையே போடாதவர். பிணக்கே கொள்ளாதவர்.''

''அப்படியா. வாழ்க்கையே இல்லாதவர் என்றும் பெயர்வைத்துக் கொள்ளலாமே?'' காவலாளி எகத்தாளத் தோடு சொன்னார்.

''புரியவில்லையே''

''பூசலும், பிணக்கும் இல்லாத வாழ்க்கை என்ன வாழ்க்கை?''

அந்த காவலாளி ஈட்டியின் முனையை தரையில் குத்தினான். அவர் நகர்ந்து சொன்டார்.

''இவர் பொய் சொல்கிறாரப்பா. பெயர் மட்டும் தான் வண்ணமாக வைத்துக் கொண்டிருக்கிறார். மற்றபடி பூசலும், பிணக்கும் இருக்கத்தான் செய்யும் ஐயா. உங்களுக்கு மனைவி, மக்கள் இருக்கிறார்களா?''

''இல்லை. நான் திருமணமே செய்து கொள்ள வில்லை.''

''பூசலுக்கு பயந்தா?'' வாயில் காவலாளிகள் வியந்தார்கள்.

''இல்லை இறைபணி மட்டுமே வாழ்க்கை என்று வைத்துக் கொண்டேன் வேறு எதற்கும் மனதில் இடமில்லை.''

''என்ன இறைபணி?''

''வேதம் ஓதுதல் பிறரை ஓதுவித்தல், பிறரிடம் போய் யாசித்து நிற்றல், யாசிக்கும் போது அதிகம் கொடுத்தால் அதை மற்றவரிடம் கொடுத்து விடுதல், வேள்விகள் செய்தல். வேள்விகள் செய்வதற்கு உதவியாக இருந்தல்''

''உமக்கு என்ன வயது?''

''நாற்பத்தி மூன்று''

''நாற்பத்தி மூன்று ஆண்டுகளாக இதுதான் செய்து வருகிறீர்களா?''

''ஆமாம்.''

''இதனால் என்ன லாபம்?''

''உலகம் நன்மை அடையும். மக்கள் அமைதியாக இருப்பார்கள்.''

''என்னை நம்பச் சொல்கிறீர்களா? இந்த உலகம் எப்போது நன்றாக இருந்தது. கடந்த மூன்று தலைமுறைகளாக எத்தனை போர்கள். எவ்வளவு மரணங்கள். எவ்வளவு இழப்புகள் உங்களுக்கு ஒன்று தெரியுமா. அந்தணரே. மூலதன பண்டாரத்தில் கை இருப்பு இல்லை. அரசர் மூன்று மாதமாக எங்களுக்கு கூலி தரவில்லை. வரி வசூலானால்தானே கூலிதர முடியும். வசூலுக்குப் போனால், காது கொள்ளாத அழுகை, பிணம் விழுந்தது போல் பேரழுகை. எவரிடமும் காசு இல்லை.

மழை இல்லை. நெல் விளையவில்லை. தொண்டை நாட்டில் சிறிதளவு விளைச்சல் இருக்கிறது. சோழ நாடு சுத்தமாய் வறண்டிருக்கிறது. பாண்டியநாடு வர்க்கடத்தின் உச்சம். மக்கள் செத்து விழுகிறார்கள். நீரின்றி ஆடுகளும், மாடுகளும் மடிகின்றன. கொள்ளை நோய்கள் பரவ ஆரம்பித்து விட்டன.

இந்த நேரம் நீங்கள் இங்கு நின்று உலக நன்மைக்காக பூஜை செய்வதாக சொல்கிறீர்களா? நான் சொல்கிறேன் உங்களைப் போன்ற அந்தணர்கள். உழைக்காமல் ஏமாற்றி தின்பதால்தான் ஊரில் பஞ்சம் வந்திருக்கிறது,''

''பஞ்சத்திற்கு நான் காரணமில்லையப்பா.'' அவர் பவ்யமாக மறுத்தார்.

''பிறகு யார் காரணம்? கடவுளா?''



''இல்லை. கடவுளும் காரணமில்லை. பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மழை ஒரு மாதம் தள்ளிப் போகும். வெய்யில் அதிகம் காயும். வெய்யில் அதிகம் காய்ந்த அந்த வருடம் மழை பலமாக இருக்கும், இந்த வெய்யில் மழை அதிகமானதால் பயிர் சேதம் இருக்க வாய்ப்புண்டு.

இது தவிர, பருவம் தப்பிய மழையால், பூச்சியும், மழை ஒரு மாதம் தள்ளியதால் எலிகளின் தொந்தரவும் அதிகமாக இருக்கும். அரசாங்கம் விழிப்பாக இருந்தால், இவை அனைத்தையுமே தடுத்துவிடலாம்.''

''எப்படி தடுப்பது?''

''பனிரெண்டு வருடத்திற்கு ஒருமுறை மழை தப்பும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி தப்பினாலும், அதனால் பெரிய பாதிப்பு ஏற்படாமல் இருக்க, செய்யப்படும் சோம யாகத்தில் கலந்து கொள்ள வேண்டும். அரசரும், அரச அதிகாரிகளும் விரதம் இருக்க வேண்டும். மதுவருந்தாமல், மாமிசம் உண்ணாமல், மாது சேராமல் அடக்கமாக இருக்க வேண்டும். இம்மாதிரி அரசும், அரச அதிகாரிகளும் கடைபிடித்தால் பஞ்சம் வராது. வந்தாலும் பாதிக்காது.''

''இப்போது வந்ததுக்கு காரணம்?''

''அரசும், அரச அதிகாரிகளும்.''

''என்ன திமிர் உனக்கு. கத்திக்கு பயந்ததுபோல் நடித்துவிட்டு, எங்களையே குற்றம் சாட்டுகிறாயா?''

''நான் கத்திக்கு பயப்படவில்லை.''

''பிறகு?''

''ஒரு அருவருப்பு.''

''யார் அருவருப்பு. கத்தியா, நாங்களா?''

''இந்த பார்ப்பனர்களிடம் வாய் கொடுக்காதே என்று பலமுறை உனக்கு சொல்லியிருக்கிறேன்'' என்ற படி வேறொரு காவலன் அருகே வந்தான்.

''பயிர் செழித்தால் பார்ப்பனர்கள். பஞ்சம் வந்தால் மறவர்களா? மறவர்கள் என்று நேரடியாக சொல்லாமல் ஆட்சியாளர்கள் என்று சூசகமாகச் சொல்கிறாயா? வேலி ஓணான்போல் இருந்து கொண்டு, எவ்வளவு அலட்சியமாக வார்த்தைகளைக் கொட்டுகிறாய்?'' அவர் அருகே போய் முறைத்தான்.

''சொல் எதற்காக மன்னரைப் பார்க்க வேண்டும்?''

''அதை மன்னரிடம்தான் சொல்ல வேண்டும்.''

''அப்படியானால் உன்னை அனுமதிக்க முடியாது. விலகி நில். வழிவிடு. யாரங்கே, வாசலிலே கூட்டமாய் இருப்பவர்களை பிரம்பால் அடித்து விலக்குங்கள்.'' அந்தணரை அதட்டிய தலைமைக் காவலாளி கோபமாய் குரல் கொடுக்க,கோட்டை வாசலிலுள்ள நூறு, நூற்றைம்பது பேரை பிரம்பால் அடித்து, வீரர்கள் விலக்கினார்கள்.

கூட்டம் விலகவும், கோட்டையின் உட்கதவு திறக்கவும் சரியாக இருந்தது. வெளிக்கதவுக்கும், உட்கதவுக்கும் இடையே ஒரு திறந்தவெளி இருந்தது. அந்த திறந்த வெளியில் ஒரு பல்லக்கு இறக்கி வைக்கப்பட்டது. அந்த பல்லக்கிலிருந்து, சிறியதலையும், பெரிய உடம்புமாய் ஒரு உருவம் இறங்கியது. அது அரசரின் அவைப்புலவர் தண்டி.

பதவி அவைப்புலவரே தவிர, அவர் நிர்வாகத்தில் அரசருக்கு எல்லா வகையிலும் அடுத்தவராக இருந்தார்.



''எதற்கு இத்தனை கூட்டம் இங்கே. என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்?'' தண்டி அதட்டினார்.

தண்டி சொன்னதுதான் தாமதம், வீரர்கள் மக்களை மிக மோசமாக நடத்தினார்கள். கிட்டத்தட்ட கழுத்தைப் பிடித்து தள்ளினார்கள். ஒரு பெண் எதற்கு தள்ளுகிறாய் என்று கேட்டு, பளீரென்று அடிபட்டாள்.

பூசலார் முன்னும், பின்னும் அலைமோதினார். அடி விழுந்துவிடுமோ என்ற பயத்தில் இடதும், வலதுமாக ஓடினார். கோட்டைக் கதவுக்கு அருகே இருந்த அறைக்குள் ஓடிப்போக முயற்சி செய்தார்.

அவர் உள்ளே வருவதை ஒரு வீரன் தடுக்க, அதுவரை அமைதியாக இருந்த சதாசிவநம்பி, அந்த வீரனை விலக்கி, அவரை உள்ளே இழுத்துக் கொண்டான்.

அந்த வீரனால், சதாசிவநம்பியை எதிர்த்து எதுவும் செய்ய முடியவில்லை. அந்த அந்தணரை கோட்டைக்கு வெளியே தள்ள முடியவில்லை.

நம்பியின் பிடி உறுதியாக இருந்தது. அவனுக்கு ஒரு வீரனை சமாளிக்கத் தெரிந்திருந்தது. சொடுக்கு நேரத்தில் தடுக்கவும், தள்ளவும் அவன் கற்றிருந்தான்.

அந்த வீரன் தள்ளப்படுவதைப் பார்த்து, இன்னும் இரண்டு வீரர்கள் அந்த இடம் நோக்கி நகர, அவர்களையும் நம்பி, தடுத்து நிறுத்தினான். வேலைப் பிடுங்கி தரையில் போட்டான். தரையில் கிடந்த வேலை எடுக்க முடியாமல் மிதித்து நின்றான்.

வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்த தண்டியின் கண்கள் இந்த சண்டையை பார்த்து விட்டன.

'யார் இந்த அந்தணன்?' கோபம் வந்தது.

''ஏய்'' பிளிறலாய் குரல் கொடுத்தார். கூட்டம் சட்டென்று அமைதியாயிற்று.

''நீ யார் அவர்களைத் தடுப்பதற்கு?''

''அந்தணனும், நோயாளிகளும், பெண்களும், குழந்தைகளும், சிறுவர்களும் துன்புறுத்தப்படும்போது யார் வேண்டுமானாலும் உள்ளே புகுந்து தடுக்கலாம். எவரை வேண்டுமானாலும் தடுக்கலாம்.''

''நீ எத்தனை பேரை தடுப்பாய்?''

''இருபது பேரை தடுப்பேன்.''

தண்டி அவனை உற்றுப் பார்த்தார்.

''இவனை கைது செய்யுங்கள்'' அலறலாய் கட்டளை இட்டார்.

சதாசிவ நம்பியின் கைத்தடிக்குள் ஒரு கத்தி இருந்தது. மளமளவென்று திருகு நீக்கி, கத்தியை உருவினான். இடது கையில் கோலும், வலது கையில் கத்தியுமாக நின்றான். சடேரென்று இரண்டடி முன்னேறி சுழற்றினான். கோட்டை வீரர்கள் விலகி ஓடினார்கள்.

கோட்டை வீரர்கள் போர் வீரர்கள் அல்ல. போர் வீரர்கள் கோட்டை காவலுக்கு வருவதேயில்லை. போர் வீரர்களுக்கு இங்கிதம் தெரியாது. இங்கிதம் தெரிந்த கோட்டை வீரர்களுக்கு போர் தெரியாது.

அவன் கம்பு சுழற்றலுக்கும், கத்திவீச்சுக்கும் கோட்டை வீரர்கள் பயந்தார்கள். தண்டி கோபமானார்.

''நிறுத்து. யார் நீ? என்ன செய்கிறாய்?''

''என் பெயர் சதாசிவநம்பி. மன்னர் அழைத்ததால் வந்திருக்கிறேன்.''

''மன்னர் உன்னை எதற்கு அழைத்திருக்கிறார்?''

''அது மன்னரைக் கேட்கவேண்டிய கேள்வி.''



''எதற்கு அந்த அந்தணரை உள்ளே அழைத்திருக்கிறாய்?''

''ஏற்கனவே பல்லவ நாட்டில் பஞ்சம். இதில் அந்தணர்களை அடித்து வரம் வாங்கிக் கொள்ள வேண்டுமா? விசாரித்து அனுப்பிவிட வேண்டியது தானே?''

தண்டி கூர்மையாக அவனைப் பார்த்தார். இரு இரு உன்னை கவனித்துக் கொள்கிறேன் என்கிற கோபம் அதில் இருந்தது.

''அந்த அந்தணரை விசாரித்தீர்களா?''

''விசாரித்தோம். முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறார்'' தலைமைக் காவலாளி பதில் சொன்னான்.

''மன்னரை பார்க்க வேண்டுமென்று ஒரு அந்தணர் கேட்பதில் என்ன முரண் இருக்கிறது?''

''எதற்கு பார்க்க வேண்டுமென்று சொல்லவே இல்லை.''

''இப்போது சொல்லுங்கள். எதற்கு பார்க்க வேண்டும்?'' தண்டி அதட்டினார்,

''அதை மன்னரிடம் தான் சொல்ல வேண்டும்'' பூசலார் மிருதுவாகப் பேசினார்.

''என்னிடம் சொன்னால் என்ன?''

''உங்களால் அந்த உதவியை செய்ய முடியாது.''

''ஏன்?''

''நீங்கள் மன்னரிடம் கேட்டுதான் அந்த உதவியை செய்ய முடியும்.''

''நீர் என்ன சாளுக்கிய தேசத்தின் மீது படையெடுக்கவா மன்னரிடம் உதவி கேட்கப் போகிறீர்?''

கூடியிருந்தவர்கள் வாய்விட்டு சிரித்தார்கள்.

''நான் கேட்கப் போவது அதைவிட பெரிய விஷயம்'' பூசலார் மிருதுவாக பேசினார்.

சட்டென்று அங்கே ஒரு மௌனம் நிலவியது. தண்டி காயப்பட்டு, கோபமானதை உணர முடிந்தது.

''நீங்கள் மன்னரைப் பார்க்க முடியாது. இந்த அந்தணனை திருப்பி அனுப்புங்கள்'' தண்டி உத்தர விட்டார்.

''நான் இந்த கோட்டை வாசலைவிட்டுப் போவதாக இல்லை. இன்றில்லையேல் நாளை, நாளை இல்லையேல் மறுநாள். மன்னர் இந்த வாசலைத் தாண்டித்தானே போக வேண்டும். அப்போது மன்னரை கைகாட்டி நிறுத்துவேன்'' இப்போதும் பூசலார் அமைதியாகத்தான் பேசினார்.

''கோட்டை வாசலில் ஒருவர்கூட நிற்கக் கூடாது. காஞ்சிமாநகரத்தில் எந்த இடத்திலும் மூன்று பேருக்கு மேல் நிற்கக் கூடாது. அத்துமீறி மன்னரை எவர் பார்க்க முயன்றாலும், அவர் யாராக இருந்தாலும் பிரம்பால் அடியுங்கள். இன்னொரு முறை அந்தணன், மன்னரைப் பார்க்க முயற்சி செய்தால், இவரை வல்லத்துகோட்டைக்கு அழைத்துப் போய் அங்கு பாதாள சிறையில் வையுங்கள்.''

''எதனால் இவ்வளவு கடுமையாக நடந்து கொள் கிறீர்கள்?''

''இது பஞ்சகாலம். மன்னருக்கு பிரச்சனைகள் அதிக மிருக்கின்றன. உங்களைப் போன்று விலாசமில்லாதவர் கள் அவருக்கு தொந்தரவு கொடுக்க விடமாட்டோம். சீக்கிரம் இவரை அப்புறப்படுத்துங்கள்.''

தண்டி கைகாட்ட, பூசலாரை அந்த அறையிலிருந்து வீரர்கள் தரதரவென்று இழுத்துப் போனார்கள்.



''நீங்கள் யார்?''

''அவர்கள் பல்லவபுரத்திலிருந்து மன்னரோடு வந்த வர்கள். மன்னரின் விருந்தாளிகள்.''

''அட, வல்லத்து இளவரசனா? நீதான் கோயில் கட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டாயா? இன்று பிற்பகலுக்கு மேல் நீயும், உன் வணிககுல தோழனும் மன்னனைப் பார்க்கப் போகலாம்'' நம்பியை உற்றுப் பார்த்துக் கொண்டே தண்டி பேசினார்.

''நானும் அவர்களோடு வந்தவன்தான்'' சதாசிவ நம்பி பதட்டத்தோடு சொன்னான்.

''தெரியும். ஆனால், உன்னை அனுமதிப்பதற்கு இல்லை.''

''மன்னர் என்னையும் வரச்சொன்னார்.''

''இருக்கலாம். ஆனால், நான் உன்னை அனுமதிக்க மாட்டேன். உன்னைவிட வலுவான ஒரு க்ஷத்ரிய இளவர சனும், ஒரு வணிக குல வாலிபனும் அமைதியாக இருக்கும் போது, நீ மட்டும் உள்ளே புகுந்து பிரச்சினையை பெரி தாக்குகிறாயே. பிரச்சினையை பெரிதாக்குபவர்களை எப்படி மன்னரிடம் அனுப்ப முடியும். எனவே, நீ உன் ஊருக்கு திரும்பலாம். உன் நண்பர்களுக்கு இங்கு வேலை இருக்கிறது.''

''நான் மன்னரிடம் விடை பெற்றுத்தான்போவேன்.'' சதாசிவநம்பி எகிறலாகப் பேசினான்.

''அந்தணன் என்றும் பார்க்காமல், அடித்து நொறுக் கச் சொல்வேன். குதிரை ஓட்ட தெரிந்துவிட்டால், எல்லாம் தெரிந்துவிட்டதாய் நினைப்பா?

கழியில் திருகு கத்தி வைத்திருந்தால், போர்வீரன் என்று எண்ணமா? உன் குலத்திற்கேற்ற அடக்கமில்லை.

ஆயுதம் எடுத்த அந்தணன் ஆபத்தானவன். ஒருக்காலும் உன்னை மன்னரிடம் அனுப்ப முடியாது.

யாரங்கே, இந்த இரண்டு இளைஞர்களையும் மன்னரிடம் அழைத்துச் செல்'' தண்டி கட்டளையிட்டார்.

அந்த இளைஞர்கள் அதிர்ந்து போனார்கள்.

''சதாசிவநம்பி, அவசரப்படாதே'' இளவரசன் கந்தசேனன் அடிக்குரலில் பேசினான்.

''நான் மன்னரிடம் சொல்லி, உன்னை வரவழைக்கிறேன்.''

சதாசிவநம்பிக்கு இந்த பேச்சும் பிடிக்கவில்லை. மன்னரிடம் போக மாட்டேன் என்றல்லவா சொல்ல வேண்டும். நம்பி இல்லாமல் நகரமாட்டேன் என்றல்லவா பேச வேண்டும். ஏன் கந்தசேனன் இப்படி பேசுகிறான். கோபம் வந்தது.

குணசேகரன் இதை புரிந்து கொண்டான்.

''மன்னர் அழைத்து, போகாமலிருந்தால், அது மரியாதை இல்லை. உன்னோடுதான் வருவேன் என்று சொன்னால் அது தவறாகவும் போகக்கூடும். எனவே, நாங்கள் மன்னரைப் பார்க்க கிளம்புகிறோம். உன்னைப் பற்றி நிச்சயம் சொல்கிறோம். தவறாக எண்ணாதே.''

''தவறாக எண்ணவில்லை. நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டுப் போ.''

''கோட்டை வாசலிலேயே காத்திரு''

''எத்தனை நாள்?''

''எதற்கு நாள் கணக்கு. இன்று மாலைக்குள் உன்னை அழைத்துக் கொள்வோம்.''



''அப்படி அழைத்துக் கொள்ள முடியவில்லை என்றால்?'' சதாசிவநம்பி கேட்டான்.

''அதை பிற்பாடு யோசிக்கலாம்.''

கோட்டை வீரர்களுக்கு உத்தரவிட்டுக் கொண்டே தண்டி இவர்கள் பேச்சை கவனித்துக்கொண்டார். அந்த இளம் வாலிபர்களை வெகு எளிதில் பிரித்துப் போட்டார்.

தண்டி வெளியேற, கந்தசேனனும் குணசேகரனும் உள்ளேபோக, கோட்டை வாசலை விட்டுத் தள்ளிப்போய், மரத்தை சுற்றியிருக்கின்ற மேடை மேல் அவன் அமர்ந்து கொண்டான்.

அந்த அந்தணர் பூசலார், இன்னும் சற்று தள்ளி வேறொரு மரத்தின் வேரில் மிகுந்த சிந்தனையோடு அமர்ந்திருந்தார். அவரிடம் ஆறுதலாய் இரண்டு வார்த்தை சொல்ல வேண்டும் என்று ஆசை வந்தது.

சதாசிவநம்பி மேடையைவிட்டு எழுந்து. அவருக் கருகே போய் அமர்ந்து கொண்டான். அவர் அவன் பக்கம் திரும்பவில்லை. அவனோடு பேச முற்படவில்லை. சட்டென்று எழுந்து வேறு ஒரு மரத்தடிக்குப் போய் நின்று கொண்டார்.

சதாசிவநம்பிக்கு இந்த புறக்கணிப்பு ஆச்சர்யமாக இருந்தது. ஏன் இந்த சிழவர் கூட ஒரு நிந்தனையாக இருந்திருக்கிறார் என்று கவலை வந்தது.

''உங்களிடம் சற்று பேச வேண்டும்'' அவன் நகர்ந்து அவருக்கருகே போனான். அவர் முகம் திருப்பிக் கொண்டார்.

''நான் உங்களுக்காக பிரச்சினையில் தலையிட்டேன். நீங்கள் ஏன் முகம் திருப்பிக் கொள்கிறீர்கள்?'' அவன் சுள்ளென்று பேசினான்.

''நான் கேட்டேனா. என் பிரச்சினையில் தலையிடச் சொல்லி உன்னை அழைத்தேனா? இல்லையே. நீயாகத் தலையிட்டு எல்லாவற்றையும் குழப்பிவிட்டாய். அந்த தண்டி என்னை வெறுக்கக் காரணம் நீதான். நீ ஆரவார மாய் நடக்க, தண்டி என்னை புறக்கணித்து விட்டார்.''

''ஒரு அந்தணனை ஒரு அரசவை அதிகாரி அவமரியாதையாக நடத்தியது எனக்குப் பிடிக்கவில்லை. அந்தணனுக்கு அந்தணன் உதவி செய்யவேண்டுமென்று...''

''நிறுத்து. நீ அந்தணனே இல்லை. உன்னிடம் நிறைய தவறுகள் இருக்கின்றன. உன் வியர்வைவாசனை நெடியாகப் போய்விட்டது. உனக்கருகே வந்தால் தலை சுற்றுகிறது. உன்னைத் தொட்டால், நிச்சயம் உடம்பு தடிக்கும். எனக்கு ஜுரம் வரும். தயவு செய்து விலகிப்போ.''

தண்டி செய்த அவமானத்தைவிட பூசலார் செய்தது மிகப்பெரிய அவமானமாக இருந்தது.

''ஏன் அதிகம் பேசுகிறீர்கள்? என்னை உள்ளும், புறமும் தெரிந்ததுபோல் பேசுகிறீர்களே? இவ்வளவு தெரிந்த அந்தணர் தண்டியிடம் கை கட்டுவானேன். கோட்டை காவலனிடம் வாய் குழறுவானேன் உட்கார்ந்த இடத்தில் அரசரை வரவழைத்திருக்கவேண்டியதுதானே'' சதாசிவநம்பி சீறலாய் பேசினான்.

''என் செயல்களை வைத்து என்னை எடை போடாதே. சில சமயம் என் ஆழம் எனக்கே தெரியவில்லை. இந்த வாசலில் எல்லாம் சரியாகத்தான் இருந்தது. உன்னைத் தவிர. ஒரு கோட்டைக் காவலன் அப்படித்தான் நடந்து கொள்வான். அகம்பாவமுள்ள ஒரு அவைப்புலவர், தானே அரசன் என்று வேஷம் போடுவார். நான் நடுங்குவதுபோல் நிற்பேன். நீ மட்டும்தான் அங்கு இயல்புக்கு எதிராய் நடந்தாய், உன் உதவி தேவையில்லை, நீ போகலாம்.''



சொல்லிவிட்டு அவர் நகர்ந்து போனார். திரும்பினார்.

''அந்த திருகு கத்தியை தூக்கிப் போடு. அது உனக்கு ஆபத்தைக் கொடுக்கும்.''

பூசலார் இன்னும் சற்று தள்ளி வேறு ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டார்.

வெய்யில் உச்சிக்குப் போயிற்று. சரிந்தது. ஒரு காசுக்கு கை நிறைய வெள்ளரிக்காயும், கொய்யாப்பழமும் வாங்கினான். ஒரு கிணற்றில் நீர் இறைத்து, எல்லாவற்றையும் கழுவி. தனியே அமர்ந்து சாப்பிடத் துவங்கினான்.

பூசலார் ஏதும் சாப்பிடாமல். மரநிழலில் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

கோட்டை வாசலில் எக்காள சப்தம் கேட்டது. பலமாய் நெடுநேரம் முழங்கியது. மன்னர் வருவதற்கான எச்சரிக்கை அது. எல்லோரும் கோட்டை வாசலை நோக்கிப் போக, பூசலார் எழுந்து நின்றார். இருந்த இடத்தில் இருந்தபடியே கோட்டை வாசலை நோக்கிப் பார்த்தார்.

கோட்டை வாசல் திறந்தது. கருப்புத் தலைப்பாகை வீரர்கள் முன்னால் வர, பின்னால் அரசர் உருவம் தெரிந்தது. குரலும் காதில் விழுந்தது. மன்னர் கோட்டை வீரர்களோடு பேசினார். விஷயங்கள் கேட்டுக் கொண்டார். இன்னும் வீரர்கள் தொடர வெளியே வந்தார்.

இந்த முறை அவரைச்சுற்றி நூற்றுக்கும் மேற்பட்ட குதிரை வீரர்கள் இருந்தார்கள். ஆனால். அவரோடு குணசேகரனோ. கந்தசேனனோ இல்லை.

அரசர் குதிரை சதாசிவநம்பியைக் கடந்தது. சட்டென்று நின்றது.

''நம்பி, உன் நண்பர்கள் இருவருக்கும் முக்கியமான
வேலை கொடுத்திருக்கிறேன். அந்த வேலையை அவர்
களுக்கு கொடுக்கும்படி எனக்குச் சொல்லப்பட்டது.
ஓலை முறி போட்டுப் பார்த்ததில் உன்னை சேர்க்க
வேண்டாமென்று உத்தரவு வந்துவிட்டது. நீ
திருமயிலைக்குத் திரும்பிப் போகலாம். அவர்கள் ஊர்
திரும்ப சில மாதங்கள் ஆகும் அவர்களுடைய பெற்றோர்
களுக்கு என் வீரர்கள் மூலம் தகவல் போகும். போய்வா.''

அரசர் குதிரையைத் தட்டி கிளப்பினார். பூசலாரை
தாண்டும்போது வேகம் குறைத்தார் குதிரை விட்டு
இறக்கினார். பூசலாரை நோக்கி கை கூப்பினார்.

''என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

''கோயில் கட்ட வேண்டும்.''

''என்ன?''

''சிவனுக்கு கோயில் கட்ட வேண்டும்.''

''எங்கே?''

''ஏதேனும் ஒரு இடத்தில்.''

''எதற்காக?''

''மிகப்பெரிய பஞ்சம் வரப்போகிறது. திருவேங்கடம்
முதல், கன்னியாகுமரி வரை கடும் பஞ்சம் நிலவப்
போகிறது. பஞ்ச காலத்தில் சிவன் கோயில் கட்டினால்,
அதன் கொடுமை குறையும்.''

''நீங்கள் யார்?''

''நான் ஒரு அந்தணன்.''

''கோயில் கட்டுவது அந்தணர் வேலை அல்லவே.
அது அரசன் வேலை.''



''அப்படி சட்டமேதுமில்லை.''
''அப்படியா? நீங்கள் கோயில் கட்ட நான் என்ன
செய்ய வேண்டும்.''

''பொருளுதலி செய்ய வேண்டும்.''
''மூன்று தலைமுறைகளாக போர். பல்லவ தேசம்
இருக்கும் நிலமை உங்களுக்குப் புரியவில்லையா?''
''புரிகிறது ஆனாலும், கோவில் பணி நடக்கத்தான்
வேண்டும் அதற்கு மன்னர் உதவத்தான் வேண்டும்.''
''மன்னிக்க வேண்டும் அந்தணரே, உங்களுக்கு உதவ
இயலாது. சிறிதளவு பொன் வாங்கி ஒரு சிறிய கூரையில்
சிவனை வைப்பது எனக்கு விருப்பமில்லை'' மன்னர்
கடுப்பாய் பேசினார்.

''நான் கட்டப்போவது சிறிய கோயில் அல்ல
அந்தணர் மன்னரை ஆழமாய் பார்த்தார்.
மன்னர் ராஜசிம்மன் அவரை கேள்வியாய் நோக்கி
னார்.

''என் கோயில் கற்றளி. கற்றளி. என்றால் கற்கள்
அடுக்கி செய்யப்படும் கோயில். உனது தந்தையைப்
போலும், பாட்டனைப் போலும், உன் மூதாதை மகேந்
திரரைப் போலும் நான் குடவரை கோயிலும் கட்டப்
போவதில்லை. அதாவது கல்லைக் குடைந்து கோயில்
அமைக்கப் போவதில்லை. கற்களை செதுக்கிக் கொண்டு
வந்து, ஆண்குறியும், போனியும் அமைத்து ஒன்றின் மீது
ஒன்றை அசையாது பொருத்தி. பிடிப்பு விடாதிருக்கசாந்து
பூசி மிகப் பிரமாண்டமான கோயில் கட்ட விருப்பம்.

''அந்தணரே, நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது.
இதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.''

''எங்கேநடந்து கொண்டிருக்கின்றன?''

''இப்போதைக்கு சொல்வதற்கில்லை. மறுபடி சொல்கிறேன். கோயில் கட்டுவது அந்தணர் வேலை அல்ல. அந்தணர் வேலை தவம் செய்வது. நீங்கள் போய். இந்த தேசத்திற்காக தவம் செய்யுங்கள். இங்கே வந்திருக்கிற பஞ்சம் அதிகம் வாட்டக் கூடாது என்று பிரார்த்தனை செய்யுங்கள்.''

''நான் பிரார்த்தனையாகதான் கோயில் கட்ட நினைக்கிறேன்.''

''கோயில் கட்டுவது என் வேலை.''

''நடுவே யுத்தம் வந்தால் ஒரு அரசர் என்ன செய்வான். கோயில் பணி என்னாகும்? கோயில் பணி நின்றால் வர்க்கடத்தின் கொடுமை அதிகமாகும்.''

''யுத்தம் வருமென்று சொல்கிறீர்களா?''

''வருவது வழக்கம்தானே என்று சொல்கிறேன்.''

''யுத்தம் வந்தால் பணி பாதிக்காமல் இருக்க தக்க ஆட்களை நியமித்திருக்கிறேன். பணி நிற்காது.''

''ஆட்கள் வைத்து செய்ய இது என்ன மாட்டுத் தொழுவமா? கோயில் ஒவ்வொரு கல்லும் கட்டுபவரின் பெயர் சொல்ல வேண்டும்.''

''சொல்லும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்தணரே இந்த தேசத்தின் பொருட்டு நீங்கள் கொண்ட ஆசைக்கு தலைவணங்குகிறேன். அந்தணரே இதில் ஐம்பது பொன் இருக்கிறது. வேறு ஏதேனும் இறைபணி செய்யுங்கள். நான் சொன்னதுபோல தவம் செய்யுங்கள். கற்றளி என் வேலை.''

மன்னர் ஒரு துணி முடிச்சில் இருந்த காசை அவரிடம் நீட்டினார்.



அந்தணர் சிரித்தார். காசை வாங்கிக் கொண்டார். ''என் கோயில் பணி தொடரும்'' என்றார். அரசர் குதிரை ஏறிப் போனார்.

அருகில் நின்ற சதாசிவநம்பிக்கு தூக்கி வாரிப் போட்டது. ஐம்பது பொற்காசில் கற்றளியா? இந்தப் பொற்காசுகளை வைத்துக் கொண்டு ஏதேனும் ஒரு கிராமத்தில், நிலம் வாங்கலாம். சிறிய வீடு வாங்கலாம். தோப்பு வாங்கலாம். ஆனால் கோவில் பணி எப்படி தொடரும்?

ஆனால் இந்த அந்தணர் கெட்டிக்காரர் போலும். தனக்கு சொந்தமாய் காசு வேண்டுமென்று கேட்காமல், கோவில் கட்ட வேண்டுமென்று சொல்லி காசு வசூலிக்கிற ஜாதி போலும். கோவில் பணி தொடரும் என்பதற்கு அர்த்தம். வசூல் செய்து வாழ்ந்தை நடத்துவேன் என்று அர்த்தம் போலும். என்ன கேவலமான வாழ்க்கை. இவர்களால் அந்தணர்களின் பெயரே கெடுகிறது.

இந்த கேவலத்திற்கு உதவி செய்யப்போக, எனக்கு மன்னரோடு பேசும் வாய்ப்பு தடைபட்டுவிட்டது.

ஐம்பது பொற்காசு வேண்டாமென்று மறுத்திருந்தால், எவ்வளவு மரியாதையாக இருந்திருக்கும். அருகே போய் நாலு வார்த்தை சூடாய் கேட்டுவிட்டு வரவேண்டும்.

அவன் அருகே போய் நிற்க, அவர் பையை பிரித்து, ஒரு பொற்காசை அவனுக்கு நீட்டினார். கோட்டை காவலர்களை அருகே அழைத்து, ஆளுக்கொரு பொற்காசு கொடுத்தார்.

கழுத்தைப் பிடித்து தள்ளியவன், கத்தியை முகத்துக்கு நேரே பிடித்து மிரட்டியவன், சுள்ளென்று பிரம்பால் அடித்தவன், ஏய் குடுமி என்று அதட்டியவன் எல்லோரையும் கூப்பிட்டு காசு கொடுத்தார்.

எப்படி இப்படி வழங்க முடிகிறது. ஒரு பொற்காசுக்கு மூன்று ஆடுகள் வாங்கலாம். ஒரு எருமை வாங்கலாம். ஐந்து கூடை நெல் வாங்கலாம். இடுப்பு புடவையும், மேல் புடவையும் இரண்டு ஜதை வாங்கலாம்.

இவரை திட்டியவர்கள் எல்லோரும் பல் தெரிய அவரை சுற்றிக் கொண்டார்கள்.

''சுவாமி எனக்கு, ஐயா எனக்கு'' என்று கெஞ்சிக் கேட்டார்கள்.

காவலர்களை முடித்துவிட்டு, சுற்றியுள்ள கிராமத்து ஜனங்களுக்கும் அவர் பொற்காசு கொடுத்தார். ஒரு பெண் குழந்தைக்கு பையோடு இரண்டு காசுகள் கொடுத்தார்.

இவர் வழங்குவதைப் பார்த்துவிட்டு, தொலைவிலிருந்து கிழே ஒரு கிழவி ஓடிவந்தாள். வரும் வேகத்தில் சொத்தென்று கீழே விழுந்தாள். மறுபடி எழுந்து புழுதி உடம்போடு அவரிடம் கை நீட்டினாள்.

''அடடா. எல்லாம் கொடுத்துவிட்டேனே. என்னிடம் ஒன்றுமில்லையே.''

''சரி, எனக்கு அதிர்ஷ்டம் இல்லை. மூன்று நாளாய் கோட்டை வாசலிலேயே காத்திருந்தேன். பொற்காசு கொடுக்கும்போது போய்விட்டேன். என் வாழ்க்கை எப்போதும் இப்படிதான். கடவுளுக்கு என் மீது கருணையே இல்லை.''

''அப்படி சொல்லாதே. என் சிவனே, இந்தக் கிழவிக்கு ஒரு பொற்காசு கொடு.''

அவர் கைகூப்பி வானம்பார்த்தார், அந்தப் பெண் குழந்தை தன்னிடமிருந்த இரண்டு காசில் ஒரு காசை கிழவியிடம் நீட்டியது.



''வாழ்க, வளர்க, இந்த தானம் உனக்கு நல்ல புருஷனை கொண்டு வந்து தரும். நீ நெடுங்காலம் சுமங்கலியாய் வாழ்வாய்.'' அவர் வாழ்த்தினார்.

அவரை குழந்தையின் தாய் நமஸ்கரித்தாள்.

''அரசரிடம் உதவி கேட்டு வந்தேன். எனக்கும் என் மகளுக்கும் காசு கொடுத்ததோடு மட்டுமல்லாமல் வாய் நிறைய வாழ்த்தவும் செய்தீர்கள். உங்களைப் போன்ற அந்தணர்கள் இருக்கும்வரை எந்த பஞ்சமும் வராது, வந்தாலும் எந்த பாதிப்பும் இருக்காது. இந்த இரண்டு பொற்காசில் கோழிகள் வாங்குவேன். கீரை பயிர் செய்வேன். ஒவ்வொரு நாள் உணவு உண்ணும்போதும், உங்களை நினைத்துக் கொள்வேன்.''

''அடடா அவ்வளவு வறுமையா? எனக்கு நிலபுலன்கள் இருக்கின்றன.'' ஓடி வந்து காசு கேட்ட கிழவி பேசத் துவங்கினாள்.

''என் புருஷனும், இரண்டு மகன்களும் மன்னருக்காக கல் கொண்டு வர, வெகுதூரம் போயிருக்கிறார்கள். அவர்கள் ஊர் திரும்ப ஒரு வருடமாகும். காசு கொடுக்கிறார்களே என்றுதான் ஓடி வந்தேன். இந்தா இந்த பொற்காசை நீயே வைத்துக்கொள். வேறு ஏதேனும் பயிர் செய்.''

கிழவி தன் பொற்காசை குழந்தையிடம் நீட்டினாள்.

''அவர் வாழ்த்திய பிறகு நான் வாங்குவது நல்லதா. இரண்டு பொற்காசுகள் போதும்.''

அந்த அந்தணர் சிரிப்போடு இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சதாசிவநம்பி சட்டென்று தன் கையிலிருந்த ஒற்றைப் பொற்காசை குழந்தையின் கையில் திணித்தான்.

''பாட்டி நான் கொடுத்துவிட்டேன். நீங்கள் போக லாம்.''

குழந்தையும், தாயும் முகம் மலர்ந்தார்கள். கிழவி கை கூப்பினாள்.

''இதைச் செய்ய உனக்கு இத்தனை நேரமாயிற்றா?'' பூசலார், சதாசிவநம்பியைப் பார்த்து கேட்டார்.

''தனக்கு மிஞ்சி இருக்கின்ற எல்லா விஷயத்தையும் ஒரு அந்தணன் தானம் கொடுத்துவிட வேண்டும். அப்படி கொடுப்பவன்தான் அந்தணன். இன்னும் நீ அந்த திருகு கத்தியை போடவில்லையா?''

''இல்லை''

''போட்டு விடு.''

''ஏன்?''

''அந்தணனுக்கு எதற்கு ஆயுதம்?''

அவன் அந்த கழியை ஒரு ஓடையில் தூக்கி எறிந் தான்.

''என் பெயர் பூசலார். எனக்கு திருநின்றவூர் கிரா மம். மயிலைக்கு போகும்போது என் ஊர் பக்கமாக வாயேன். வாழையும், செந்நெல்லும், கரும்பும் இந்த பஞ்ச காலத்திலும் நன்கு விளைந்திருக்கின்றன. மூன்று குளங்களில் நீர் நிரம்பியிருக்கிறது. குசஸ்தலை ஆற்றிலி ருந்து வரும் கால்வாய், எங்கள் ஊர் பக்கம் வருகிறது. செழுமையான பூமி. வந்து பார். நான் விடை பெறட் டுமா?'' அவர் கை கூப்பினார்.

''கோயில் பணி தொடருமா? எல்லா காசுகளையும் கொடுத்து விட்டீர்களே?''



''நிச்சயம் தொடரும். காசு இருந்தால் கோயில் கட்டிவிட முடியுமா என்ன. கோயில் கட்ட இறையருள் வேண்டும். என் கோயில் பணி தொடரும். நான் வரு கிறேன்.''

பூசலார் மெல்ல வெளியேறினார். கிடைத்த ஐம்பது பொற்காசுகளையும் வாரி வழங்கிவிட்டவர் எவ்விதம் கோயில் கட்டுவார். எங்கே கோயில் கட்டுவார். சதாசிவ நம்பிக்கு புரியவில்லை.

இரண்டு நாட்கள் கோட்டைக்கு வெளியே காத்திருந் தும், நண்பர்கள் வரவில்லை. மூன்றாம் நாள் ஒரு கல் தச்சர் பையன் வந்தான். அவர்கள் அரசரின் ஆணைப் படி, கைலாசநாதர் கோயில் கட்டும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும், அதற்காக ஸ்தபதிகளின் உதவி யோடு மானசாஸ்திரம் என்ற புஸ்தகம் படித்துக் கொண்டி ருப்பதாகவும், இப்போதைக்கு வர இயலாது என்றும் அத னால் அவர் மயிலைக்கு திரும்புவதே நல்லது என்றும் சொல்லி, அவன் வழிச் செலவுக்கு மூன்று செப்புக்காசுகள் கொடுத்து அனுப்பியிருந்தார்கள்.

சதாசிவநம்பி வருத்தமானான். அந்தக் காசை வேண்டாமென்று திரும்பி அனுப்பினான். குதிரையேறி தனியனாய் ஊர்நோக்கித் திரும்பினான்.

பகல் பொழுது பயணிக்கும்போது, பல ஊர்களில் விளைச்சல் சரியில்லை என்பது தெரிந்தது.

குதிரை மீது யார் போனாலும், போவது அதிகாரி களோ என்று கிராம மக்கள் வழிமறித்தார்கள். ''எதுனா இருந்தா குடுத்துட்டுப் போங்கய்யா'' என்று கெஞ்சி னார்கள். ஒரு செப்புக் காசிற்கு மூன்று பேர் 'பொத் பொத்'ன்று அடித்துக் கொண்டார்கள்.

தொண்டை நாட்டில் பரவாயில்லை. சோழ நாட்டில் நிலைமை மோசம். தெற்கே வேதாரண்யம் தாண்டி

நிலைமை மிக மிக மோசம். நீர் நிலைகள் முற்றிலும் வறண்டுவிட, கறவைகள் செத்து விழுகின்றன. மக்கள் ஒருவரையொருவர் வெட்டிக் கொள்கிறார்கள். திருட்டு பயம் அதிகம். கொள்ளைக்காரர்கள் வாலிபமான பையன் களை சேர்த்துக் கொண்டு சிற்றரசர்களின் வீடுகளை கொள்ளை அடிக்கிறார்கள்.

அரசாங்கத்தின் பண்டாரங்களை உடைத்து நொறுக்கு கிறார்கள். பொற்காசுகளை வாரிக்கொண்டு போகிறார் கள்.

இந்த தகவல் நிச்சயம் சாளுக்கியர்களுக்குப் போயிருக்கும். கங்கர்களுக்குப் போயிருக்கும். அவர்கள் படையெடுத்து வராமல் இருக்க வேண்டும். திம்மம் கணவாய் வழியாக, எவரேனும் இங்கு நுழைந்துவிடக் கூடும்.

பல்லவர்களுக்கு சோழர்களும், பாண்டியர்களும் உட்பகை, சாளுக்கியர்கள் வெளிப்பகை. போதாக் குறைக்கு பஞ்சம் வேறு சேர்ந்து கொண்டது. இந்த ஐப்பசி மாதமும் மழை இல்லையெனில் பட்டினிச் சாவுகள் அதிகமாகும். தானியம் அறவே இல்லை.

மரணத்தருவாயில் இருக்கின்ற ஆடு, மாடுகளை வெட்டிக் கொன்று, அதன் மாமிசத்தைதான் மக்கள் சாப்பிட்டு வருகிறார்கள். அந்தணர்களும் மாமிசம் சாப்பிடும் நிலை வந்துவிடும் என்று நினைக்கிறேன்.''

வழியில் கும்பலாய் நின்று மக்கள் பேசிக் கொண்டிருந்ததை சதாசிவநம்பி கேட்டான்.

அந்தணர்கள் மாமிசம் சாப்பிட்ட நிலைமை ஒரு முறை வந்தது. இங்கு அல்ல. வாதாபியில் காட்டுக்கு யாகம் பண்ணப் போன அந்தணர்களுக்கு, உணவு போகவில்லை. காடும் வளரத் துவங்கிவிட்டது.



அந்தணர்கள் மானும், உடும்பும் வேகவைத்து தின்றார்கள். காட்டுக் கோழிகளைச் சாப்பிட்டார்கள்,

அந்தக் கூட்டத்தில் பாரவி என்கிற மிகப்பெரிய வடமொழிப் புலவர் இருந்தார். அரசரிடம் இவ்வாறு நேர்ந்துவிட்டது என்று சொன்னார். ராக்ஷஸ குல அரசன் அவரை அவையில் சேர்க்காமல் தேசாந்திரம் போகச் சொல்லிவிட்டான். அதுதான் தண்டனை என்று தீர்மானித்தான்.

அந்த பாரவி காஞ்சிபுரத்திற்கு வர, பல்லவன் அவரை அங்கேயே தங்க வைத்துவிட்டான். தண்டி போன்ற பல புலவர்கள் இங்கு உருவாக காரணம் பாரவிதான். காஞ்சி மாநகரை கல்வி நிலையமாக மாற்றிய பெருமை பாரவிக்குத்தான்.

பஞ்சம் நல்லதும் செய்யும், கெட்டதும் செய்யும்.

இந்த முறை மழை பெய்யுமா என்பதுதான் தெரியவில்லை. மழை இல்லாமல் இரண்டு வருடங்கள் நகர்ந்து விட்டன. பல்லவபுரம், மயிலை பரவாயில்லை. தெற்கேதான் மிக மிக மோசம்.

இந்த பஞ்சத்திற்கு என்ன தீர்வு தெரியுமா? சிவன் கோயில் கட்டுவதுதான். யார் கட்டுவது? எப்படி கட்டுவது என்றுதான் தெரியவில்லை. கூலி ஆட்களுக்கு சோறு போட வேண்டுமே. தானியத்திற்கு எங்கே போவது என்று தான் தெரியவில்லை.

அரசர் வடக்கே பயணப்பட்டிருக்கிறாராம். கிருஷ்ணா நதிக்கரையிலிருந்து, தானியங்கள் கொண்டு வர முயற்சிக்கிறாராம். ஏதாவது தெரியுமா? உங்களுக்கு கிராம மக்கள் அவனுக்கு அருகே உட்கார்ந்துகேட்டார்கள்.

அன்றிரவு தக்கோலம் கிராமத்தில் தங்கினான். அவலும், பழங்களும் சாப்பிட்டு படுத்துக் கொண்டான்.

இரவு தொலைவே சத்தம் கேட்டது. யாரோ
அந்நியர்கள், நெல் தலை சாய்க்கும் முன், அறுக்க
முயற்சித்திருக்கிறார்கள். பாதி வயல் அறுத்துக் கொண்டு
போய் விட்டார்கள். அத்தனை பேரும் குதிரையில்
வந்திருக்கிறார்கள்.

மக்கள் எழுப்பி விஷயம் சொல்ல, சதாவசிவ நம்பிதன்
குதிரையேறி துரத்திக் கொண்டு போனான்.

அவன் தொடர்வதைப் பார்த்த கள்ளர்கள், நின்று
அவனை வழி மறித்து மடக்கினார்கள்.

''அட, அந்தணனா? எதற்கு எங்களைப் பின்
தொடர்கிறாய் குதிரை நன்றாக இருக்கிறதே எங்கு
வாங்கினாய் எதற்கு உனக்கு குதிரை.''

அவன் தலையில் தட்டி குதிரையை பிடுங்கிக்
கொண்டார்கள். இருப்பிலிருந்த இருபது செப்புக் காசு
களையும் உருவிக் கொண்டார்கள்.

அவன் தடுத்து முறைத்தபோது, பட்பட்டென்று
அடித்தார்கள்.

''அடிக்கத் தெரிந்தவனாக இருக்கிறான். அடியை
தடுக்கத் தெரிந்தவனாக இருக்கிறான். இடுப்பில் சூரிக்
கத்தி மடக்கி வைத்திருக்கிறானா பார்.''

தேடினார்கள். எதுவுமில்லை என்றதும் பிடித்து
தள்ளினார்கள்.

''வேதம் படிக்கிற வேளாளனும், ஆயுதமெடுக்கிற
அந்தணனும் ஆபத்தானவர்கள்.''

தடுக்க வந்த வேளாளர்கள் இரண்டு மூன்று பேரை
வெட்டிப் போட்டார்கள்.

சதாசிவநம்பி திருநின்றவூர் நோக்கி நடக்கத்
துவங்கினான். அவன் மனசு கனத்துக் கிடந்தது.



''வா, வா,' என்ன இவ்வளவு சோர்வாக வருகி
றாய்?'' திருநின்றவூர் எல்லையில் பூசலார் அவனை வர
வேற்றார். சதாசிவநம்பி விஷயம் சொன்னான். தன்னை
நண்பர்கள் புறக்கணித்ததைச் சொன்னான்.

''ஒரு அந்தணனுக்கு நண்பர்கள் உண்டா அவர்களுக்கு
கடவுள்தான் நண்பன். வேறு யாரையும் நண்பர்களாக
அவன் கொள்ளவும் முடியாது. கொள்ளவும் கூடாது.
அந்தணன் அந்தணனையும் நண்பனாகக் கொள்ளவேண்
டிய அவசியம் இல்லை. அவன் தனி. உயிரைக் கொடுக்
கின்ற நட்பு, பண உதவி செய்கிற நட்பு இவையெல்லாம்
மற்ற ஜாதியினருக்கு தேவைப்படும். நமக்கு பணமும்
தேவையில்லை, உயிரும் தேவையில்லை.

நீ அவர்களோடு சேர்ந்ததே தவறு. நீ கற்றுக் கொள்
ளும் ஆர்வத்தால், அவர்களைக் கவர்ந்து விட்டாய்.
என்ன கற்றுக்கொண்டாய் என்று யோசித்தால், ஏதுமில்லை
என்று சொல்லத்தான் தோன்றுகிறது.

நாம் இருவரும் நண்பர்களாக இருக்கலாமா?'' பூசலார்
அவனை நோக்கி ஆவவாக கேட்டார்.

''இது நட்பு கூட இல்லை. ஒரு ஒப்பந்தம். நான்
உனக்குச் சோறு போடுகிறேன். அதோ அந்த இலுப்பைக்
காட்டில் தினமும் உட்கார்ந்து கொள்வோம். கோயில்
கட்டுவது பற்றி கிரமமாகப் பேசுவோம்.

மெல்ல மெல்ல பேசுவோம். மிகப்பெரிய கற்றளி
கட்டுவதற்குண்டான எல்லா வேலையையும் செய்வோம்.
அத்தனையையும் நினைவில் வைத்துக் கொள்வோம்.
வேறு எவருக்கும் நாம் பேசுவதை சொல்ல வேண்டாம்.

ஒரு வேத பாடம் ஆரம்பத்திலிருந்து மனனம் செய்
கிறாய். ஒரு காலகட்டத்தில் முழு வேதமும் பிழையறச்
சொல்ல மாட்டாயா. அதுபோலத்தான் இந்த விஷயமும்.

நாம் மனதுக்குள் ஒரு கோயில் கட்டுவோம். மிகப்பெரிய கற்றளி ஒன்று சிவனுக்கு அமைப்போம்.

இதை செய்யும்போது உணவும், உடையும் நமக்கு தானாக கிடைக்கும். அல்லது இது வேண்டுமே என்கிற பிரக்ஞையே இல்லாது போய்விடும்.

ஏன் இந்த வேலை என்று கேட்கிறாயா. இது பஞ்சம் தீர்க்கிற வழி. பகை தீர்க்கிற வழி, கோயில் கட்டினால் இறந்தவர்களின் மனக்கேதம் தீரும். லட்சோப லட்சம் பேர்கள் போரில் மூன்று தலைமுறைகளாய் இறந்து போயிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் விளக்கேற்றி வைக்க முடியுமா, கோயில் கட்டுவதுதான் வழி.

வா, ஊருக்குள் வா. உனக்கு சோறு போடுகிறேன். நீ எப்போது உன் திருகு கத்தியைத் தூக்கியெறிந்தாயோ அப்போதே நீ என்னிடம் வந்து விடுவாய் என்று தெரிந்து விட்டது. வா.''

பூசலார் அவனை தன் வீட்டிற்கு அழைத்துப்போனார். அவர் தானே உணவு சமைத்து உண்கிறவர். திருமணம் ஆகாதவர். அவரிடம் உடன்பிறப்புகள். அவரை நேசித்தன. தனக்கு வந்த சொத்துக்களை அவர்களுக்கு பிரித்து கொடுத்துவிட்டு, அவர்கள் தரும் ஒரு வேளை உணவை அவர் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்.

உணவு முடித்த பிறகு அவர்கள் குளக்கரைக்குப் போனார்கள். தண்ணீர் ஸ்படிகம் போல தெளிவாய் இருந்தது. கரையில் ஒரு சிறிய ராமர் கோயில் இருந்தது. ராமர் கோயிலுக்கு பின்புறம் இருந்த இலுப்பை மரக்காட்டில்தான் பூசலார் அமர்ந்திருப்பது வழக்கம். அவர்கள் இருவரும் போய் அமர்ந்து கொண்டார்கள்.

அன்று முழுவதும் எதிரும் புதிருமாய் உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்தார்கள். இதுவரை இல்லாத ஒரு



அமைதி சதாசிவ நம்பிக்குள் படர்ந்தது. தான் ஏன் இப்படி அலைகிறோம் என்ற விசனமும் அவனை சுற்றிக் கொண்டது. அவரோடு பத்து நாட்கள் இருக்க அவன் தீர்மானித்தான்.

அவர் வீட்டு திண்ணையில் தூங்கினான். மறுபடி மறுநாள் காலை எதிரும் புதிருமாய் உட்கார்ந்து கொண்டார்கள்.

''கோவில் கட்ட முதலில் நிலம் தேர்ந்தெடுக்க வேண்டும். கோவிலுக்கு நிலம் எப்படி தேர்ந்தெடுக்க வேண்டுமென்று தெரியுமா உனக்கு?''

''தெரியாது'' சதாசிவநம்பி பதில் சொன்னான்.

''சொல்கிறேன் கேள். நிலம் மேட்டுப் பாங்காக இருக்க வேண்டும். போர் நடந்த இடமாகவோ, மயான பூமியாகவோ இருந்துவிடக்கூடாது. நிலத்தில் எலும்புத் துண்டுகள் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். உப்பு மண் கூடாது. துவர்ப்பு மண் கூடாது, மண்ணை தின்று பார்க்க வேண்டும். மண் ருசியாக இருக்க வேண்டும்.

நாம் கோயில் கட்டுகிற இடத்தில் கனி கொடுக்கும் மரங்கள் இருக்கின்றனவா. பூச்செடிகள் முளைத்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அட, என் மனதிற்கு ஒரு நிலம் தெரிந்துவிட்டது.

பச்சைப் பசேல் என்று புற்கள் முளைத்த பூமி நிறைய மாமரங்கள். கொய்யா செடிகள் நாவல் மரங்கள் முல்லைப்பந்தல், மல்லிகைச் செடி என்று பலதும் இருக்கின்றன. உன் கண்களுக்குத் தெரிகிறதா?''

சதாசிவநம்பி கண்களை மூடிக் கொண்டான்.

''தெரிகிறதே'' என்றான்.

''இப்போது நிலத்தைப் பற்றிய சோதனையை துவங்குவோம். நிலத்திலிருந்து கெட்ட வாயு வராமல்

இருக்க வேண்டும். ஒரு முழங்கை நீளம் ஒரு முழங்கை அகலம். மூன்று முழங்கை ஆழம் தோண்ட வேண்டும். ஒரு விளக்கு ஏற்றி அந்த குழியில் வைக்க வேண்டும். விளக்கு அணையாது எரிந்தால் அந்த நிலம் நல்ல நிலம்.''

''ஆமாம் செய்துவிட்டேன். நம்முடைய நிலம் நல்ல நிலம்.'' சதாசிவ நம்பி புன்னகைத்தான்.

''அத்தோடு முடிந்துவிடவில்லை. இன்னொரு இடத்தில் அதே அளவு குழி தோண்ட வேண்டும். உள்ளி ருந்து மண் எடுத்து, கவனமாய் சேமித்து வைக்கவேண்டும் வெளியே எடுத்த மண்ணை மறுபடி குழியில் கொட்ட வேண்டும். மறுபடி அந்த மண், குழியை நிரப்பாமல் இருந்தால், அது தளர் நிலம். குழியை நிரப்பி, மேலே குவியலாய் இருந்தால், அது கெட்டியான நிலம். நல்ல கனம் தாங்கும்.

அதுமட்டுமில்லை. அந்தக் குழியில் நீர் விட்டால், நீர் கீழே போகக்கூடாது. நீர் தேங்க வேண்டும். நீர் தேங் கினால் அது மிக மிக நல்ல நிலம்.''

''நீர் தேங்குகிறது. நாம் நிலம் தேர்ந்தெடுத்து விட்டோம்.''

''ஆமாம்.'' அவன் பேச்சுக்கு பூசலார் மகிழ்ச்சியில் குதித்தார்.

''ஆனால் இத்தோடு நின்றுவிடவில்லையே. அந்த நிலத்தை காளைகள் பூட்டி. நன்கு உழுது பார்க்க வேண்டும். மண்வாசனை கிறங்கடிக்க வேண்டும். பிறகு நீர் தெளித்து எல்லாவித தானியங்களையும் தெளித்துப் பார்க்க வேண்டும். எல்லா தானியங்களும் முளை கட்டி னால், அந்த நிலமே கோயில் கட்ட ஏற்ற நிலம். என்ன செய்து கொண்டிருக்கிறாய் நம்பி?''

''உழுது கொண்டிருக்கிறேன்.''



''அடேயப்பா ஐந்து வேலி நிலம் பத்து ஜோடி காளைகள் போட்டாலும், உழுது முடிக்க மூன்று நாளா கும். உழுபவர்களுக்கு கூலி கொடுக்க வேண்டும்.''

''ஆமாம்''

''என்னிடம் காசுக்கு பஞ்சமில்லை. ஆனாலும் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டுமல்லவா மூன்று நாள் உழுதலுக்கு ஒரு பொற்காசு.''

''நான் கணக்கு வைத்துக் கொண்டேன்.'' நம்பி பதில் சொன்னான்.

''இப்போது கல் பார்க்க வேண்டும். கல்லைசோதனை செய்ய நீ போ. வரைபடத்தை நான் செய்கிறேன்.''

அவன் மனதால் பல்லவபுரம் நடந்து போனான். வழி முழுக்க இருந்த குன்றுகளை சோதித்தான் சரளைகள் அதிகமில்லாத கருங்கல் மலையாகத் தேடினான்.

மணிமங்கலத்திற்கு அருகே உள்ள குன்று ஞாபகம் வந்தது. மணிமங்கலத்தின் ஒரு பகுதி சரளைக்கல் மறு பகுதி கருங்கல். அவன் மலையைத் தேர்ந்தெடுக்க மூன்று நாட்களாயின. அந்த மூன்று நாட்களும் அவரோடு அவன் பேசவில்லை.

அவர் இலுப்பைக் காட்டின் அடர்ந்த பகுதிக்கு போனார். சுண்ணாம்பு பாறைகள் மீது ஆணியால் கீறி கோவில் வரைபடம் தயாரித்தார். இரவு தூங்குவது தவிர மற்ற எல்லா நேரமும் இலுப்பைக் காட்டிலேயே இருந் தார்.

''இலுப்பைக் காட்டில் இரண்டு அந்தணர்களும் என்ன செய்கிறார்கள்?'' ஊர் ஜனங்கள் பேசிக்கொண்டார்கள்.

திருநின்றவூர் ராமர்குளம் வற்றவேயில்லை. சாலை தாண்டி, வயலுக்கு நீர் போக வேண்டி இருந்தது.

''கால்வாய் வெட்டி மதகு போடலாமா?''

''வேண்டாம். எப்போதேனும் மழை பெய்து உடைப் பெடுத்துக் கொண்டால், வயல் முழுதும் பாழாகும். மாடு வைத்து கவலை அடிப்போம்.''

''இதெல்லாம் வேண்டாம். நான் சொல்வதைக் கேளுங்கள்'' ஊர் தலைவர் பேசத் துவங்கினார்.

''இலுப்பைக் காட்டிலிருக்கும் பூசலாரை அழைத்து வந்து கேளுங்கள் அவருக்கு மண் பற்றியும், மரம் பற்றியும் நிறைய தெரிந்திருக்கிறது. என் வீட்டு தூணை முகர்ந்து பார்த்துவிட்டு, இதை இடித்து எடுத்துவிடு. வேறு மரம் நடு. சுடுகாட்டு மரத்தை எடுத்துவிடு என்றார். அவர் சொன்னதை அப்படியே செய்தேன். இப்போது வீடு சுபிட்சமாக இருக்கிறத அதற்குமுன் ஏகப்பட்ட சிரமங்கள்.''

ஊர் பூசலாரை நோக்கிப் போயிற்று. சதாசிவ நம்பியும் பூசலாரும் இலுப்பைக் காட்டின் ஆரம்பத்திலேயே நின்றி ருந்தார்கள்.

''ராமர் குளத்தின் தெற்குப் பக்கம் பூசலார் பலமுறை நடந்தார். தென்திசை முழுவதும் வயல்கள் பரவிக் கிடந்தன. நீரின்றி வெடிக்கத் துவங்கி இருந்தன.

''சாலை தாண்டி, இரண்டு வேலி நிலம் தாண்டி ஒரு குளம் போட்டு விடலாம், குளம் கூட வேண்டாம். கிணறு போட்டு விடலாம். கிணற்று நீரை இறைத்து, மடை மாற்றி பாய்ச்சிக் கொள்ளுங்கள். மடை தண்ணீர் வீணா காமல் இருக்க, சுட்ட ஓடு புதையங்கள், பத்து முழுங்கை ஆழத்தில் நீர் வரும் இடம் நான் காட்டுகிறேன்.'' பூசலார் பேசினார்.

கிராமம் கை கூப்பியது.



''சதாசிவநம்பி, மிக நிதானமாய் ஒரு கர்ப்பிணி பெண் போல அந்த வயல் வெளியில் நடந்து போ. நான் இடது கை தூக்கினால் இடது பக்கமாகவும், வலது கை தூக்கினால் வலது பக்கமாகவும் நட, எங்கே உன் உடம்பில் அதிர்ச்சி ஏற்படுகிறதோ அங்கே நின்றுவிடு.''

சதாசிவநம்பி அப்படியே செய்தான். ராமர் குளத்தி லிருந்து. ஐம்பது கோல் தூரத்தில், ஒரு வயலுக்கு நடுவே நின்றான்.

''அடடே அங்கு தோண்டலாம்.''

முப்பது நாற்பது ஆண்கள் மடமடவென்று வேலையில் இறங்கினார்கள்.

மூன்று முழங்கை ஆழத்தில் ஈரம் தெரிந்தது. நாலாவது முழுங்கை ஆழத்தில் நல்ல களிமண் இருந்தது. எட்டாவதில் நீர் கசிந்தது பத்தாவது முழுங்கை ஆழத்தில் பொளேர் என்று பீய்ச்சி அடித்தது.

பூசலார் வட்டம் போட்டுக் கொடுத்தார் இன்னும் ஆட்கள் இறங்கினார்கள். ஒன்றரை ஆள் ஆழத்திற்கு நீர் பொங்கி, பெருகி வந்தது.

கிணறின் வடப்பக்கத்திலிருந்து அதாவது குளம் இருக்கும் பக்கத்திலிருந்து நீர் ஊற்றாகப் பெருகிற்று.

''குளம் வற்றிவிடுமா ஐயன்?''

''ஒரு நாளும் வற்றாது. அது தெய்வீகமான குளம், தேவதைகள் வாழும் இடம் அந்தக் குளத்தை நீங்கள் அசுத்தம் செய்யாமலிருந்தால்போதும்.''

பூசலாரும் நம்பியும் இலுப்பைக் காடு நோக்கி நடந்தார்கள்.

''உங்களுக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' ஊர் கைகூப்பி கேட்டது.

"எங்கள் இருவருக்கும் மிகப்பெரிய வேலை இருக்கிறது. ஆகவே எங்களுக்கு அருகே வந்து தொந்தரவு செய்யாமல் இருக்க வேண்டும்."

"செய்ய மாட்டோம்."

ஊர் கைகட்டியது.

இரண்டு பேருக்கும் ஒரு வேளை உணவிற்காக இருநாழி அரிசி கொடுங்கள். உங்கள் தோட்டத்தில் ஏதேனும் காய் கறி விளைந்தால், கொடுங்கள் காலையில் ஒருவரும், மாலையில் ஒருவரும் ஒரு குவளை பால் கொடுங்கள்."

"நிச்சயம் தருகிறோம். ஐயன் நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?"

"பல்லவ தேசத்தில் மழை பொழிய வேண்டும்மென்று பிரார்த்தனை செய்கிறோம்."

"அப்படியா. ரொம்ப மகிழ்ச்சி. அரிசியை எங்கே தருவது."

"என் வீட்டு திண்ணையில் ஒரு மூடி போட்ட பெட்டி இருக்கும் அதற்குள் வைத்து விடுங்கள்."

"அடடா, அவ்விதமே செய்கிறோம். உங்களுக்கு குறை வராது பார்த்துக் கொள்கிறோம்."

வயலெல்லாம் நெல் போட்டார்கள். வரப்பு எல்லாம் கீரை போட்டார்கள். திருநின்றவூரில் தானியலட்சுமி விளையாடினாள்.

அந்த ஊர் மக்கள் பூசலாரை மரியாதையோடு நினைத்துக் கொண்டார்கள். அவர் கேட்டதற்கு மேலும் கொடுத்தார்கள்.

"கல் வந்துவிட்டது."



"அப்படியா நானும் வரைபடம் தயாரித்து விட்டேன் இதோ இது கோயில் நிலம். இதை கிழக்கிலிருந்து மேற்கே ஐந்தாகவும், வடக்கிலிருந்து தெற்கே ஐந்தாகவும் பிரித்துக் கொள்வோம். அப்போது இருபது கட்டங்கள் வருகின்றன.

கிழக்கு நடு கட்டம் சூரியன். மேற்கு நடு கட்டம் வருணன். வடக்கு நடு கட்டம் சோமன். தெற்கு நடு கட்டம் எமன். தென்மேற்கு பித்ரி. வடமேற்கு வாயு. வடகிழக்கு ஈசான்யம்.

இதோ, இது அதிதி. இது ஜெயந்தம். இது பிரீஷம். இது விதாதா. இது பிருங்கராஜா. இது சுக்ரீவா. இது ருத்ரம். இது அபவஸ்தம். இது சவித்ரம். இது இந்திரம். இது முக்கியா."

அவர் இடங்களை பிரித்து காட்டினார்.

"நடுவே இருக்கிற இந்த பிரும்ம கட்டத்தில்தான் சிவன் அமர்ந்திருப்பார்.

அவர்கள் திரும்பத் திரும்ப பேசி, பிரிவுகளை உறுதி செய்து கொண்டார்கள்.

இப்போது பிரும்ம பாகத்தில் நான் குழி தோண்டப் போகிறேன். அதேபோல் ஈசான்ய மூலையிலும் குழி தோண்டப் போகிறேன். இந்த ஈசான்ய மூலை ஒரு நல்ல விஷயம். அதில் ஒன்பது வகை மண்கள் போடவேண்டும்.

புற்று மண், ஆற்று மண், கடல் மண், குளம், கிணறு, வயல், தோப்பு, மலை, காடு ஆகிய இடத்திலிருந்து மண் எடுத்து வந்து போடுகிறோம். நவரத்தினங்களை போடுகிறோம். புண்ணிய தீர்த்தங்களை ஊற்றுகிறோம். நவதானியங்களைப் போடுகிறோம்.

அது மட்டுமில்லாது அஷ்டமங்களம் வரைந்து போட வேண்டும்.

மங்களச் சின்னங்கள் எட்டு எது?
ரிஷபம், யுக்மசாமரம், சஸ்திகம், பூர்ண கும்பம்,
தீபம், சங்கம், தர்ப்பணம், ஸ்ரீவத்ஸம் இந்த அஷ்டமங்
களத்தை ஒன்பது கன்னிப் பெண்களிடம் கொடுத்து அவர்
களை தேவர்குலப்பெண்களாக வரித்து பாதபூஜை செய்து,
இந்த சின்னங்களை அவர்கள் தாங்கிவர, பிறகு பூமியில்
இறக்க வேண்டும்.

தர்ப்பணத்தை ஊர்வசி தாங்குவாள். பூரண
கும்பத்தை மேனகை தாங்குவாள். ரிஷபத்தை ரம்பை
தாங்குவாள். சாமரத்தை திலோத்தமை தாங்குவாள்.
ஸ்ரீவத்ஸம் சுமுக்கி தாங்குவாள். சஸ்திகம் சுந்தரி எடுத்து
வருவாள். சங்கத்தை சாமுகியும், தீபத்தை காமவர்த்
தினியும் எடுத்து வருவார்கள்.

தேவதைகளை பிரீத்தி செய்யாமல், கோயில் கட்டி
விட முடியாது.

இப்போது பிரும்ம பாகத்திலிருந்து வேலை துவங்க
லாம். பிரும்ம பாகத்தில் சுவர் எழுப்பலாம். பிரும்ம
பாகத்தைப் போல் இரண்டு மடங்கு பெரியது வெளிப்
பிரகாரம். வெளிப்பிரகாரத்தில் விநாயகர், முருகன்,
துர்கை, விஷ்ணு போன்ற பரிவார தேவதைகளுக்கு
சன்னதி.

அதற்கு அடுத்த பிரகாரத்தில் யோகிகளுக்கும், சித்தர்
களுக்கும் தேவகணங்களுக்கும் சன்னதி அதற்கு வெளிப்
பிரகாரத்தில் உக்ரமான தேவதைகளுக்கு சன்னதி என்று
வைத்துக் கொள்வோம்.

இவைகளை செய்யும்போதே சிவலிங்கம் செதுக்கப்
பட்டுவிட வேண்டும். லிங்கத்தின் மேல் பகுதியில் ருத்ரன்,
நடுப்பகுதி விஷ்ணு, கீழ்பகுதி பிரும்மா இப்படி ஒரு மூர்த்தி
செய்து, அதை உள்ளே வைத்துவிட்டு வெளியே இன்னொரு



சிவலிங்கம் செய்து, அங்கே பாலாலயம் அமைத்து பூஜை
துவங்க வேண்டும். ஆறு கால பூஜை அவசியம்.''

அவர்கள் பேசிக்கொண்டு போனார்கள். மூர்த்திகளை
ஸ்தாபித்தார்கள்.

வடக்குப்பக்கம் கோமுகம் இருக்க வேண்டும். சிவலிங்
கத்திற்கு அடுத்த சுற்றில் பிரும்மா. அடுத்த சுற்று
விஷ்ணு. அடுத்த சுற்று ஷண்முகர். அடுத்த சுற்றில்
சரஸ்வதி, லக்ஷ்மி, அடுத்த சுற்றில் தேவதைகள். அடுத்த
சுற்றில் விநாயகர். அடுத்த சுற்றில் சக்தி துர்கை.

லிங்கத்திலிருந்து பத்தாவது பதத்தில் எந்த தேவதை
களையும் வைக்கக்கூடாது. அது பூத பிசாசுகளுக்கான
இடம்.

கோபுரத்தைவிட விமானம் முக்கியம். விமானத்தைப்
பற்றி நான் சொல்கிறேன் கேள்.''

அவர்கள் இருவரும் மாதக்கணக்கில் பேசிக்கொண்டு
இருந்தார்கள்.

இரவானதும் இலுப்பைக் காட்டிலிருந்து வீட்டிற்கு
வருவார்கள். குவளையிலுள்ள பாலை கொதிக்க வைத்து,
வாழைப்பழத்தோடு சாப்பிடுவார்கள். வீட்டு முற்றத்தில்
கயிற்றுக் கட்டில் போட்டு அயர்ந்து தூங்குவார்கள்.

பிறகு எழுந்து உணவு தயாரித்து, இலுப்பைக் காட்
டிற்கு எடுத்துப் போய்விடுவார்கள்.

இப்போது மூன்றடுக்கு விமானம் பண்ணுவோம். கருங்
கற்களின் அளவை சிறிது சிறிதாக குறைத்துக் கொண்டு
மேலே ஏற்றுவோம். தூண்கள் என்ன வகை என்று தீர்மா
னம் செய்வோம். வசந்த மண்டபத்தின் அளவை நிர்ணயிப்
போம்.''

அவர்கள் இன்னொரு மூன்று மாதம் பேசினார்கள்.

காற்று வெப்பமாகவே அடித்தது. ஒரு மழை மேகம் கூட இல்லை.

பூசலார். சதாசிவநம்பிக்கு படம் வரைந்து காட்டினார்.

அஸ்திவாரத்திலிருந்து மேலே தெரிவது உபபீடம். உபபீடத்திற்கு மேலே கருங்கல் பட்டை உபானம். பட்டைக்கு மேலே பத்மம். பத்மத்திற்கு மேலே குமுதம். குமுதத்திற்கு மேலே காந்தம். அதற்கு மேலே அக்கரப் பட்டை.''

இந்த அக்கரப்பட்டையில்தான் தூண்கள் நிறுவப்பட வேண்டும். தூணின் அடிப்பகுதி வேதிகை. மேலே நாகபந்தம். அதைத் தொடர்ந்து கால். இது தூணின் நடுப்பகுதி. காலுக்கு மேல் கலசம். கலசத்திற்கு மேல் குடம், குடத்திற்கு மேல் பலகை. பலகைக்கு மேல் போதிகை.

இந்த பகுதி மொத்தமும் ஸ்தம்பம் எனப்படும்.

ஸ்தம்பப் பகுதிக்கு மேலே பிரஸ்தாரம். பிரஸ்தாரத்தை உத்திரம், ஏராதகம், கபோதம், யாளம் என்று பிரிக்கலாம்.

பிரஸ்தாரத்துக்கு மேலே இருப்பது கர்ணக்கூடு. கர்ணக்கூடுதான், விமானப் பகுதி. விமானத்தின் கால். அதற்கு மேலுள்ளது கிரீவம். அதாவது கழுத்துப் பகுதி. அதற்கு மேல் உள்ளது சிகரம். அதாவது உருண்டையான தலைப்பகுதி. அதற்கு மேலுள்ளது ஸ்தூபி.

புரிகிறதா இந்த வேலைகளை நீ செய். நான் மூர்த்திகளை ஸ்தாபிக்கிறேன்.''

அடுத்த ஒரு மாதமும் அவர்கள் வெகு சில வார்த்தைகள் மட்டுமே பேசினார்கள்.



அருகிலுள்ள ஊர்களிலிருந்து வேளாளர்கள் பஞ்சம் பிழைக்க திருநின்றவூருக்கு வந்தார்கள்.

திருநின்றவூரில் வந்தவர்களுக்கு கஞ்சி கொடுக்க ஏற்பாடாயிற்று. அதற்கென்று தனி நிலம் விடப்பட்டது.

திருநின்றவூர் வேளாளர்கள் தங்கள் கையிருப்பு மொத்தமும் ஊர் சபைக்கு கொடுத்தார்கள். ஊர் சபை அந்த நெல்லை வாங்கி, ஆண்களையும், பெண்களையும் வைத்து அவித்து, உலக்கையில் குத்தி, உமியையும், அரிசியையும் பிரித்து தினமும் காலையும், மாலையும் கஞ்சி வார்த்தார்கள்.

கீரை பறித்து வந்து, கடைந்து பருப்போடு உருட்டிக் கொடுத்தார்கள். குழந்தைகளுக்கும், வயசாளிகளுக்கும் பால் கொடுத்தார்கள்.

கஞ்சிக்குடித்த வேளாளர்கள் காடுகளை வெட்டி, காரை கற்றாழைகளை அப்புறப்படுத்தி. அவைகளை குத்திக் கிளறி நல்ல நிலமாக்கினார்கள். வயல்கள் இன்னும் விசாலமாயின.

அரைவட்டமான சுட்ட ஓடுகளை பூமியில் பதித்து. வெகுதூரம் நீர் எடுத்துப் போனார்கள். மேட்டுப்பகுதிகளுக்கு நீரை தலையில் சுமந்து போய் ஊற்றினார்கள். பசுக்களுக்காக அங்கே புல் வளர்த்தார்கள். ஆடுகளை காடுகளுக்கு ஓட்டிக்கொண்டுபோய், ஓட்டிக் கொண்டு வந்தார்கள்.

பெண்கள் கோழிகள் வளர்த்தார்கள். கூடை முடைந்தார்கள். கற்றாழைய அடித்து கயிறு பின்னினார்கள், தென்னை மட்டையை ஊறவைத்து அவைகளிலிருந்தும் கயிறு எடுத்தார்கள்.

இளைஞர்களிடம் அதை அனுப்பி பல்லவ மன்னனின் தலைநாரான காஞ்சீபுரத்தில் கொண்டுபோய் விற்று வரச் சொன்னார்கள்.

கயிறுகளுக்கு ஸ்தபதிகள் நல்ல விலைகொடுத்தார்கள்.

நன்கு மேய்ந்த ஆடுகளுக்கும் கோழிகளுக்கும் முட்டை களுக்கும் காஞ்சியில், கல்தச்சர்கள் நல்ல விலைக்கு வாங்கிக் கொண்டார்கள்.

''அற்புதமான கோயில் தயாராகிறது.'' காஞ்சிக்கு போய் வந்தஇளைஞர்கள் கிராமத்தில் விவரித்தார்கள்.

''விமானம் எழும்பிவிட்டது. சிவன். சடை பறக்க கையில் சூலத்தோடு நடனமாடுகிறார். அன்னை பார்வதி அவரை வியப்போடு பார்க்கிறார். ஒவ்வொரு பிறையிலும் ஒவ்வொரு காட்சி. ஒவ்வொரு நடனம்.

உள்ளே. கர்ப்பகிரஹத்தில் சோமாஸ்கந்தர் அழகான அழகு. அந்த அழகு சில சமயம் அழ வைத்துவிடுகிறது.''

''மன்னர் எங்கே?''

''நாலா பக்கமும் அலைகிறாராம்.''

''ஏன்?''

''பாண்டியர்களை அடக்க தெற்கே பயணப் பட்டிருக் கிறாராம். அப்படியே திப்மம் கணவாய் போய். கங்க நாட்டின் எல்லையைப் பார்த்துவிட்டு வந்தாராம். அப்படியே கிருஷ்ணா நதி தீரம் போய். அரிசியும். நவதானியமும் ஆடுகளும். மாடுகளும் வாங்கி வந்தாராம்.

பிறகு திருமயிலை வந்து கடல் மல்லைக்குப் போய் அங்கு வணிகர்களோடு பேசி, இரும்பு வாங்கி வந்து கொல்லர்களிடம் கொடுத்து, ஆயுதங்கள் செய்யச் சொல்லி நேற்று பகல்தான் காஞ்சிக்கு வந்திருக்கிறார் கறுத்து. இளைத்து சடைமுடியோடு இருக்கிறார்.

காஞ்சியிலும் உணவிற்கு பிரச்சினைதான். பல இடங்களில் அன்னசத்திரங்கள் திறந்து கஞ்சி ஊற்று



கிறார்கள் படை வீரர்களெல்லாமும் கஞ்சிதான் குடிக் கிறார்கள்.

அவைப்புலவர் தண்டிக்கு கூட சென்றமாதத்திலிருந்து கஞ்சிதான் ஆகாரம். இந்த பசுமை திருநின்றவூரில் மட்டும் தான். இந்த ராமர்குளம் குறையவே இல்லையே. திருநின்ற வூரில் ஒரு கேணியும் வற்றவில்லையே காஞ்சியில் பல குளங்கள் வற்றி விட்டன.

பூசலார் இல்லையெனில் இந்த விவசாயம் இல்லை. இந்த விவசாயம் இல்லையெனில் இத்தனை மக்களுக்கு சோறும் இல்லை.''

பஞ்சம் பிழைக்க வந்த வேளாளர்கள் திருநின்றவூரின் எல்லா இடத்தையும் வயல்வெளி ஆக்கி வட்டார்கள்.

இந்த புரட்டாசி, ஐப்பசியில் மழை பெய்யுமா?''

''நிச்சயம் பெய்யும். எதற்கும் பூசலாரை ஒரு வார்த்தை கேட்டு விடுவோம்.'' அவர்கள் ஓடினார்கள்.

''மழை இல்லை ஐயா.''

''பெய்யும் பெய்யும்.''

''எப்போது ஐயா?''

''இந்த மாதமே பெய்யும்.''

''இது மழை பெய்யும் மாதம் அல்லவே.''

''பெய்ய வேண்டிய நேரத்தில் பெய்யவில்லை அல்லவா. ஆகவே நிச்சயம் மழை வெகு விரைவில் பெய்யும்.''

''ஐயா கேட்கவே குளுமையாக இருக்கிறது. இன்னும் ஏதேனும் வேண்டுமா?''

அவர் சிரித்தார். கை கூப்பினார். அவர்கள் விடை பெற்றார்கள்.

''நம்பி, நாளை வர்ணப்பூச்சு துவங்குகிறேன். மூன்று நாளில் முடித்துவிடுவேன். கும்பாபிஷேகத்திற்கு ஒரு நல்ல நாள் சொல்.''

நம்பி அக்ரஹாரத்திற்கு போய் பஞ்சாங்க ஓலை வாங்கி வந்து நாள் கணக்குப் போட்டான். திதி கவனித்தான்.

''இன்றிலிருந்து பதினாறாவது நாள் கும்பாபிஷேகம்.'' என்றான்.

அரசர் ஆலயத்தை சுற்றி வந்தார். ஒவ்வொரு கோஷ்டத்திலும் சிவனின் பல்வேறு, வித நிலைகளைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

''கைலாசத்தையே இங்கு கொண்டு வந்து விட்டீர்கள். ஐயா.''

ஸ்தபதிகளை தழுவிக் கொண்டார் கல்தச்சர்களின் கைகளைத் தொட்டு தலையில் வைத்துக் கொண்டார்.

''இது நீ, அது நான். இது என் அப்பா, அது உன் தகப்பன். இது நமது புலவர் தண்டி.''

பல்வேறு முகங்களை தன் மனைவியோடு பார்த்து இனங்கண்டு ரசித்தார்.

''எப்போது கும்பாபிஷேகம்?'' அரச குருவை கேட்டார்.

''இன்றிலிருந்து பதினாறாம் நாள்''

''எத்தனை காசு வேண்டும்?''

''பத்தாயிரம் பொற்காசுகள்''

''என் தனிப்பட்ட பண்டாரத்தை திறந்து வைக்கிறேன். எடுத்துக் கொள்ளுங்கள். கும்பாபிஷேகம் குறைவர நடைபெறட்டும். இந்த அற்புத சிற்பங்களைப் பார்க்க இறைவன் நேரே வரவேண்டும். இறைவன் கால் வைத்த இடம் பூத்துக்குலுங்கும். நம் நாட்டில் நிச்சயம் மழை பெய்யும். ஒரு பத்துநாள் மழை போதும். குளமும், ஏரியும் நிரம்பிவிடும். ஆறு பொங்கி வழியும். பயிர்களும், உயிர்நாடிகளும் மறுபடி துளிர்க்கும்.

இங்கு எப்படியோ உயிர் வாழ்கிறோம். தென்திசையில் தினசரி மரணம். பட்டினிச் சாவு.

பாண்டி தேசத்து மக்கள் என்மீது கோபமாயிருக்கிறார்கள், மழை பெய்தால்தான் சமாதானம் ஆவார்கள். கலவரம் வருவதை நான் விரும்பவில்லை. மழை வர வேண்டும். இதுவே என் வேண்டுகோள்.

அந்தணர்களே, குறைவற கும்பாபிஷேகம் செய்யுங்கள். இது மழைக்காக செய்யும் வேள்வி என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.''

''கொடி ஏற்றம் எப்போது?'' பூசலார் நம்பியைக் கேட்டார்.

''நாளை கொடி ஏற்றம்.''

''யாக குண்டம் அமைத்து விட்டாயா?''

''இன்று அமைக்கிறேன்.''

''என்ன வித யாக குண்டம்.''

''மனு சூத்ர யாகசாலை அமைத்து இருக்கிறேன். பிரதான ஒன்பது குண்டங்கள் ஸ்தாபித்து இருக்கிறேன். பிரதான குண்டம், பூர்வகுண்டம், யோனி குண்டம், அர்த்த சந்திர குண்டம், முக்கோண குண்டம், விருத்த குண்டம், ஷட் கோண குண்டம், பத்ம குண்டம், அஷ்ட கோண குண்டம். ராமர் குளத்தில் மூழ்கி, இளைஞர்கள் களிமண் எடுத்து வருகிறார்கள்.''

சொல்லிவிட்டு சதாசிவநம்பி கண்கள் மூடிக் கொண்டான்.

அவர் கொடி வரையத் துவங்கினார். கொடியில் சூரிய சந்திரர்களும், அஷ்டமங்களங்களும் வரையப்பட்டன. வில் அம்பும், மேளமும், உடுக்கையும், கைமணியும், தாமரையும், விபூதி மடலும் அதில் எழுதப்பட்டன.

மறுநாள் அவர்கள் மனதுக்குள் கொடி ஏற்றம் நடந்தது. அதற்கான வேத மந்திரங்கள் சொல்லப்பட்டன.

நூற்றி எட்டு வெள்ளிக்குடங்களும், நூற்றி எட்டு வலம்புரி சங்கும் குறிப்பிட்ட முறையில் வைக்கப்பட்டன.

''நாளை மறுநாள் கும்பாபிஷேகம். அன்று சிவலிங்கத்திற்கு சொர்ண பந்தனம் செய்யப்பட்டது. எல்லா விக்ரஹங்களும் மருந்துக் கலவை ஊற்றப்பட்டு அசையாமல் நிறுத்தப்பட்டன.

காஞ்சி மாநகரில் அரசர் அன்று நடுநிசி வரை கோயிலில் இருந்தார். கோயிலின் எல்லா பக்கங்களும் தீப்பந்தங்கள் ஜெகஜோதியாய் எரிந்தன.

ஸ்தபதிகள் அரசரை ஓய்வெடுக்க வற்புறுத்தினார்கள். அரசர் கோயில் வாசலுக்கு வந்தார். தரையில் சால்வை விரித்தார். தலைக்கு கருங்கல் வைத்துக் கொண்டார். சிவனை தொழுதுவிட்டு தூங்கினார்.

எந்த கோயிலிலும் இல்லாத ஒரு அற்புதமான அம்சம் அவர் கைலாசநாதர் கோயிலில் இருக்கிறது. அந்த கோயிலைச் சுற்றி ஒடுக்கமான சுற்றுப் பிரகாரம் இருக்கிறது. அதற்கு மரண வாசல் வழியாகப் போய், ஜனன வாசல் வழியாக வெளியே வரவேண்டும்.

இந்த ஸ்தபதிகள் அற்புதமானவர்கள் மரணத்துக்குள் தொபேர் என்று குதிக்க வேண்டும். ஒருவர் மட்டுமே போகும் வழி. ஒரு கைவிளக்கை எடுத்துக் கொண்டு



இரண்டு பக்கமும் உயர்ந்த கருங்கல் சுவர் வழியே நடக்க வேண்டும்.

அந்த கருப்பு கருங்கல்லும், கைவிளக்கு ஒளியும் விநோதமான ஒரு நிலையை கொடுக்கும். நேரே போய் வலப்பக்கம் திரும்பி மறுபடி வலப்பக்கம் திரும்பினால், வெளிவாசல் வரும். அது ஜனன வாசல். அந்த வாசலில் படுத்து தவழ்ந்து முழங்கையை சேர்த்து ஊன்றி நகர்ந்து, நகர்ந்தபடியே திரும்பி வெளியே வர வேண்டும்.

யோனியிலிருந்து வரும் குழந்தை போல, அந்த நகர்வு தோற்றமளிக்கும். ஒரு உணர்வைக் கொடுக்கும். மூச்சுப் பிடித்து. நின்று, திரும்பி வெளியே வரும்போது. அப்பாடா என்றொரு நிம்மதி கிடைக்கும்.

பல பிறவி எடுக்க வேண்டிய மனிதருக்கு இதை ஒரு முறை வலம் வந்தால் ஒரு பிறவி போயிற்று.

தினசரி பலமுறை வலம் வந்து பிறவிகளை குறைக்க வேண்டும்.

அரசன் ராஜசிம்மன் கனவுக்குள் மரணவாசலில் குதித்தான். அவன் கையில் கை விளக்கு தோன்றியது. யார் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. கேட்கவும் தோன்றவில்லை. அவன் நடக்கத் துவங்கினான்.

இப்படி ஒரு அற்புதமான கோவில் கட்ட இதுவரை யாருக்கும் தோன்றவில்லை. இது முழுக்க முழுக்க பல்லவர் மூளை. பாரத்வாஜ கோத்திரத்தின் தனி புத்தி. இந்த கெட்டிக்காரத்தனம் வேறெந்த முதாதையருக்கும் வரவில்லை. ராஜசிம்மனுக்குதான் வந்திருக்கிறது.

எத்தனை பஞ்சம் வந்தாலும் எவ்வளவு பகைவர் எதிர்ப்பு வந்தாலும், அவைகளை எல்லாம் தாண்டி, இந்த கோயில் பணியை நான் நடத்துகிறேன். அரசி

ரங்கபதாதை இதற்கு என் பெயர் வைக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

உள்ளே இருப்பவர் கைலாசநாதர்தான். ஆனால் இந்த கோயிலுக்கு பெயர் ராஜசிம்மகிரஹம் என்கிறாள்.

ஏன் பிரகாரம் போய்க்கொண்டே இருக்கிறது. ஏன் வலப்பக்கம் வரவில்லை.

அரசன் பயந்தான். வேகமாக ஓடினான். இரண்டு பக்கமும் மதிற்சுவர்கள் உடைய ஒரு சிறிய சந்தில் முடிவில்லாது ஓடிக்கொண்டே இருந்தான். கை விளக்கை கீழே போட்டு விட்டு அப்பா என்று கத்தினான்.

எதிரே ஒளி வெட்டியது, ஒளியிலிருந்து குரல் தோன்றியது.

''அரசே''

''அப்பா''

அந்த குரல் சிரித்தது.

''உன் கும்பாபிஷேகத்தை ஒரு நாள் தள்ளி வைத்துக் கொள்ளேன்.''

''நாளை என்று முடிவு செய்துவிட்டார்கள் அப்பா.''

''நாளை எனக்கு வரவியலாது ராஜசிம்மா, அன்று நான் திருநின்றவூரில் பூசலார் கட்டும் கோயிலில் குடி புகவேண்டும். எனவே உன் கும்பாபிஷேக நாளை மாற்றி வைத்துக் கொள்.''

அரசனுக்கு ஒளி வலப்பக்க வழி காண்பித்தது. மறுபடி வலப்பக்கம் சுழன்று நகர்ந்தது. அந்த ஒளி யோனி வாசலை அடையாளம் காட்டியது. மன்னன் அந்த சிறிய சந்தில் தவழ்ந்து, எக்கி எக்கி நகர்ந்து திரும்பினான். வெளியே வந்து விழுந்தான். அழுதான்.



''அரசே அரசே'' ரங்கபதாதை உலுக்கினாள்.

அரசன் விழித்த பிறகும் வாய்விட்டுக் கதறினான்.

''என் கோயில் முக்கியமில்லை. என் கோயில் முக்கியமில்லை. நாளை இறைவன் இங்கே வரப் போவதில்லை.'' பித்துப் பிடித்தவன் போல கத்தினான்.

எல்லா தீ பந்தங்களும் ஏற்றப்பட்டன. அமைச்சர்களும், ஸ்தபதிகளும், மருத்துவர்களும், அந்தணர்களும் அரசனை சூழ்ந்து கொண்டார்கள். அரசன் பரவசத்தோடு விஷயம் சொன்னான். மறுபடி அழுதான்.

''எது திருநின்றவூர்? யார் அந்த பூசலார்?'' ஒருவருக்கொருவர் வினவினார்கள்.

அரசன் சட்டென்று தலையை உதறிக் கொண்டான். முகம் கழுவினான்.

''குதிரைகளையும், தேர்களையும் தயார் செய்யுங்கள். பரிசுப் பொருட்களோடும். உணவுப் பொருட்களோடும் யானைகள் பின்னே வரட்டும். நாம் திருநின்றவூர் இப்போதே பயணப்படுகிறோம்.''

நூற்றுக்கணக்கில் பந்தங்கள் பொருத்தப்பட்டன. வீதி வெளிச்சமாகியது. மன்னன் முன்னே செல்ல, கருப்புத் தலைப்பாகை குதிரைப் படைகள் அவனை சுற்றிக் கொண்டு சென்றன.

''இறைவனே தேதியை தள்ளி வைக்க சொல்லி விட்டானே. இந்த கும்பாபிஷேகம் நடைபெறுமா?'' அந்தணர்கள் கவலைப்பட்டார்கள். ஸ்தபதிகள் அயர்ந்து போய் உட்கார்ந்தார்கள்.

அரசி ரங்கபதாதை இன்னொரு குதிரையில் ஏறி, அரசனின் முகத்தை கவலையோடு பார்த்தபடி வந்தாள். அப்படி ஒரு தோற்றத்தை அவள் கணவனிடம் இதுவரை

பார்த்ததே இல்லை. முகத்தில் பித்து பிடித்திருந்தது கண்கள் வெகுதூரம் எதையோ பார்த்துக் கொண்டு இருந்தன. வாய் எதையோ இடைவிடாது முணுமுணுத்துக் கொண்டு இருந்தது.

உணவு பற்றியோ, உறக்கம் பற்றியோ எந்த கவலையும் படாது, அந்த இருளில் திருநின்றவூர் நோக்கி குதிரை விரைந்து கொண்டிருந்தது.

விடியல் நேரத்தில் ரங்கபதாதை தன் குதிரையை அரசனின் குதிரைக்கு குறுக்கே செலுத்தி நிறுத்தினாள்.

''ஊருக்குள் போவதற்கு முன்பு கை கால்கள் சுத்தம் செய்துவிட்டு, குளித்துவிட்டுப் போகலாம். சுடு நீர் தயார் செய்யச் சொல்கிறேன். அதற்கு முன் கனவில் என்ன கண்டீர்கள் என்று மறுபடி சொல்லுங்கள்.''

''கண்களுக்கு எதிரே பெரிய ஒளி. ஆனால் இறைவன் பேச்சும், சிரிப்பும் இன்னும் தெளிவாகஞாபகமிருக்கிறது.''

''திருநின்றவூர் அருகில்தானே. அங்கு கோயில் கட்டப்படுவது ஏன் உங்களுக்கு தெரியவில்லை?'' அரசன் மந்திரிகளை நோக்கி சீறினான்.

''அது சற்று உள்ளடங்கிய ஊர்.'' யாரோ பதில் சொன்னார்கள்.

''அதனால் அங்கு நடப்பது தெரியாதா? கோயிலை ரகசியமாக கட்ட முடியுமா? கோயில் கட்டுவதே உங்களுக்கு தெரியவில்லை என்றால், எதிரிகள் படைதிரட்டுவது எப்படி தெரியும்?''

''அரசே, திருநின்றவூரிலிருந்து காஞ்சீ மாநகருக்கு ஆடுகள் வரும். அவை கொழுத்த ஆடுகளாக இருக்கும். கயிறுகள் வரும். அவை பச்சை வாசனை அடிக்கும். 'ஊர் பற்றி விவரம் கேட்டபோது, குளத்தில் நீர் வற்றாதிருக்கிறது. கேணிகளில் நீர் இறைக்க இறைக்க ஊறுகிறது. செந்நெல்லும், கரும்பும் நன்கு விளைகின்றன. கீரைகளுக்கும் காய்கறிகளுக்கும் பஞ்சமில்லை என்று சொல்கிறார்கள். ஒரு முறை போய் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் வேலை பளு நகரவிடவில்லை.''



''இதை எனக்கு தெரிவித்திருக்க வேண்டும்.'' அரசன் சீறினான்.

''பஞ்ச காலத்தில் ஒரு இடம் செழிப்பாக இருக்கிறது என்றால், அங்கு ஏதோ நல்ல விஷயம் நடக்கிறது. என்று தானே அர்த்தம். எனக்கு இதை நீங்கள் நிச்சயம் தெரிவித்திருக்க வேண்டும்.''

அரசி ரங்கபதாதை அரசனை சமாதானம் செய்து குளிகக வைத்தாள்.

குளித்து துவட்டிக் கொள்ளும் போதே, சுடச்சுட ஒரு சொம்பு பால் கொடுத்தாள்.

கிழக்கே விடி வெள்ளி உதித்தது. அவர்கள் மறுபடி பயணப்பட்டார்கள். அகலமான ஒரு ஆறு தாண்டினார்கள். திருநின்றவூருக்குள் நுழைந்தார்கள்.

ஊர் அப்போதுதான் விழித்து எழுந்தது. குதிரைகள் சப்தம் கேட்டு விளக்கு கொளுத்தினார்கள். கதவு திறந்து வெளியே வந்தார்கள்.

''அரசர் வந்திருக்கிறார். ஊர் தலைமையை அழைத்து வா.''

குளக்கரையில் அரசன் உட்கார்ந்து கொள்ள, அதிகாரிகள் ஊர் மக்களை விரட்டினார்கள்.

''மன்னா, கண்ணுக்கெட்டிய வரை பசுமை. திருநின்றவூர் எல்லைவரை நல்ல விளைச்சல். இது குளத்

துப் பாசனம். குளத்தை ஒட்டிய கேணிப் பாசனம். பகல் முழுவதும் ஏற்றமும், கவளையும் மாற்றி மாற்றி அடிக்கிறார்களா. நீர் குறைவதே இல்லையாம்.''

''கோயில் பற்றி விசாரித்தீரா'' மன்னர் கேட்டார்.

''விசாரித்தேன். மலங்க மலங்க விழிக்கிறார்கள். இங்கு கோயிலே கட்டப்படவில்லை. அதற்கான எந்த அறிகுறியும் இல்லை. ஆள் உயர கருங்கல் ஒன்றுகூட இல்லை ''

''இறைவன் கற்றளி என்று சொன்னானே.''

''இல்லை மன்னா ஏதோ தவறிருக்கிறது,''

''இறைவன் பொய் சொல்வானா. பூசலார் யார் என்று விசாரியுங்கள்.''

''விசாரித்து விட்டேன். அவர் ஒரு அந்தணர், தற் சமயம் அவர் வீட்டில் இல்லை. விடிவெள்ளிமுளைத்ததுமே இலுப்பைக் காட்டிற்கு போய்விட்டார் என்று அவர் வீட்டிலுள்ள ஒரு பையன் சொன்னான். அவன் பெயர் சதாசிவநம்பி. அவனை உங்களுக்குத் தெரியும். பூசலாருக் காக உணவு தயாரித்துக் கொண்டிருக்கிறான். இலுப்பைக் காட்டுக்கு பூசலாரை அழைத்து வர ஆள் ஆனுப்பியிருக் கிறேன்.''

''என் சிவனே'' அரசன் கூவினான்.

''பூசலாரை இங்கு அழைத்து வர வேண்டாம். நாம் அவரிடம் போவோம். குதிரைகளை இங்கேயே கட்டிவிட்டு நம் படைகளை அமைதியாக வரச் சொல்.''

அரசன் கிளம்பினான். படைகள் பின் தொடர்ந்தன.

சதாசிவநம்பி வேறு வழியாய் பூசலாரிடம் போய் உணவுப் பாத்திரத்தை வைத்தான்.



''இன்று உணவு தயாரித்தாயா. கடவுளே. எதற்கு, இன்று முழுவதும் நான் விரதம். இரவு வரை எதுவும் சாப்பிட மாட்டேன். இன்று கும்பாபிஷேகம் என்பதை மறந்துவிட்டாயா?''

''ஐயன், அரசர் ராஜசிம்மன் வந்திருக்கிறார்.''

அரசருக்கும் அழைப்பில்லாமல் கும்பாபிஷேகம் செய்யலாமா. நான் வணக்கத்தோடு ஓலை அனுப்பி விட்டேன்.''

''இல்லை. அரசர் நேரே வந்திருக்கிறார்.''

''எவ்வளவு பெரிய கற்றளி, இதற்கு மந்திரிகளையா அனுப்புவார். நேரேதான் வருவார்.''

''ஐயன் நீங்கள் மயக்கத்தில் பேசுகிறீர்கள். நிஜ மாகவே வந்திருக்கிறார்.''

''வரட்டும். நானும் நிஜமாகவே கும்பாபிஷேகம்...'', பூசலார் திகைத்தார்.

''என்ன சொல்கிறாய் சதாசிவநம்பி?''

''இலுப்பை காட்டிற்கு வெளியே நாநூறு பேர் கொண்ட படை வந்திருக்கிறது. மந்திரிகளும், சேனாதி பதிகளும் அரசன் ராஜ சிம்மனையும் அரசி ரங்கபதாதை யையும் சுற்றிக் கொண்டு நிற்கிறார்கள்,''

பூசலார் திடுக்கிட்டு எழுந்தார்.

சூரிய வெளிச்சம் காட்டுக்குள் நுழைந்தது. அரசன் அவரை நோக்கி கை கூப்பியபடி வந்தான்.

''நான் ராஜசிம்மன் இந்த பல்லவ தேசத்துஅரசன்.'' தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''தெரியும். தெரியும். தெரியும்.'' பூசலார் பதட்டத் தோடு கை கூப்பினார்.

'' நேற்று இரவு ஒரு கனவு. நான் கட்டும் கைலரச
நாதர் கோயில் வாசலில் படுத்துக் கொண்டிருக்கும் போது
ஒரு கனவு, கனவில் இறைவன் ஒளியாகத் தோன்றினான்.

தெளிவான தமிழில் பேசினான். என் கோவில்
கும்பாபிஷேகத்தை தள்ளி வைக்க சொல்லிட்டான்.
நீங்கள் கட்டும் கோயிலுக்கு இன்று கும்பாபிஷேகமாமே
இங்கு இறைவன் வந்து அமரப்போகிறானாமே இறைவன்
மிகுந்த ஆவலோடு எனக்கு இதைச் சொன்னான்.

ஐயா, கோவில் எங்கே கட்டுகிறீர்கள். எப்போது
கும்பாபிஷேகம். நானும் கலந்து கொள்ள அனுமதி அளிப்
பீர்களா?'' அரசன் கை கூப்பினான்.

பூசலார் பேச்சற்று திகைத்துப் போனார்.

''நம்பி, நம்பி'' என்று அவன் தோள்களைப்
பிடித்துக் கொண்டார்.

சதாசிவநம்பி பூசலாரை தாங்கிக்கொண்டான்.
''கோயில் எங்கிருக்கிறது. ஐயா.'' அரசன் மறுபடி
கேட்டான்.''

''கோவிலா? கோவில் மனசுள் இருக்கிறது.'' பூசலார்
நெஞ்சை தட்டிக் காட்டினார்.

''புரியவில்லையே.''

''உண்மையில் கோயில் கட்ட என்னிடம் காசு
இல்லை. ஆனால் ஆவல் உண்டு பல்லவ தேசத்தின்
பஞ்சத்தை நீக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டு. நான்
மனசுக்குள்ளேயே படிப்படியாய் பல தினங்களாய் இறை
வனுக்கு கோயில் கட்டிக் கொண்டிருக்கிறேன்.''

''உங்களை எங்கோ பார்த்தது போல் இருக்கிறதே.''

''உங்களிடம் கோயில் கட்ட நிதி கேட்டேன்.''

''நான் ஏதும் தரவில்லையா?''



''ஐம்பது பொற்காசுகள் கொடுத்தீர்கள். அன்றைய
தினத்திலிருந்து தான் கோயில் பணி துவங்கியது. அந்த
பொற்காசுகளை எல்லா வர்க்கத்தினருக்கும் தானம் தந்
ததுதான் முதல் பூஜை.''

''ஒரு கல் கூட வாங்கவில்லையா?''

''இல்லை''

''கோயில் கட்டுவதில் ஒரு விஷயம் கூட விடவில்
லையா? கோயில் எத்தனை உயரம்?''

''நூறு முழம். அதே போல் அகலமும் நீளமும் நூறு
முழம். நான்கு பிரகாரம். எதிரே நந்தி மண்டபம்.
உள்ளே சிவலிங்க ஸ்தாபனம். பிரும்ம பீடம் சதுர வடி
வம். மொத்த கோயிலும் செவ்வகம். கல் மீது கல்
வைத்து, கல்லின் அடிப்புறமும், ஆண் குறியும், மேலே
பெண் குறியும் செய்து ஒன்றையொன்று பொருத்தி, நடுவே
சாந்து இட்டு, அசையாது நிறுத்தி, கோட்டை போல்
கட்டியிருக்கிறேன்.

கருங்கல் துவஜ ஸ்தம்பம். பெரிய பலிபீடம். சிறிய
கோபுரம். பெரிய விமானம்.'' அவர் விளக்கிக்கொண்டே
போனார். செலவுகளை சொன்னார். பிரச்சினைகளைப்
பேசினார்.

அரசன் எதிரே உட்கார்ந்து கண்மூடிக் கேட்டுக்
கொண்டிருந்தான்.

''இதோ கலசங்கள் கிளம்பிவிட்டன மன்னா. நீங்
களும் ஒரு கலசம் எடுத்துக் கொள்ளுங்கள்.''

அரசன் கண்மூடி கற்பனை செய்தான். சவுக்குகட்டை
ஏணியில் ஏறினான்.

அவரிடம் இருந்து கும்பாபிஷேகத்திற்கான மந்திரங்கள் ஓதும் சப்தம் எழுந்தன.

இதோ மேலே கருடன் வட்டமிடுகிறது. புனித நீரை நான் கலசத்தின்மீது ஊற்றுகிறேன். நீங்களும் ஊற்றுங்கள்.''

இலுப்பைக் காட்டில் நானூறு பேரும் உட்கார்ந்து அவர் பேசுவதை அமைதியாய் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

பெரிய தீபமேற்றி கலசத்திற்கு சுற்றிக் காட்டப்பட்டது. பூக்கள் சொறியப்பட்டன. கலசத்தில் விழுந்த நீரைப் பிடித்து, அவர் அரசன்மீது தெளித்தார். எல்லோர் மீதும் தெளித்தார். பல்லவ நாடு முழுவதும் அந்த நீர் போகவேண்டுமென்ற வெறியோடு தெளித்தார்.

எல்லா இடத்திலும் அந்த புனிதநீர் விழுந்து பூமி குளிர்ந்து, பயிர்கள் செழிக்கவேண்டுமென்று தெளித்தார்.

மக்கள் சந்தோஷமாக வாழ வேண்டுமென்று தெளித்தார், பஞ்சம் பறந்தோட வேண்டுமென்று தெளித்தார்.

வெறும் கைகளை வீசி வீசி நன்கு தெளித்தார்.

எல்லோர்மீதும் சடசடவென்று தூறல் விழுந்தது. அரசன் மெல்ல நிமிர்ந்து பார்த்தான். மேலே கருமேகம் சூழ்ந்திருந்தது.

''அரசே, மழை பெய்கிறது. மழை பெய்கிறது.'. தளபதிகள் உரக்க கத்தினார்கள்.

கருமேகம் கீழறங்கியது. பலத்த மழையாய் பெய்தது.

அரசி ஒண்டிக் கொள்ள நகர்ந்தபோது, அரசன் அவளை தடுத்து நிறுத்தினான்.



''இது மழையல்ல. சிவன் அருள். கடவுள் ஆசீர்வாதம். இறைவன் திருநின்றவூரில் இறங்கிவிட்டான் என்று அர்த்தம்.

கோயில் கட்டுவது அரசனுடைய வேலை என்று சொன்னேன். அந்தணர் வேலையில்லை என்று சொன்னேன். பொருள் வேண்டுமென்று ஏளனம் செய்தேன். பொருளால் செய்த கோயிலில் இறைவன் வரவில்லை. சத்தியமாய் ஒருவர் நினைக்க, அங்கு இறைவன் வந்துவிட்டான், எண்ணம் தூய்மையாக இருக்க, அங்கு இறைவன் குடியேறுகிறான்.

பஞ்சம் நீக்க கோயில் கட்டத் துவங்கி, அது வளர்ந்தவுடன் ராஜ சிம்மேஸ்வரம் என்று என் பெயர் வைத்துவிட்டேன்.

தன்னை முன்னிலைப்படுத்திக்கொள்ளும் இடத்தில் இறைவன் வருவதில்லை. என் நோக்கம் வழி தவறிப் போயிற்று. ஆனால் பூசலார் நோக்கம் வழி தவறவில்லை. அதனால்தான் இறைவன் மழையாக இங்கு பெய்கிறான்.''

மழை வலுத்துப் பெய்தது. எல்லோரும் ஆனந்தமாய் நனைந்தார்கள்.

''ஐயா இன்று நாள் நன்றாக இருக்கிறதா.'' அரசன் கைகூப்பிக் கேட்டான்.

''முகூர்த்தம் சரியா.'' மறுபடி வினவினான்.

''சரி'' பூசலார் சொன்னார்.

''என்னோடு வந்து திருநின்றவூரில் நல்ல நிலம் காட்ட வேண்டும்.''

இலுப்பை காட்டைவிட்டு வெளியே வந்த பூசலார் மழையில் நனைந்தபடி நிலம் காட்டினார். அரசன் உடைவாள் உருவி, ''தென்னாடுடைய சிவனே போற்றி''

என்று வாளால் பூமியை குத்தினான். மூன்று முழங்கை ஆழமுள்ள குழி தோண்டினான்.

பத்தாவது நாள் கருங்கல்லில் லிங்கம் வடித்து, பாலாலயம் அமைத்தான்.

''ஐயன் ஹிருதயத்தில் இருந்த ஈசன் என்பதால் திருநின்றவூரில் ஈஸ்வரனுக்கு ஹிருதயாலீஸ்வரர் என்று பெயர் வைக்கிறேன். அன்னை பாலாம்பிகைக்கு தனி சன்னதி அமைக்கிறேன். நடராஜ பெருமானுக்கும் தனி விமானம் அமைக்கிறேன்.''

திருநின்றவூரில் பூசலார் கட்டிய மனக்கோயில் இல்லை. பூசலாரை கொண்டாட ராஜசிம்மன் கட்டிய ஹிருதயாலீஸ்வரர் கோயில் இன்றும் இருக்கிறது.

அந்த கோயில் கட்டிவிட்டுதான் ராஜசிம்மன் காஞ்சி புரத்திற்கு படைகளோடு போனான். அதுவரை அந்த சிவநேசன் திருநின்றவூர் ராமர் மண்டபத்திலேயே தங்கி இருந்தான்.

அதற்குப் பிறகே, கைலாசநாதர் கோயிலுக்கு பூசலாரை அழைத்துப் போய் கும்பாபிஷேகம் செய்தான்.

இந்த கலிகாலத்தில் இறைவனுடைய குரலை கேட்டவன் என்று கல்வெட்டில் தன்னைப் பற்றி பொறித்துக் கொண்டான்.

காஞ்சியில் அவனுடைய கைலாசநாதர் கோயிலும், திருநின்றவூர் ஹிருதயாலீஸ்வரர் கோயிலும் இன்னும் இருக்கின்றன.

ஹிருதய நோயை நீக்க, ஹிருதயாலீஸ்வரரை வேண்டிக் கொள்ளலாம் என்றும், உடனே நோய் தீரும் என்றும் சொல்லப்படுகிது.

ஊரும், கோயிலும் மிக அழகாக இருக்கின்றன.



ஒரு தமிழ் பண்டிதர் அறங்காவல் நிர்வாகியாக இருந்து கோயில் பணிகளை நடத்திக் கொண்டு வருகிறார்.

காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயில், திராவிட கட்டடக்கலைக்கு ஒரு எடுத்துக்காட்டு, அந்த கோயிலில் மரண வாசல் உள்ளே புகுந்து, பிரகாரம் சுற்றி, ஜனன வாசல் வழியாக வருவது, நாம் எடுக்கப் போகின்ற ஒரு பிறவியை குறைக்கிறது என்பது நம்பிக்கை.

சிதைந்து போனாலும் கைலாசநாதர் கோயில் சிற்பங்கள் உயிருள்ளவை.

மிகச் சிறந்த ஒரு பல்லவ அரசன் அங்கு முன்னும், பின்னும் நடமாடியிருக்கிறான். மிக அற்புதமான கலைஞர்கள் அங்கே வாழ்ந்திருக்கிறார்கள். நாகரீகம் மிகுந்த ஒரு ஊர் அங்கே இருந்திருக்கிறது என்ற நினைப்போடு உட்கார்ந்தால், அந்த இடத்தை விட்டு நகர மனம் வராது.

எண்ணம் வேறு செயல் வேறு அல்ல எண்ணமே செயலின் முதல் வடிவம். எண்ணம் தூய்மையாக இருந்தால், செயலும் தூய்மையாக இருக்கும். தூய்மையான எண்ணத்தில் இறைவனுடைய இருப்பு நிச்சயம் இருக்கும்.

ஏனெனில், மனம் மிக வலுவானது. சில சமயம் செயலைவிட எண்ணம் அற்புதமானது. பூசலாரைப்பற்றி மறுபடி யோசிக்க இந்த எண்ணம் தெளிவாகும்.

முற்றும்